
# சுடர்

CHUDAR

சித்திரை மலர்
1977

விலை ரூபா 1-50



# மன்சூர்


எங்கும், எல்லோரும்,
எப்போதும் பேசிக்கொள்வது

# மன்சூர்

எடுப்பாக, துடிப்பாக, மிடுக்காக,
கவர்ச்சியாக, எழிலாகத் தோற்றம்
அளிப்பதற்கு ஏற்ற ஆண், பெண்,
சிறுவர்களினதும் மிக கவர்ச்சியான
துணிவகைகளுக்கும், அழகுப் பொருள்
களுக்கும் மிகச் சிறந்த இடம்.

# மன்சூர்

121 1/1, முதலாவது மாடி,
பாங்ஷால் வீதி,
புறக்கோட்டை
கொழும்பு - 11



Luxuriant, Beautiful, Selections of Modern
Designs in

# MUNSSOOR

121 1/1, First Floor,
Bankshall St, Pettah, Colombo-11

காசி

ஆனந்தன்

எழுதிய

தித்திக்கும்

கவிதை

அடுத்த

பக்கம்

புரட்டுங்கள்



# வாழ்கின்றாய்

கனியை வெறுக்கும் அணிலும் உண்டோ?
பனியை வெறுக்கும் பசும்புல் உளதோ?
கொட்டிக் கிடக்கும் அரிசியை எறும்பு
விட்டு நீங்குமோ? வெறுத்துப் போமோ?
கிளியை வெறுக்குமோ மாந்தர் விழிகள்?
ஒளி நிலாவை உலகு வெறுக்குமோ?
இனியாய் தமிழே! இனியாய் தமிழே!
நினையார் வெறுப்பர்? நீயே சொல்லடி!
மண்ணை வெறுத்த துறவியர் கூட
நின்னை வெறுத்தா ரல்லர் கண்டேன்!
பவணந்தி எனும் பௌத்தத் துறவியும்
சமணம் ஈன்ற இளங்கோ அடிகளும்
வித்தகன் சைவ விபுலா நந்தனும்
தித்திக்கும் தேம்பாவணிப் புலவன்
ஏசு மதத்தன் வீரமா முனிவனும்
தூசென உலகை வெறுத்த துண்மை!
இச்சை உலகில் எழுந்த வெறுப்பில்
பச்சைத் துறவியர் ஆனஇப் புலவர்
தமிழே! எழிலே! நினை வெறுத்தாரா?
அமிழ்தே! உயிரே! அன்பே! சொல்லடி!
தென்றலும் பூவும் நிலவும் தேனும்
ஒன்றென நிலவும் தென்றமிழ்ப் பாவாய்!
கண்மணி! இன்னும் கேளடி கண்ணே!
நினை வெறுத்தறியார் நின் காதலுக்காய்
இனிய தம் வாழ்வும் வெறுத்தனர் கண்டாய்!
கூழும் உண்ணார் துயிலும் கொள்ளார்
நாளும் நின்னெழில் நாடி மயங்குவார்
எத்தனை புலவர் இப்புவி மண்ணில்
பித்தராய் மாண்டார்! பேசடி தேவி!
காய்ந்தும் வறுமை கண்டும் மெலிந்தும்
தேய்ந்தும் மடிந்தும் தீர்ந்தோர் எத்தனை!
பழந் தமிழ்ப் புலவரும் பாணரும் தம்முயிர்
இழந்து வறுமையில் இடுகாடுற்றதும்
வல்லான் பாரதி வண்டமிழ்ப் புலவன்
பொல்லா ஏழ்மையில் அழுந்திப் போனதும்
பேரெழுத்தாளன் புதுமைப் பித்தன்
பார வறுமையில் பாடை பார்த்ததும்
இவையனைத்தும் நின்றன் இன்னெழில்
புவி அகத்தே புரிந்த கூத்தடி!
ஓ! என் தமிழே! ஓ! என் தமிழே!
நீ.என் கணிப்பில் நிகரிலாய் கண்ணே!
எழிலுக் கெல்லாம் எழில் நீ எனலால்
புகழுக் கெல்லாம் புகழ் நீ கொண்டாய்!
நின்னை வெறுத்திடாரும் நின்னெழில்
தன்னில் மயங்கித் தமை வெறுத்தாரும்
வாழ்கின்றார் இங்கெனலால்
வாழ்கின்றாய் நீ! வாழிய நீடே!

சுடர்
CHUDAR
(கலை இலக்கியத் திங்களிதழ்)

வள்ளுவராண்டு 2008
சித்திரை — 1977
சுடர் — மூன்று
ஒளி — ஒன்று
ஆரம்பம்: சித்திரை 1975

வெளியிடுபவர்கள்:
சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்
194, ஏ. பண்டாரநாயகா வீதி,
கொழும்பு-12.
ஆசிரியர்:- கோவை மகேசன்


# மூன்றாவது ஆண்டில் சுடர்

அன்புமிக்க சுடர் வாசகர்களே!

உங்கள் கரங்களில் தவழும் இந்த இதழி லிருந்து 'சுடர்' தான் தொடக்கிய இலக்கியப் பயணத்தின் மூன்றாவது ஆண்டில் காலடி எடுத்துவைக்கிறது. கடந்த இரண்டு ஆண்டுக ளாக சுடர் மீது நீங்கள் கொட்டிவரும் கொள் ளையன்புக்கும் — அதன் பரிசுத்தமான ஆரோக் கியவளர்ச்சியில் காட்டிவருகின்ற அக்கறைக் கும் — இந்த நேரத்தில் எமது இதயபூர்வ மான நன்றியை தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

சித்திரை மலரை — மேலும் சிறப்புடனும் இன்னும் அதிக பக்கங்களுடனும் வெளியிடத் தான் நாம் திட்டமிட்டிருந்தோம். ஆயினும், ஈழத்தில் தமிழையும், தமிழ் இனத்தையும் இமயம் போற்தாங்கிநிற்கும் மூதறிஞர் தந்தை செல்வா அவர்களுக்கு ஏற்பட்ட திடீர் உடல்நலிவு நம்மையெல்லாம் செயலிழக்கச் செய்து விட்டது. தமிழினத்தை தாங்கிநிற்கும் அந்தப் பெரியவர் படுத்த படுக்கையிலிருக்கும் போது — அவர் உடல் நலம் பெற்று வாழ வேண்டுமென்று தமிழ்ச் சமுதாயம் முழு வதுமே கண்ணீர்விட்டுக் கதறியழும்போது — 'மலர்' பற்றிய சிந்தனையே எம் மனதை விட்டு ஓடிவிட்டது. இருந்த போதிலும் — நெஞ்சத் தில் குமுறியெழுகின்ற வேதனைக்கு மத்தியி லும் — சுடர் வாசகர்களை ஏமாற்றிவிடக்கூடா தென்பதற்காக எம்மால் இயன்றவரையில் மிகவும் குறுகிய காலத்துக்குள் — சுடர் வசந்த மலரைத் தயாரித்து உங்கள் திருமுன் படைத் திருக்கிறோம் —

நம்மையெல்லாம் ஆளாக்கி — நம் இனத்தை கட்டி யெழுப்பிய தமிழீழத் தந்தை மூதறிஞர் செல்வாவின் அழகொளிரும் திருவு ருவத்தையே அட்டையில் வெளியிட்டிருக்கி றோம்!

சுடர், தான் மேற்கொண்டிருக்கும் இலக்கி யப் பயணத்தில் குறுக்கே வரக்கூடிய தடை களையும் இடர்களையும் முறித்தெறிந்து, வாச கர்களாகிய உங்கள் இதயங்கள் தரும் ஆதர வுடன் தொடர்ந்து முன்னேறிச் செல்லும் என்ற உறுதிமொழியையும் இச்சமயத்தில் தெரிவித்துக்கொள்ளுகிறோம் —

சுடரை நீங்கள் படித்தால், சுவைத்தால் மட்டும் போதாது — ஒவ்வொரு சுடர் வாசக ரும் குறைந்தது பத்து புதிய வாசகர்களையா வது சுடருக்கு அறிமுகப்படுத்தித் தருவது சுடரின் வளர்ச்சியில் ஆர்வம் காட்டிவரும் ஒவ்வொரு வாசகரினதும் கடமை யென்பதை இச்சமயத்தில் ஞாபகப்படுத்தவும் விரும்பு றோம்.

சரி, இனி மலர் மணம் நுகருங்கள் — அது பற்றிய உங்கள் எண்ணங்களையும் எமக்கு அறிவியுங்கள்!

— 4-4-77

● *31-3-77ல் மூதறிஞர் செல்வா 79வயது நிறைவு பெற்று 80வது வயதில் காலடி எடுத்துவைத்தார்.*

# மூதறிஞர் செல்வாவுக்கு
# வெளிநாட்டு அறிஞர் சூட்டும் புகழாரம்

இலங்கை வாழ் தமிழினத்தாரின் — தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்கள் தமிழினத்தின் நன்மைக்காகப் போராடுவதிலே இருபத்தைந்து வயது இளைஞரையும் மிஞ்சி விடுகிறார். பண்பாடுடைய பெருந் தலைவர். உடல் நலிந்தும், குரல் மெலிந்தும், கைகால்களில் நடுக்கம் ஏற்பட்டும் வருந்துகின்ற நிலையிலேயும் தமிழினத்தாரின் நம்பிக்கைக்குரிய ஒரே தலைவராக அவர் இருந்து வருவது வரலாறு காணாத பெருமையாகும்.

அவரோடு பேசுகின்ற வாய்ப்பு கிடைத்த ஒவ்வொரு நேரத்திலும், அவருடைய மன உறுதியைக் கண்டு நான் வியப்படைந்திருக்கிறேன். இலங்கை வாழ் தமிழினத்தார் சோதனை மிக்க ஒரு தருணத்தை நெருங்கியிருக்கின்றனர். முன் எப்போதையும் விட இப்போதுதான் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் தலைமையை அவர்கள் உறுதியோடு பற்றிகொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றனர். செல்வநாயகனார் இன்னும் பல்லாண்டுகள் வாழ இறையருளைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

— சிலம்புச் செல்வர்
ம. பொ. சிவஞானம்

** **

உயர்திரு சா. ஜே. வே. செல்வநாயகம் எனது நண்பர். அவரது அருந்தொண்டுகளை நான் பல்லாண்டுகளாக நன்கறிவேன். உழைப்பிலே கடுமை, தொண்டிலே தூய்மை, சொல்லிலே உண்மை, உடையிலே எளிமை, வாழ்விலே நேர்மை என்றால் அது செல்வநாயகம் என்று பொருள். அதனாலேயே அவர் 'ஈழத்தின் தந்தை' என வெகு அருமையாக அழைக்கப்பெற்று வருகிறார்.

அவரது எண்ணமெல்லாம் ஒன்றே ஒன்று. அது நாடு செழித்து, மொழி வளர்ந்து மக்கள் நல்வாழ்வு வாழவேண்டுமென்பதே. இந்த ஒரே நோக்கத்திற்காக அவர் பல்லாண்டுகள் இராப் பகலாக உழைத்து வருகிறார்.

ஏறத்தாழ எங்கள் இருவருக்கும் ஒரே வயது. என்றாலும் அவர் நாட்டிற்காக, மொழிக்காக, மக்களுக்காக ஓயாது உழைத்து உருக்குலைந்து அதிக வயதானவராகவே காணப்பெறுகிறார். இலங்கையில் உள்ள தமிழ் பேசும் மக்களிற் பலர், நாடு அழிகிறதே, மொழி அழிகிறதே, வாழ்வு பாழாகிறதே என எண்ணி, எண்ணி வருந்தி உடல் நலங்கெட்டு இளைத்துப் போயிருக்கிறார்கள். அப்படிப்பட்ட இளைத்துப்போன மக்கள் பலரைக் கண்டதினாலேயே திரு. செல்வநாயகம் அவர்களின் உடலும் இளைத்துப்போய்விட்டது எனத் தெரிகிறது.

நான் இலங்கைக்கு ஏழு தடவைகள் சென்று வந்திருக்கிறேன். அவர் இல்லத்திற்கு நானும், என் இல்லத்திற்கு அவரும் வந்து போனதுண்டு. அப்போதெல்லாம் அவரது அரிய தொண்டுகளைப் பார்த்தும், கேட்டும், அறிந்து வந்திருக்கிறேன். அவற்றையெல்லாம் தொகுத்து ஒரு சொற்றொடரிலேயே கூறவேண்டுமானால் "அவர் ஒரு ஒப்பற்ற தலைவர்" எனக் கூறிவிடலாம்.

இலங்கை அரசு அவரைப் பலமுறை சிறைப்படுத்தியிருக்கிறது. அதில் ஒரு தடவை அரசின் அனுமதி பெற்றுப் பார்க்கச்சென்றிருந்தேன். அவரைச் சுற்றி இரும்புத்தொப்பிகளை அணிந்த பயங்கரமான காவலாளர்கள் சூழ்ந்துகொண்டிருந்தார்கள். அப்போதும் அவர் என்னிடம் பேசிய பேச்சுக்கள் நாடு, மொழி, இனம் பற்றியதாகவே இருந்தது. இது எனக்கு பெருவியப்பை அளித்தது.

அறிஞர் செல்வநாயகம் அவர்கள் இன்னும் பன்னெடுங்காலம் நல்ல உடல் நலத்துடனிருந்து நாட்டிற்கும், மொழிக்கும், மக்களுக்கும் நற்றொண்டு புரிந்து நல்வாழ்வு வாழ்ந்து சிறப்படைய வேண்டுமெனவும் முழுமனதுடன் வாழ்த்துகிறேன். வாழட்டும் ஈழத் தமிழகம், வளரட்டும் செல்வாவின் புகழ்!

—முத்தமிழ்க் காவலர்
கி. ஆ. பெ. விசுவநாதம்.

** **

இலங்கையில் தமிழ் மொழிக்காகவும், தமிழர்களுக்காகவும், திரு. செல்வநாயகம் ஆற்றிவரும் தொண்டு பாராட்டுக்கும், புகழ்ச்சிக்கும் உரியதாகும். இலங்கையில் தமிழுக்காகத் தனித்த ஓர் இடத்தைப் பெறுவதற்காக திரு. செல்வநாயகம் பல ஆண்டுகளாகவே பாடுபட்டுவந்துள்ளார்.

வயது மிகுந்தவராக அவர் இருந்தும்கூட, இலங்கையில் மட்டுமின்றி, தமிழ் வழங்கும் இதர பகுதிகளிலும் தமிழுக்கென ஓரிடம் பெறுவதற்குரிய தலைமைத்துவத்தை வகிப்பதில் அரிய ஓர் சின்னமாக இருந்து வந்திருக்கின்றார்.

சுயமரியாதை, சுதந்திரம் நீதி ஆகியவற்றை விரும்பும் அனைவருக்கும் செல்வநாயகம் அவர்களின் பணி வெற்றியையும், உத்வேகத்தையும் தரும் என்பதில் கிஞ்சிற்றும் அட்டியில்லை. தமிழர்களின் பண்டைக்கால நாகரீகம் எவருக்கும் இரண்டாந்தரமானதல்ல. தமிழர்கள் நீண்டகாலமாக பாதுகாத்து வந்த பண்பாடும், மொழியும் நமது நவீன சகாப்தத்தில் அனைத்துலக அந்தஸ்தைப்பெற்று சிறப்படையுமாக!

—வி. டேவிட் மலேசியா.

# நாடும் ஏடும்

ஒரு நாட்டின் எழுச்சியும் வீழ்ச்சியும் அந்தநாட்டில்வெளிவருகின்றஏடுகளிலேதான் இன்றைய ஜனநாயக யுகத்தில் பெருமளவு தங்கியுள்ளது. ஒரு நாட்டில் வெளிவருகின்ற ஏடுகளைப் பார்த்தால், அந்த நாட்டு மக்களின் மன உணர்ச்சிகள், எழுச்சிகள், மனவளம், முன்னேற்றம், அபிலாஷைகள், போன்ற வற்றை அறிந்துகொள்ள முடியும். பண்டைக் கால வாழ்க்கை முறையை எடுத்துக்காட்டும் காலக்கண்ணாடியாக அன்றைய இலக்கியங்கள் விளங்குகின்றன என்றால்— இன்றைய மக்க ளின் அபிலாஷைகளின் வெளிப்பாடாக— அந்த அபிலாஷைகளை எடுத்துக்காட்டுகின்ற காலக்கண்ணாடியாக— ஏடுகளே விளங்குகின் றன. இன்றைய ஜனநாயக யுகத்தில் எந்த ஒரு அரசையும் அழிக்கவும், ஆக்கவும் கூடிய சக்தி ஏடுகளுக்கு உண்டு. இதனால்தான் வாளைக்கண்டு பயப்படாத நெப்போலியன் கூட பேனாவைக் கண்டு தான் அஞ்சுவதாகக் குறிப்பிட்டான்.

நிக்சன் அரசாங்கத்தின் ஊழல்களை அம்ப லப்படுத்தி அவரை அமெரிக்க ஆட்சியி லிருந்து வெளியேற்றியது அமெரிக்க ஏடுகள் தாம். தற்போது இந்திரா காந்தியையும் காங்கிரசையும் இந்தியாவின் ஆட்சியிலிருந்து அகற்றியிருப்பதும் ஏடுகள்தாம். ஆக — ஏடு களின் பணியும், பொறுப்பும் மிகப் பெரியது.

ஏடுகள் சுதந்திரமாக நாட்டுக்குத் தங்கள் கடமையை செய்ய வேண்டுமென்றால்— ஏடெழுதுவோர்— அதாவது பத்திரிகை ஆசிரி யர்கள்—சுதந்திரமாக இயங்க அனுமதிக்கப் படவேண்டும். பத்திரிகை ஆசிரியனை வெறும் 'சம்பளத்துக்காக' வேலை செய்பவனாக கருதி மேலிருந்து ஒருவன், இதைத்தான் எழுது இப் படித்தான் எழுது என்று கட்டளையிட்டுக் கொண்டிருப்பானானால் ஒரு பத்திரிகை ஆசிரி யன் சுதந்திரமாக தனது கடமையை சமுதா யத்துக்கு ஆற்றமுடியாத ஒரு நிலைக்கு தள்ளப் பட்டுவிடுவான். சத்தியத்தின் அடிப்படையில் நின்று அவனால் செயற்பட முடியாமற் போய் விடும்; இந்த நிலைமையில் ஒரு பத்திரிகை ஆசி ரியன் இருப்பானானால், ஒருவேளை அவனது வயிறு நிரம்பலாமே தவிர—சமுதாயம் அவ னால் பயன்படாமற் போய்விடும்.

எனவே ஒரு பத்திரிகை ஆசிரியனுக்கு சுதந்திரமாக தனது கருத்துக்களை தெரி விக்கும் உரிமை அவசியம்; இந்த அடிப்படை உரிமைமறுக்கப்படும் இடத் தில் சுயமரியாதையுள்ள ஒரு எழுத்தாளன் கடமையாற்ற முன்வரமாட்டான். 'சம்பளத் துக்காக' மாரடிக்கும் எழுத்தாளர்கள் எழு தும் எழுத்துக்களில் ஒருபோதும் சத்தியம் இருக்காது; உயிர்த்துடிப்பும் இருக்காது!

> போற்றுபவர் போற்றட்டும்
> புழுதிவாரித் தூற்றுபவர் தூற்றட்டும்
> தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதொரு கருத்தை
> எனதுள்ளம் என்றால்
> எடுத்துரைப்பேன் எதுவரினும்
> நில்லேன் அஞ்சேன்!

என்பதே ஓர் எழுத்தாளனின்—பத்திரிகை ஆசிரியனின் இலட்சிய முழக்கமாக எந்நாளும் இருந்திடவேண்டும்.

என்னைப் பொறுத்தவரை— என்னுடைய இதுவரைகால பத்திரிகைப் பணியில்— எனது எழுத்து சுதந்திரத்தை யாரும் பறிக்க முற்பட் டதுமில்லை; நான் எனது எழுத்து சுதந்தி ரத்தை யாரிடமும் பறிகொடுத்ததுமில்லை; இந்த வகையில் நான் ஓர் அதிர்ஷ்டக்காரன் என்பதை பெருமையுடன் ஒப்புக்கொள் கிறேன்.

எழுத்தாளன் ஒருவனின் கடமையென்ன என்பதை புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் மிக வும் அழகாக கூறுகிறார்—

> ''இருக்கும் நிலை மாற்ற ஒரு புரட்சி மனப்பான்மை
> ஏற்படுத்தல் பிறர்க்குழைக்கும் எழுத்தாளர்
> கடனாம்''

சமுதாயத்தை மாற்றியமைக்கின்ற புரட்சி மனப்பான்மையை தோற்றுவித்திடு தலே மக்களுக்காக உழைக்கின்ற எழுத்தா ளன் ஒருவனின் கடமையென்கிறார் பாரதி தாதன்!

மேலும் தமிழர்களின் எழுதுகோல் செய்ய வேண்டிய வேலையென்ன என்பதையும் புரட் சிக் கவிஞர் பாரதிதாசன் உணர்ச்சியுடன் கூறுகிறார்—

கோவை மகேசன்

பொது மக்கள் நலம் நாடி
புதுக்கருத்தைச் சொல்க!
புன் கருத்தை சொல்லுவதில்
ஆயிரம் வந்தாலும்
அதற்கொப்ப வேண்டாமே
அத்தமிழர் மேன்மை
அழிப்பாரைப் போற்றுதற்கும்
ஏடுபல வாழ்ந்தால்
எதிர்ப்பதன்றோ தமிழர்களின்
எழுதுகோல் வேலை?''

என்கிறார் பாரதிதாசன். ஆம், ஆயிர மாயிரமாக அள்ளித் தந்தாலும் சமுதாயத் துக்கு தீமை பயக்கும் கருத்தை சொல்லுவ தற்கு ஒருப்படாதே; தமிழர் மேன்மையை இகழ்பவரை—தமிழ்ப் பகைவர்களை போற்றி வாழும் இழிதகை ஏடுகளை எதிர்ப்பதுதான் தமிழனின் பேனாவின் வேலையென்கிறார் பாரதி தாசன்.

சமுதாயத்திலே அடிமைத்தனத்தை எதிர்த்து புரட்சி மனப்பான்மையை தூண்டி விடவும், தமிழ்ச் சமுதாயத்தின் புல்லுருவி களின் புகழ்பாடுவோரை சாய்க்கவும் பேனா தூக்கவேண்டும் என்கிறார் புரட்சிக் கவிஞர்.

இதுமட்டுமல்ல— பேனா பிடிப்பவன்— எழுத்தாளன்— ஏடெழுதுவோன் எப்படிப் பட்டவனாக இருக்கவேண்டும்? அவன் பணி எவ்வாறு அமையவேண்டும் என்பதையெல் லாம் பாரதிதாசன் சுவைபட பின்வருமாறு கூறிச் செல்கின்றார்:

இலக்கணமும் இலக்கியமும்
தெரியாதான் ஏடெழுதல்
கேடுநல்கும்
தலைக்கணையில் நெருப்பிட்டுத்
தலைவைத்துத் துயில்வதுபோல்
பகைவனைப்போய்
நிலைப்புற்ற தமிழ் ஏட்டில்
ஆசிரியனுக்குவது
நீங்கவேண்டும்
கலைப்பண்பும் உயர் நினைப்பும்
உடையவரே ஏடெழுதும்
கணக்காயர்கள்!

என்று சொல்லும் புதுமைக் கவிஞர்— பத்திரிகாசிரியரின் பணியெப்படி அமைய வேண்டும் என்பதை பின்வருமாறு கூறுகிறார்-

தின்னினத்தான் வேற்றினத்தான்
தன் பகைவன் தன் நண்பன்
எவனாலும்
அன்னவனின் அருஞ் செயலைப்
பாராட்டுவோன் செய்தி
அறிவிப்போனும்!
சின்னபிழை ஏடெழுதும்
கணக்காயன் செய்திடினும்
திருநாட்டார்பால்
மன்னி விடும் ஆதலினால்
ஏடெழுதும் வாழ்க்கையிலே
விழிப்புவேண்டும்!

அடுத்து—வாசகர்களின்—பொதுமக்களின் கடமையென்ன என்பதையும் பாரதிதாசன் கூறுகின்றார்—

தொண்டர்படை ஒன்றமைத்துத்
தமிழ் எதிர்ப்போர்தொடர்ந்தெழுதும்
ஏட்டையெல்லாம்
கண்டறிந்தபடி அவற்றை
மக்களெலாம் மறுக்கும் வண்ணம்
கழற வேண்டும்!
வண்டு தொடர் மலர் போலே
மக்கள் தொடர் ஏடு பல
தோன்றும் வண்ணம்
மண்டுதொகை திரட்டி அதை
ஏடெழுத வல்லார் பால்
நல்கவேண்டும்!''

என்று மிகவும் தெளிவாக பத்திரிகை எப் படி இருக்க வேண்டும்— பத்திரிகை ஆசிரியன் எப்படி இருக்கவேண்டும்— பத்திரிகை படிப் போர் எப்படியிருக்கவேண்டும் என்பதை யெல்லாம் கூறிச் செல்கிறார் பாரதிதாசன்!

எனவே, நல்ல பத்திரிகைகளே—நாட்டின் கண்கள். நாட்டை—இனத்தை—சமுதாயத்தை முன்னெடுத்துச் செல்லவேண்டிய பொறுப்பு பத்திரிகை ஆசிரியர்களின் புனிதப் பணியா கும்.

மக்களுக்கு எது தேவையோ— எது நல் லதோ அதைக் கொடுத்து, அந்த வழியிலே மக்களை அழைத்துச் செல்வதுதான் பொறுப்பு வாய்ந்த பத்திரிகை ஆசிரியனின் கடமையா கும்; மக்கள் பிழையான, தீமையான வழி யிலே ஓடினால்— பத்திரிகை விற்பனை ஒன் றையே கருதி, மக்கள் செல்லும் அதே தவ றான வழியிற்தானும் ஓடாது— நின்று நிதா னித்து, மக்களை சரியான வழியில் நேரான வழியில் அழைத்துச் செல்வதே பொறுப்புள்ள எழுத்தாளனின்— பத்திரிகை ஆசிரியனின் கடமையாகும்.

இந்த வழியிலே ஏடுகளும், ஏடு நடத்து வோரும், ஏடு எழுதுவோரும் சென்றால், நாடும் இனமும், மொழியும், சமுதாயமும் தலை நிமிர்ந்து வாழும்!




1. பழமை

தமிழ் நாடு உலகின் தொன்மையான தொரு நாடு. 'தமிழ்மொழி உலகின் மிகப் பழமையான ஒரு மொழி. தமிழ் மக்கள் பதியெழுவறியாப் பழங்குடியினர்' என்ற உண்மை இளைஞர்களின் உள்ளத்தில் என்றென்றும் பதிந்திருக்கவேண்டும்.

2. பெருமை

தமிழ்நாடு உலகில் இரண்டாயிரம் ஆண்டுகள் தொடர்ச்சியாக ஒரே இனத்தவரால் ஆளப்பெற்றுவந்த நாடு. தமிழ்மொழி உலகில் உயர், தனி, செம்மொழி. தமிழ் இனம் உலகில் தனக்கென்றே ஒருபண்பாடுடைய ஒரு தனி இனம் என்ற உயர்வுகளை எண்ணி இன்றைய இளைஞர்கள் வாழ்ந்தாகவேண்டும்.

3. உணர்ச்சி

பழந்தமிழகத்தை கடல் இடைக்காலத்தில் இரண்டாகப் பிரித்திருந்தும் மொழி நம்மை ஒன்றுபடுத்திக்கொண்டிருக்கிறது என்ற உண்மையை இன்றைய இளைஞர்கள் என்றென்றும் மறவாதிருக்கவேண்டும்.

4. ஒழுக்கம்

ஒழுக்கம் உயர்வுதரும், ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை. ஒழுக்கம் உயிரினும் சிறந்தது என்ற வள்ளுவர் நெறி நின்று ஒவ்வொரு இளைஞனும் ஒழுகியாகவேண்டும்.

5, உடைமை

அன்புடைமை, அறிவுடைமை, அருளுடைமை, அடக்கமுடைமை, ஆள்வினையுடைமை ஒழுக்கமுடைமை, ஊக்கமுடைமை பொறையுடைமை, நாணமுடைமை, பண்புடைமை, ஆகிய பத்து உடைமைகளும் இன்றைய இளைஞர்களின் உடைமைகளாக நின்று ஒளி வீசவேண்டும்.

7. சீர்திருத்தம்

நாட்டை, மொழியை, மக்களை சமூகத்தை சீர்திருத்த எண்ணும் இளைஞர்கள் முதலில் தங்களை சீர்திருத்திக்கொள்ளவேண்டும். தன்னை சீர்திருத்திக்கொள்ளாத மனிதனுல் எந்த நற்பணியும் செய்ய இயலாது.

7. எழுத்தாளன்

பேசுவதுபோல எழுதுகிறவன் எழுத்தாளியாகான், பிழைபடஎழுதுகிறவன் படிப்பாளியாகான், வைது எழுதுகிறவன் அறிவாளியாகான், வாழ்த்தி எழுதி வாழ்பவன் வாழத் தெரியாதவன், காதற்கதைகளை எழுதுபவன் காலத்தின் அருமையை அறியாதவன், காமக் கதைகளை எழுதுபவன் தீயொழுக்கத்தை வளர்ப்பவன், பலமொழிச் சொற்களைக் கலந்து எழுதுபவன் ஒரு மொழியிலும் பற்று இல்லாதவன், பெருந்தன்மையோடு பழகியறியாதவன் பேனுவோடு பழகத்தகாதவன்—

என்ற உண்மைகளை உணர்ந்த பிறகே எழுத்தாளனுக விரும்பும் இளைஞர்கள் எழுதத் தொடங்கவேண்டும்.

8. பேச்சாளன்

தான் பேசுகிற பேச்சில் அமைக்கப்படுகின்ற சொற்களைவிட வேறு நல்ல சொற்கள் வெளியில் இல்லாதிருக்குமாறு பார்த்து அமைத்துப்பேசவேண்டும்.

"நா நலம் என்னும் நலமுடைமை, யாகாவாராயினும் நாகாக்க, தீயினுற் சுட்ட புண் ஆறிவிடும், நாவினுற் சுட்ட வடு ஆருது, நல்ல சொற்களிருக்க தீய சொற்களை வாயில் வைத்துப் பேசுவது கனிகள் பல இருக்க காயில் வாயை வைத்துக்கடிப்பது போன்றது" என்ற வள்ளுவர் வாக்கினையும்;

## ஹல்தும்முல்லை

ஹல்தும்முல்லையில் அண்மையில்சுடர் கலை இலக்கியமன்றம் நிறுவப்பட்டது. அதன் நிர்வாகிகளாகப் பின் வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். தலைவர்: வி. துரைராஜ், உப தலைவர் — விஜயகுமார், செயலாளர் — ஐ. கணேசன். துணைச்செயலாளர்—தியாகநாதன், பொருளாளர் — மூர்த்தி. செயற்குழு உறுப்பினர்களாக மூவர் தெரிவுசெய்யப்பட்டனர்.

சுடர் கலை இலக்கிய மன்றம்

சுடரின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் பாடுபடுவதென மன்றம் தீர்மானித்துள்ளது.

---

"சுழிக்கச் சொல்லேல், சொற்சோர்வு படேல், நொய்ய உரையேல், நயம்பட உரை, பழிப்பன பகரேல், பிழைபடப்பேசேல்,மொழிவது அறமொழி, கண்டொன்று சொல்லேல், வஞ்சகம் பேசேல், வாதுமுக்கூறேல் ஓரஞ் சொல்லேல்."

என்ற ஔவையார் வாக்கினையும் எண்ணிப் பார்த்து, பிறகே பேசுவதற்கு என்று வாயைத் திறக்கவேண்டும். இன்றேல் நல்ல பேச்சாளனாக முடியாது.

### 9, பெரியர்

"யார் பெரியர்?" என்ற கேள்விக்கு வள்ளுவர் அளித்த விடை; "எழுதுதற்கரிய எழுதுவர் பெரியர்","பேசுதற்கரிய பேசுவர் பெரியர்" என்பவையல்ல. "செயற்கரிய செய்வர் பெரியர்" என்பதே "மலையளவு பேசுவதை விட கடுகளவு செய்வதே நல்லது என்பது நம் நாட்டுப் பழமொழிகளில் ஒன்று. ''கோடையிடி இடிப்பதினாலேயே குளம் நிறைந்துவிடுவதில்லை'' என்ற உண்மையை கோடையிடிப் பேச்சாளர்கள் உணர்ந்தாகவேண்டும். ''மக்களாகப் பிறந்த எவரும், தான் பிறந்ததற்கடையாளமாக ஏதாவது ஒரு நற்பணியைச் செய்து, அதை ஒரு நினைவுச் சின்னமாக வைத்தே மறையவேண்டும்'' என்ற உணர்ச்சி எந்த மனிதனுக்கும் இருந்தாகவேண்டும்.

### 10. சிறப்பு

உலகில் தோன்றிய மதங்கள் பல. அவற்றில் மிகப் பெரிய மதங்கள் எட்டு. இந்த எட்டு மதங்களும் நாம் தோன்றிய இந்த ஆசியாக் கண்டத்திலேயே தோன்றியவை. இந்து மதம், புத்தமதம், கிறிஸ்துமதம், இஸ்லாம் மதம், சமணமதம், பார்ஸி மதம், சைவம், வைணவம், ஆகிய மிகப் பெரிய எட்டு மதங்களும் ஆசியாக் கண்டத்திலேயே தோன்றியவை. இதனால் இதை ''ஞானம் பிறந்த கண்டம்'' என நல்லறிஞர்கள் கூறுவதுண்டு. இத்தனை மதங்களுக்கும் இலக்கியங்களைச்செய்து சிறப்படைந்து நிற்கும் உலகின் ஒரே மொழி நம் தமிழ்மொழி. இதை எண்ணி பெருமையடைய நம் தமிழ் இளைஞர்களுக்கு உரிமையுண்டு.

### 11 செல்வம்

"மண்ணிலே புதைந்து கிடக்கும் பொன், மலையிலே சிதறிக்கிடக்கும் மணி, காட்டிலே விளைந்துகிடக்கும் பவளம் கடலிலே ஆழ்ந்து கிடக்கும் முத்துமட்டுமல்ல செல்வங்கள். இலக்கியங்களிலே புதைந்து கிடக்கும் கருத்துக்களும் செல்வங்கள்" என்ற உணர்ச்சியும் இன்றைய இளைஞர்களுக்கு இருந்தாக வேண்டும்.

### 12, பயன்படுத்தல்

சிறந்த இலக்கியங்களைப் படிப்பதனாலும், அதிலுள்ள கருத்துக்களைப் பற்றிப் பேசுவதனாலும், பேசக் கேட்பதனாலும் நாம் மகிழ்ச்சியை அடையலாம். ஆனால், உயர்வை அடையமுடியாது. அக்கருத்துக்களை வாழ்க்கைக்குப் பயன் படுத்திக்கொள்வதால் மட்டுமே நாம் உயர்வு அடையமுடியும். இவ்வுண்மையை உள்ளத்தில் வைத்துப் பணிபுரியும் இளைஞர்களையே எதிர்காலத் தமிழகம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது.

### 13. முடிவு

தொண்டு என்பதற்கும், தொழில் என்பதற்கும் எழுத்துக்கள் மூன்றே ஆனாலும் தொண்டுக்கும், தொழிலுக்கும் இடையில் உள்ள வேறுபாடு மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேறுபாடு போன்றது. நமது முன்னோர்கள் தொண்டு செய்வதையே தொழிலாகக் கொண்டு வாழ்ந்தார்கள். இன்றோ தொழில் செய்வதையே தொண்டு எனக் கூறிக்கொண்டிருக்கிறார்கள். இவ்வழியிற் செல்லாமல் "என் கடன் பணிசெய்து கிடப்பதே" எனக் கருதி இன்றைய இளைஞர்கள் நற்பணிகள் சில வற்றையேனும் செய்து சிறந்த வாழ்வு வாழ்ந்தாகவேண்டும்.

வாழட்டும் தமிழ் இலக்கியங்கள்!

வளரட்டும் இளைஞரின் நற்பணிகள்!!




**யா**ழ்ப்பாணக் குடாநாட்டிலே பழைமையைப் பேணும் ஒரு கிராமம். அங்கே ஏதோ ஒரு முதலியார் வம்சத்துப் பிரபு. அவர் எப்போதும் பிரம்பும் கையுமாக எடுபிடி ஆட்கள் புடைசூழத்தான் புறப்படுவார். ஒரு நாள் அவர் அப்படி வந்தவேளை வள்ளுவ வகுப்பைச் சேர்ந்த ஒரு கிழவன் மத்தியான வெயில் தகிக்க ஒரு துண்டைத் தலையிற் கட்டிக்கொண்டு ஒழுங்கையால் வந்துகொண்டிருந்தான், முதலியார் வந்ததை அவன் காணவில்லை. ஒரு வேளாளப் பிரபுக்கு முன் வள்ளுவ குலத்தைச் சேர்ந்தவன் இந்தக் கோலத்தில்—அந்தக் காலத்தில் (1933ல்) வரலாமா? முதலியாருக்குக் கோபம் உச்சந்தலை வரை வந்துவிட்டது. 'அட பயலே' என்று அடி அடியென்று அடித்துவிட்டார். அவனால் என்ன செய்ய முடியும்?

அவன் சிறிது படித்தவன். பாட்டுகளும் பாடுவான். அடுத்த நாள் முதலியாரது 'எடுபிடிகள்' ஒருவனைச் சந்தித்தான். அவனிடம் மெல்லமாகப் பேச்சுக்கொடுத்தான். "தம்பி! நேற்று நயினர் என்னை மோசமாக அடித்துப் போட்டார். போகட்டும். காலம் வரும். ஒரு நாளைக்கு நானும் அடிப்பேன்" என்று தொடங்கினான், எடுபிடி ஆள் முறைத்துப் பார்த்தான். கிழவன் சொன்னான் "ஏன் தம்பி கோபிக்கிறாய்? முதலியாருக்கு அடிப்பேனென்றா? இல்லவே இல்லை, சத்தியமாக இல்லை. அப்படி ஒரு காலம் வரவே வராது. ஆனாலும் அடிப்பேன் எங்கே தெரியுமா? எனது பறை மேளத்தில்" என்றான். எடுபிடி ஆளுக்கு அப்போது தான் மூச்சு வந்தது. ஆனாலும் அவன் பேச்சின் குத்தலும் கிண்டலும் உள்ளர்த்தமும் 'எடுபிடி'க்கு விளங்கவில்லை. அந்தக் கிழவன் இன்னும் கொஞ்சம் விஸ்தாரமாகச் சொன்னான்.

''காரிரங்கும் கொடைமுதலி நீ யொறுத்தால்
நான் அழுவேன்; கலகமில்லை''

கவிதை அழகாகத் தொடங்குகிறது. வரையாது வழங்குவதில் மேகத்தை விடச் சிறந்தது பிறிதொன்றுமில்லை. ஆனால் அம்மேகம் கூட இந்த முதலியாரது கொடைத் திறனைக் கண்டு இரங்குகிறதாம். அவ்வளவு கொடையாளி அவர்!" நீ ஒறுத்தால் நான் அழுவேன் கலகமில்லை'' என்ற தொடரால் அவரது நாட்டாண்மைத் தனத்தையும் தனது ஏலாத்தனத்தையும் பச்சையாகக் குத்திக் காட்டுகிறான். அக்கால சமூகத்தின் நிலையையும் அப்பட்டமாகப் படம்பிடித்துக்காட்டுகிறான். அப்பால் விடயத்துக்கு வருகிறான்.

''வாரிரங்கும் பறை முகத்தில் நின் மனையில்
வளை கோலால் மெல்லத் தட்டில்

நன்றாக இழுத்துக் கட்டியதனால் வார்கூட இரங்குகிறதாம். அப்படியான அருமையான மேளம். மெல்லத் தட்டினால் ஊர் முழுவதும் கேட்கும். அதில் ஒரு நாளைக்கு அடிக்கத்தான் போகிறேன் என்கிறான் அவன். அப்படிக் கூறிவிட்டு எடுபிடி ஆளின் முகத்தைப் பார்க்கிறான், அவருக்கு விடயம் புலனாகவில்லை போலத் தெரிகிறது.

ஊர் இரங்கும் உறவிரங்கும் மனை இரங்கும்
பனை இரங்கும் உண்மை ஐயா!

முதலியார் அடித்தார். அந்த அடியால் நான் மாத்திரம் அழுதேன். நான் அடித்தால்...ஊரே அழப்போகிறது. உறவு முறையோர் அழப்போகிறார்கள். வீட்டிலே பெண்சாதிபிள்ளை எல்லோரும் கதறப்போகிறார்கள். என்று அவன் கூறியபோதுதான் 'எடுபிடி' ஆளுக்கு காரியம் விளங்குகிறது. 'முதலியாரை வெகு விரைவாக பாடையிலே ஏற்றி விட்டானே படுபாவி' என்று முணுமுணுத்தான். ஊர் இரங்குவதும், உறவிரங்குவதும், மனையிரங்குவதும் உண்மை ஆனால் மற்றொன்

றும் இரங்குகிறதாமே. என்ன அது? பனை! பனை ஏன் இரங்குகிறது? அந்தக் கிழவன் வைத்த பொடி—ஹாஸ்யம்—அப்போதுதான் விளங்குகிறது.

முதலியார் நல்ல குடிகாரர் ஒரு நாளைக்கு பத்துப் பன்னிரண்டு போத்தல், கள்ளுக் குடிப்பவர். இனியார் இப்படிக் குடிக்கப் போகிறார்கள் என்று பனைகூடக் கண்ணீர் விடுமாம். கள்+நீர்—கண்ணீர் பனைகூடக் கள்நீராற் கண்ணீர் விடுமென்று அழகாக—குத்தலாக—சிலேடையாகச் சொல்கிறான் அவன்.

அப்பாலும் தொடர்கிறான். ஒரு நாளைக்கு மாத்திரம் அழுகை ஒலி கேட்கும் என்று நினைக்கிறாயா? இல்லை. இல்லவேயில்லை. மாதா மாதம் அவர் இறந்ததிதி தோறும் அழுகை கேட்கும். அவர் அடித்த அடியால் நான் மாத்திரம் ஒரு நாளைக்கு அழுதுவிட்டேன். நான் அடிக்கப்போகும் அடியால் ஊரும், உறவும், மனையும் அழப்போகிறது. ஒரு நாளைக்கு மட்டுமல்ல. மாதாமாதம் திதிதோறும் வீட்டில் அழுகை கேட்கப்போகிறது. அப்படியானால் அவரோ நானோ கெட்டிக்காரன் என்று வினாவோடு முடிக்கிறான் அவன்.

''ஓரிரங்கலன்றி மதி திதி தோறும் ஓலமெனில்
சமர்த்தன் யாரோ''

என்பது பாடல். இந்தப் பாடலை 'எடுபிடி ஆள்' முதலியார் காதில் ஓதுவதற்கு ஓட்டமாக ஓடினான். உணர்ச்சியைத் தொட்டு மனதில் நிலைத்து நிற்கக்கூடிய இந்தப் பாடலின் முழு உருவம் இது:-

காரிரங்கும் கொடை முதலி நீ யொறுத்தால்
நானழுவேன் கலகமில்லை

''வாரிரங்கும் பறைமுகத்தில் நின்மனையில்
வளை கோலால் மெல்லத் தட்டில்

ஊரிரங்கும் உறவிரங்கும் மனையிரங்கும்
பனை இரங்கும் உண்மை ஐயா!

ஓரிரங்கலன்றி மதி திதிதோறும் ஓலமெனில்
சமர்த்தன் யாரோ?''

அக்கால சமூக நிலையைத் தொட்டுக் காட்ட எத்தனையோ எழுத்தாளர்கள் நூற்றுக் கணக்கான சிறு கதைகளையும் பல நாவல்களையும் எழுதியுள்ளார்கள். எனினும் இப்பாடல் உள்ளத்தில் சென்று பதிவதுபோல ஏனையவை பதியமாட்டாது என்பது உறுதி.

1932ஆம் ஆண்டு வெளிவந்த தெல்லிப்பழை இரு மொழிக்கழக வெளியீட்டில் இப்பாடல் இருக்கிறது. 'சொல்லென்ற மலரிலே பொருளென்ற புதுமதுச் சொட்டப் பாடிய நவாலியூர்ச் சோமசுந்தரப் புலவரது மகனான புலவர் மணி இளமுருகனார்தான் இப்பாடலின் ஆசிரியர்.


● *1977 சித்திரை புது வருடத்தில் 3வது அகவையுட் காலடி எடுத்து வைக்கும் ''சுடர்'' தமிழ் இலக்கியப் பணியாற்றி, தமிழ் ஈழ விடுதலைக்கு விழிப்புணர்ச்சி யூட்டித்தொடர்ந்து பிரகாசிக்க வாழ்த்துகிறோம்.*

**நியூ வசந்தா ரெக்ஸ்ரைல் பிறின்ரிங் சென்ரர்**

248/1, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி: 7732

- வெள்ளைப் புடவைகளுக்கு — விரும்பிய 'டிசைன்'கள்!
- மங்கிய சாறிகளுக்கு — மனதுக்குகந்த 'டிசைன்'கள்
- சிறுடைகளுக்கு — சிங்கார வர்ணங்கள்!
- சின்னஞ் சிறுவரின் சிங்கார உடைகளுக்கு — சிறப்பான சித்திரங்கள்!
- விளம்பர பதாகைகள்!
- சுவர் விரிப்புகள்!

விதம் விதமான கலை எழில் மிகுந்த சித்திரப் படைப்புகளுக்கு
ஒருமுறை விஜயம் செய்யுங்கள்

**NEW VASANTHA TEXTILE PRINTING CENTRE**

248/1, K. K. S. Road — JAFFNA Telephone: 7732




ஈழத்தில் ஒரு தனி அரசை நிறுவவேண்டும் என்ற பேராவலில் ரோகணத்திலிருந்து வடக்கே படை நடாத்தி வந்த விகாரமாதேவி ஜயவர்த்தனபுரக் கோட்டையின் மௌன உறுதி கண்டு மலைத்து நின்ருள்.

கட்டிய கணவனுடைய லட்சியத்திற்கு மாருக வடபகுதியில் ஆட்சியிலிருந்த சோளுட்டு மன்னனுக்கெதிராக சிறுவயது முதலே தன் மகன் காமினியை உருவாக்கி வளர்த்தவள் அவள். கள்ளங் கபடமற்ற இளமைப் பராயத்திலேயே 'தெற்கே கடலும் வடக்கே தமிழர்களும் நெருக்கும்போது என்ஞல் நிமிர்ந்து படுக்கமுடியவில்லையே' என்று துவேஷம் பேசிய துட்ட காமினி எனப் பெயர் கொண்ட இளவரசனுக்கு மதிவல்ல மந்திரியாகவும் இருந்தவள் அன்னை விகாரமாதேவியே. தந்தை காகவண்ண தீசர் இருக்கும் வரையில் அவனுடைய துவேஷம் அடங்கிக் கிடந்ததாயினும்— அவன் இறந்ததும் தாயினுடைய ஆலோசனைப்படி அநுராதபுரியை நோக்கி படை நடாத்தி வந்தான்.

சோழநாட்டைச்சேர்ந்த எல்லாளன் என்பவன் அநுராதபுரியில் அரசோச்சி வந்த காலம் அது. மனுநீதி வழுவா வம்சத்திலுதித்தவஞன எல்லாளன் தன்னுயிர்போல மன்னுயிரையும் போற்றி வந்ததன் காரணமாக இராஜரட்டை மக்கள் அவனைத்தெய்வமாகவே மதித்து வந்தனர். அநுராதபுரியைத் தலைநகராகக் கொண்ட இராச்சியத்தின் எல்லை அரணுகத்தெற்கில் அமைந்திருந்தது ஜயவர்த்தன புரக்கோட்டை. வேளக்காரப் படைத்தலைவன் ஒருவனே கோட்டைத் தலைவஞயிருந்து வந்தான்.

ஈழத்து ஆட்சியாளர்களின் தலைவிதியை நிர்ணயிக்கும் நிலை வேளக்காரப் படைகளிடமே இருந்து வந்த காலம். ஈழத்தில் நிலையான ஆட்சி ஒன்று பலகாலம் நிலையாது போனதற்கும் இதுவே காரணமாயிருந்ததாயினும், நீதிநேர்மையிலும், ராஜதந்திரத்திலும் ஆட்சித் திறனிலும், வீரத்திலும் ஒருங்கே வலுவுடைய சோழர்களின் வம்சத்தில் வந்த ஒருவனுடைய நல்லாட்சி வல்லாட்சியாக இருந்தவேளையில் எல்லை அரணை ஜயவர்த்தன புரக்கோட்டையே ஒரு இராச்சியக்கோட்டையைப்போல விகாரமாதேவியை மலைக்க வைத்து மௌனப் புன்னகை பூத்துநின்றது.

அசைந்து வரும் குன்றங்களோ என வியக்கும் வகையில் அமைந்த குஞ்சரப் படையும், உருவெடுத்துப் பறந்துவரும் ஊழிக்காற்ருே என வியக்கும் வகையில் புரவிப்படையும்' நிலைபெயர்ந்து வரும் கடலைப் போன்றுவரும் காலாட்படையும் சேர்ந்து உறங்கிக் கிடந்த காட்டை உலுப்பித் துவம்சம் செய்துவருவது போன்ற காட்சியையும் ஒருங்கே சேர்த்துப் பார்த்துவிட்டு தலையை அசைத்துப் புன்முறுவல் பூத்தாள் விகாரமாதேவி.

ஒரு புறம் ஜயவர்த்தனபுரக் கோட்டையும்,மறுபுறம் தனது படைக்கும் நடுவே வீரலட்சுமி போலக் காட்சியளித்த விகார மாதேவியை நோக்கிவிரைந்து வந்தது ஒரு குஞ்சரம். அதன் அம்பாரி மேல் கம்பீரமாக

எழுந்து நின்ற ஓர் இளவல் அவளை நோக்கி "அம்மா இந்த மண்கோட்டையைப் பற்றியா அச்சுறுத்தி வந்தீர்கள்" என்ருன்.

"ஆமாம் மகனே! பார்த்தால் மண்கோட்டையைப் போலத்தோன்றும் இதற்குள் இருக்கும் எதிரிகள் பலபோர்களைச் சந்தித்தவர்கள். மதிநுட்பம் உடையவர்கள். ஒரு சிலரே பலபேரைப் புறமுதுகிட்டு ஓடச்செய்யும் வலிமையுள்ளவர்கள்." என்ருள்.

"ஆரவாரம் ஏதும் இன்றி அடங்கிக் கிடக்கின்ருர்கள். கோட்டைக் கதவுகள் பூட்டப்பட்டு அகழிப்பாலம் தூக்கி விடப்பட்டுள்ளன. சாக்காட்டின் பயங்கர அமைதி நிலவுகின்றது அங்கே. நீங்கள் இல்லாததை இருப்பதாக நினைத்துப் பயம் காட்டுகின்றீர்களே அம்மா" இளம் கன்று துள்ளிக் குதிப்பது போல வீராவேசமாக வார்த்தைகள் பறந்தன.

"காமினி அவசரப்படாதே! சிங்கம் தூங்கிக்கிடப்பது போல கோட்டையும் உறங்கிக் கிடக்கின்றது. அதனைத்தட்டி எழுப்பினல் தான் அதன் உண்மைநிலை புரியும். படைகளைப் பாசறை அமைக்கச் சொல். ஒரு நாள் ஓய்வெடுத்து நிலைமையை அவதானித்து போரை ஆரம்பிக்கலாம்." என்று உத்தரவிட்டாள்.

இளவரசன்காமினிபடையை நோக்கித் தன் குஞ்சரத்தைத் திருப்பினன். அவனுடைய மன நிலையைப் புரிந்துகொண்ட பட்டத்து யானையான 'கண்டுல' துதிக்கையைத்தூக்கிப் பிளிறியவாறே வாலைக் கிளப்பிக்கொண்டு விரைந்துசென்றது.

முதல் நாள் நடைபெற்ற போரிலேயே கோட்டைக்குள் இருப்பவர்களின் திறமையையும், வலிமையையும் உணர்ந்து கொண்டான் இளவரசன் காமினி. அன்று நடந்தபோரை நினைக்கவே அவன் இதயம் குலுங்கியது. சிறுவயது முதலே வளர்ந்து துளிர் விட்ட ஒரு லட்சிய வெறி ஒரு நாள் போரிலேயேதீர்ந்துவிட்டதுபோன்ற அங்கலாய்ப்பு — பதட்டம் — நினைத்தும் பார்க்கமுடியாத அதிர்ச்சிகள்!!!

இரவோடிரவாக அகழியை மூடி பாலங்கள் அமைத்து விட்டு விடிந்ததும் கோட்டையை முற்றுகையிட்டான் காமினி. அப்பொழுதும் கோட்டையின் மேல் பகுதியில் எதுவித சலனமுமில்லை. கோட்டைக்குள் ஆட்களின் நடமாட்டம் இருந்தபோதும் தாக்குதலுக்கு எதிர்த்தாக்குதல் இருக்குமோ என்ற ஐயம் அவன் மனதிலிருந்தது. கோட்டை மதில்களில் அமைந்திருந்த கூடுகளில் வேல்கள் தலைநீட்டிக்கொண்டிருந்தனவேயன்றி வீரர்களை அவன் காணவில்லை. பட்டத்து யானையிலிருந்து உத்தரவுகளைப் பிறப்பித்துக்கொண்டிருந்தான்

கோட்டைக் கதவுகளைமோதி உடைக்கும்படி குஞ்சர மல்லர்களுக்கு உத்தரவிட்டான் காமினி. முரசுகள் அதிர்ந்தன. அடுத்தகணம் குஞ்சரங்களின் பிளிறல் ஒலிகள். கோட்டைக் கதவுடன் குஞ்சரங்கள்மோதியதால் எழுந்த ஆரவாரப் பேரொலிகள்.

அதே வேளையில் யாருமே எதிர்பாராத வகையில் கோட்டை மதில்களிலிருந்து வேல்களும், அம்புகளும் சரமாரியாகப்பொழிந்தன — தொடர்ந்து மரண ஓலங்கள் பரவலாக ஒலித்தன. இத்தனைக்குமிடையில் கோட்டைக் கதவுகளில் மோதிய குஞ்சரங்கள் பிளிறிக் கொண்டே திரும்பி அணிவகுத்து நின்ற காமினியின் படைகளைத் துவம்சம்செய்து கொண்டு விரைந்து ஓடின. எதிரில் அகப்பட்டவர்களெல்லாம் குஞ்சரங்களின் பாதங்களில் நசுங்கி அழிந்தனர். தன் கையே தன் கண்ணைக் குத்திய நிலை!

திடீரென ஏற்பட்ட கொந்தளிப்பில் என்ன நடந்தது என அறியாமல் தவித்த காமினி கோட்டையை அண்ணுந்து பார்த்தான். நன்கு சுடவைத்த எண்ணெயைய் கொப்பரைகளில் ஊற்றி. விசைப்பொறியில் வைத்து தூரவீசிக்கொண்டிருப்பதைப் பார்த்தான். அதேபோல பழுக்கக் காய்ச்சிய இரும்புத் துண்டங்களை குஞ்சரங்களுக்கு மேல்கொட்டிவிட்டதாலேயே அவை அவற்றில் மிதித்துவிட்டுத் திரும்பி தன் படையையே அழித்து துவம்சம் செய்தன என்பதை உணர்ந்துகொண்டான்.

சில நாழிகைப் பொழுதில் அந்தப் பிராந்தியமே குருதிப் புனலாகக் காட்சியளித்தது. அகழியில் விழுந்த மனித உடல்களுடன் புரண்டுகொண்டிருக்கும் முதலைக் கூட்டங்கள்; வெளியே குஞ்சரங்களின் பாதங்களுக்குள் அகப்பட்டு நசிந்து சிதைந்து போயிருந்த மனித உடல்கள். அம்புக்கும் வேலுக்கும் பலியானவர்கள் போக மிகுதிப்பேர் குற்றுயிருடன் கையிழந்து, காலிழந்து துடிக்கும் பயங்கரக்காட்சிகள்.

வேதனைக் குரல்கள், முனகல்கள், மரண ஓலங்கள், யானை, குதிரை, மனிதர்களின் பல்வேறு ஒலிகளும் கலந்து அந்த யுத்த அரங்கையே பயங்கர பூமியாக்கிவிட்டிருந்தது.

அன்று முழுவதும் முற்றுகை நடைபெறவில்லை. சில நாழிகைப் பொழுதிலேயே சமரை நிறுத்திவிட்டான் காமினி. தன்விரலே தன் கண்ணில் குத்திஞல் எப்படியோ அப்படியே தன்னுடைய படையின்பெரும் பகுதியை தன்னுடைய குஞ்சரப் படையே அழித்து விட்டகொடுமையை எண்ணிக் குமைந்தான்.


"மகனே?" வாஞ்சையுடன் அழைத்தாள் விகாரமாதேவி.

"அம்மா!" அவன் குரலில் முன்பிருந்த கம்பீரம் இல்லை.

"ஒரு நாள் போரிலேயே சோர்ந்துவிட்டாயே"

"நாம் எதிர்பார்த்ததற்கு மாருக நிகழ்ச்சிகள் அமைந்து விட்டனவே."

"அபராஜிதன் என்ற படைத் தளபதி ஒருவன் இருக்கின்ருன். படைபலத்தைவிட அவ



னுடைய மதி வலிமையுடையது மகனே.”

“என்ன செய்யவேண்டும் அன்னையே”

“கோட்டையை நாம் அணுகாமல் முற்றுகையிடுவோம். கோட்டைக்குள் நவீனபோர் சாதனங்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன. ஆகவே அங்கே நமது படைபலம், எதுவும் செய்யமுடியாது. நாட்கள் செல்லச்செல்ல அங்கே உணவுப்பொருட்கள் தீர்ந்து போகும். அவர்களாக கோட்டையை விட்டுவெளியே வந்து தாக்கும்வரை நாமும் முற்றுகையிட்டுப் பொறுத்திருப்பதுதான் புத்திசாலித்தனம்.” என்று கூறினாள்.

திங்கள் மூன்று நிறைவு பெறும் வேளை. இடையில் சில சமர்களும் நடந்து முடிந்தன. படையிலும் பலம் குறைந்து விட்டது. இயற்கையும் அவர்களுக்குப் பாதகமாக, மழையும் ஆரம்பித்திருந்தது.

சலசலத்தோடும் சிற்றாற்றங் கரையில் ஓர் வழுக்குப் பாறையில் சாய்ந்து நின்றாள் விகார மாதேவி. அவளுடைய சிந்தனை வெள்ளம் காட்டாறு போல கரைபுரண்டோடியது. அவளுடைய நம்பிக்கையின் எல்லைக் கோடு இன்னும் கடந்து விடவில்லை.

மனிதர்களின் மனத்தை ஆக்கிரமித்து ஆட்டிப்படைக்கும் ஆசைகள்தான் எத்தனை? மண்ணாசை! பெண்ணாசை!! பொன்னாசை!!!

ரோகணத்திலிருந்து மண்ணாசையல்லவா அவளை இவ்வளவுதொலைவுக்கு அழைத்து வந்திருக்கின்றது. அவளுடைய ஆசை நிராசையாகியே போய்விடுமா? தான்பெற்ற செல்வம் ஈழத்தை ஒரு குடையின் கீழ் ஆளமுடியாது போய்விடுமா? அவளுடைய அழகிய விழிகளில் நீர் முட்டித் தழும்பியது.

மலர்களின் இனியமணம் சீதளத்தென்றலில் கலந்து அவள் சிந்தையைக் குளிர்வித்தது. ஜயவர்த்தன புரக்கோட்டைத் தளபதியின் திறமையும் அவள் சிந்தையைக் கவர்ந்திருந்தது. எப்படியாவது அவனை அடிபணிய வைத்தாகவேண்டும் என்ற எண்ணம் மட்டும் அவளுடைய குருதி எங்கும் கலந்து குமுறிக்கொண்டிருந்தது.

எப்படியும் ஜயவர்த்தன புரக்கோட்டையைக் கைப்பற்றிக்கொண்டால் அநுராதபுரம் வீழ்ச்சி நிட்சயம் என்ற திடமான— முடிவான நம்பிக்கை அவள் உள்ளத்தில் வேரூன்றி விட்டது. அந்த வேளையில் தான் அந்த நற்செய்தி கொண்டு வந்தான் ஒற்றர் படைத்தலைவன். அபராஜிதனைப் பற்றி அவன் கூறிய செய்திகள் அவள் உள்ளத்தில் புதுவெள்ளமெனப் பாய்ந்தது. எந்த மனிதனும் ...... அவளுடைய அழகிய நயனங்களில் ஒருவித புத்துணர்வு.பாசறைக்குத் திரும்பினாள்.

சில விநாடிப்பொழுதில் ஒற்றர் படைத்தலைவனை அழைத்து முத்திரையிடப்பட்ட ஒருசெய்தியைக்கோட்டைத் தலைவனுக்கு அனுப்பினாள் விகார மாதேவி.

# ஆசிரியர் குறிப்புகள்

- சித்திரை மலருக்கென வந்த கட்டுரைகள் அனைத்தையும் இம்மலரில் இடம்பெறச் செய்யமுடியவில்லை. மலருக்கென வந்த கட்டுரைகள் தொடர்ந்து வரும் சுடர் இதழ்களில் இடம்பெறும்.
- பங்குனி இதழில் வெளிவந்த சிறுகதைகளில் 'சிங்கைத் திவாகரன்' எழுதிய 'ஒரு மனித மனம் மாறுகிறது' எனும் சிறுகதை சுடரின் சன்மானமாகிய ரூபா 25-00 பெறுகிறது.
- ஏப்ரல் 3ம் நாள் வெள்ளவத்தை ராமகிருஷ்ண மண்டபத்தில் கொழும்பு சுடர் கலை இலக்கிய மன்றத்தினர் எடுக்கவிருந்த முத்தமிழ் விழா, தமிழ் ஈழத் தந்தை மூதறிஞர் செல்வா அவர்களின் திடீர் சுகவீனம் காரணமாகப் பிற்போடப்பட்டுள்ளது.
- ஆசிரியர் எழுதும் 'தமிழக நினைவுகள்' கட்டுரைத்தொடர் அடுத்த இதழில் இடம் பெறும்.

---

ஒற்றர் படைத்தலைவன் சென்றுவிட்டான். அவளுடைய பெண்மனம் பேதலித்தது. சிலவேளை தன் எண்ணம் பலிக்காமல் போய்விட்டால்...?

அப்படி இருக்கமுடியாது என அவள் மனமே அவளுக்கு ஆறுதல் கூறியது. சாமுத்திரிகா லட்சணம் பொருந்திய அழகியதான தன் உருவத்தைப் பற்றி அவளுக்குப் பெருமையுண்டு. புதல்வர்கள் இருவரைப் பெற்றுவிட்ட பொழுதிலும் கட்டுக்குலையாத பேரெழில் கொண்ட தன்னை பெண் சபலம்கொண்ட ஒருவன் தேடிவராமல்போகமாட்டான் என்று நம்பினாள்.

நீலவானில் நிலாமடந்தை நிர்வாணமாக நீந்தி வந்தாள். அன்று மழையில்லாததால் காட்டுப்பனி புகைப்படலமாக வலம் வந்துகொண்டிருந்தது. இரண்டாம்சாமத்துகோட்டை மணி அடித்து ஓய்ந்ததும் விகாரமாதேவியிருந்த பாசறையிலிருந்து ஓர் முக்காடிட்ட உருவம் கோட்டையைநோக்கி மறைந்து மறைந்து சென்றுகொண்டிருந்தது. கோட்டையைச் சமீபத்ததும் அகழிக் கரையில் நின்ற புன்னை மரத்தின் பின்னே மறைந்து நின்றுகொண்டது.

சில நாழிகைப்பொழுதில் கோட்டைக் கதவிலிருந்த சிறு கதவு திறந்தது. கோட்டைத் தளபதி அபராஜிதன்வெளியே வந்தான். அகழிக் கரையிலிருந்த புன்னை மரத்தைநோக்கிச்சென்றான். நிலவின் நிழலில் அவனுடைய கூர்மையான விழிகள் தன்னை எதிர்நோக்கிக் காத்திருக்கும் உருவத்தைப் பார்த்துவிட்டன.

"தேவி" என்றான்.

"வந்துவிட்டீர்களா?" என்றாள்.

படை பலத்தாலோ, மூன்று மாத முற்றுகையினாலோ, பொருளாலோ சாதிக்கமுடியாத ஒரு சாதனையை சில நாழிகையில் தன்னால் சாதிக்க முடிந்ததையிட்டுப் பெருமைப்பட்ட விகாரமாதேவி தன்முன் நிற்கும் வீரஉருவைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

கீழ்வானப் படுதாவில் கதிரவன் தன் பொற்கிரணங்களைப் பரப்பியவாறு பவனிகிளம்பும் வேளையில் ஜயவர்த்தன புரத்தை தாண்டி அநுராதபுரிநோக்கிச்செல்லும் நெடுஞ்சாலையில் துட்ட காமினியின் படை முன்னேறிக்கொண்டிருந்தது. அதை விடவிரைவாகத் தலைநகருக்குச் செய்தி கொண்டோடினான் எல்லாள மன்னனின் ஒற்றன்.

மனுநீதி வழுவாத பரம்பரையில் வந்த எல்லாளன் செய்தி அறிந்ததும்துடித்துப்போனான். அவனுடைய இராச்சியத்தின் பாதுகாப்பு பலவீனப் பட்டுவிட்டதை உணர்ந்ததுமே போர் என்ற பெயரில் அநியாயமாக மக்களைப் பலியிட அவன் விரும்பவில்லை. மண்ணாசை கொண்டு வரும் துட்டகாமினியுடன் தானே நேருக்கு நேர் யுத்தம் செய்வது என்று தீர்மானித்துவிட்டான்.

அந்தச் செய்தி துட்டகாமினிக்கு அறிவிக்கப்பட்டது. அவன் எல்லாளனுடைய தர்ம நியாயத்தினை ஏற்றுக்கொண்டான்.

இருமன்னர்களும் தத்தமது பட்டத்து யானைகளின் மேலேறிப் போர் செய்தனர். வீரம் விளையாடியது. யாருக்குவெற்றி யாருக்குத்தோல்வி என்று நிர்ணயிக்க முடியாத பெரும் போர் நடைபெற்றது.

விதி என்ற ஒன்று விளையாட ஆரம்பித்து விட்டால் அதன் முடிவு ஒன்றும் வரத்தானே செய்யும். எல்லாளன் துட்டகாமினியின் வேல்பட்டு விழுந்தான். விழுந்து கிடந்தபோது அவன் வாய் "பெண்ணாசை கொண்ட ஒருவனைக் கோட்டைத் தலைவனாக நியமித்த நான் ...?" என்று வார்த்தைகளை முடிக்காமலே சென்றுவிட்டான்.

சுடர் வாசகர்களுக்கு
எமது சித்திரை புத்தாண்டு வாழ்த்துக்கள்!

தரத்தில் சிறந்தது விலையில் குறைந்தது
அண்ணா தயாரிப்புக்களே.

உங்கள் வாடிக்கை கடைகளிலும்
இலங்கையின் எல்லா கடைகளிலும் கிடைப்பது

அண்ணா கோப்பி
அண்ணா தேயிலை
அண்ணா பற்பொடி
அண்ணா பத்தி
ஜெயந்தி பத்திகளே.

இவற்றின் வெற்றுப் பக்கட்டுகளை அனுப்பி விரும்பிய பரிசை
பெற்றுக்கொள்ளுங்கள்.

தயாரிப்பாளர்களும், விநியோகஸ்தர்களும்:—

அண்ணா தொழிற்சாலை
இணுவில். டெலிபோன்: 7412.

# வாசகருக்கு வாசகர்கள் தரும் விளக்கம்!

தம்பி ஆ. சு. விஜயமோகன்; அண்ணன் 'கோவை' மீது தொடுத்திட்ட ''போரை'' கண்டேன். ஏதும் உருப்படியான தாக்குதல்கள் இருக்குமா என அவசரமாக ஆனல் ஆழமாக என் கண்களை அப்பகுதியில் சுழலவிட்டேன். 'போர்' அடித்தது! இருந்தாலும் தம்பி ஒன்றை ஒப்புக் கொண்டுள்ளார். அதாவது — தமிழகத்தில் நல்லதோர் தரம்வாய்ந்த சஞ்சிகையான 'தீபத்'தின் தரத்திற்கு குறுகிய காலத்திற்குள் நம் சஞ்சிகையான 'சுடர்' இயங்குகின்றதனை. இதற்கு ஆசிரியரின் திறன் தான் காரணம் என்பது துல்லியமாகின்றது. ஒரு பத்திரிகையோ அல்லது ஒரு சஞ்சிகையோ தரம் வாய்ந்ததாகக் கணிக்கப் படுவது அதன் — ஆசிரியரின் கைத்திறணிலேயே தான் தங்கியுள்ளது. அந்த அடிப்படையில் சுடர் ஆசிரியருக்கு திரு. விஜயமோகன் தந்திட்ட மறைமுகப்பாராட்டுகளை மனங்கொண்டு ஏற்றுக்கொள்கின்றோம்.

அடுத்து — திரு., விஜயமோகன் அவர்கள் சுமத்தியுள்ள குற்றச்சாட்டுகள் —

1. 'தீபத்'தின் — மறுபெயர் 'சுடர்'

2. தீபத்தின் அமைப்பு — அச்சு அளவு மாதிரியே சுடர்.

3. தீபத்தின் ஆசிரியர் குறிப்பேடு மாதிரி சுடரில் கோவை குறிப்புகள்.

இம் மூன்றையும் ஒருசேர பார்க்கப் போனல் உலகத்தில் எவருமே — பத்திரிகை — சஞ்சிகை நடாத்தமுடியாதென்றே சொல்ல வேண்டும். திரு. விஜயமோகனுக்கும் அவர் போன்றவர்கட்கும் விளக்கமாகச் சொல்ல வேண்டுமானல் — உங்கள் கைகட்கு கிடைக்கக் கூடிய — பத்திரிகைகள் சஞ்சிகைகள் அனைத்தையும் உங்கள் முன்வைத்து ஆராய்ந்தீர்களேயானல் — உண்மை துலங்க உங்கள் உள்ளம் தெளிவடைந்திடும்.

— 'தமிழினி'
காங்கேசன்துறை.

அன்பார்ந்த விஜயமோகன் அவர்களே, தாங்கள் கோவை அண்ணவுடன் போர் தொடுத்தது பற்றிப் பங்குனிச் 'சுடரி'ல் கண்டேன். ஏன்? நீங்கள் வீணகக் கோவையண்ணவுடன் போர் தொடுக்கிறீர்கள்.

'சுடர்' என்ற வார்த்தைக்கும் 'தீபம்' என்றவார்த்தைக்கும் ஒரே பொருள் என வாதிட்டுள்ளீர் — நிருபிக்கமுடியுமா? 'தீபம்' என்ற வார்த்தைகு விளக்கு என்றும் பொருள் கொள்ளலாம். 'சுடர்' என்றவார்த்தைக்கு; சுவாலை, அனல், ஒளி எனப் பல பொருள் உண்டு. → இப்படி இருக்க நீங்களோ 'தீபத்'தின் மறு அவதாரமே 'சுடர்' என்கிறீர்கள். ஏன்? இந்த வீண்வாதம் உங்களுக்கு.

தீபம் சஞ்சிகை போன்ற அளவில், அமைப்பில், அதேபோன்ற அச்சில் ஏன் 'சுடர்' வெளிவரக்கூடாது? அப்படி வந்தால் இந்தியப் பத்திரிகைகளின் 'காப்பி' என்று கூறலாமா?

நாளை 'சுடர்' வாரவெளியீடாக மாறலாம் அப்போது 'சுடர்' இன்னெரு இந்திய வார வெளியீட்டின் 'காப்பி' என்று கூறுவீர்களோ?

ஒரு ஏட்டில் வெளிவந்த கதையையோ, கட்டுரையையோ, பாட்டையோ, விகடத் துணுக்கையோ அப்படியேயேனும், சிறுமாற்றங்களுடனேவேனும் 'சுடரி'ல் வெளியிட்டு இருந்தால்; அது இந்தியச்சஞ்சிகைகளின் 'காப்பி' என்று சொல்லலாம் — ஆனல், இதுவோ எந்த ஒரு சஞ்சிகையையேனும் 'காப்பி' அடிக்காது — வேறு ஒரு சஞ்சிகையின் அளவிலும், அமைப்பிலும் வெளிவருவதை நீங்கள் 'காப்பி' அடிக்கப் பட்டது என்று கூறலாமா?

உதாரணமாக; ஆனந்தவிகடனும் — குமுதமும் அளவிலும் அமைப்பிலும் ஒன்று படவில்லையா? கலைமகளும் — கல்கியும் ஒன்று படவில்லையா? இவையும் ஒன்றையொன்று காப்பியடித்தவை என்று கூறமுடியுமா?

நண்பரே! உண்மை இப்படி இருக்க; தாங்கள் கோவை அண்ணவை, சுதந்திர எழுத்தாளனை, தமிழ் இலக்கியத்தின் தொண்டனை, 35 லட்சம் தமிழ் மக்களின் விடுதலை விளம்பியை — ''காப்பியடி வர்க்கத்தின் தளபதி'' என வர்ணித்துள்ளீர்கள். அதை நினைக்க நினைக்க மிகவும் மனவேதனையாக இருக்கிறது. இப்பொழுதாவது சரி தங்களுக்கு உண்மை புலனகிறதா?

வ. தியாகராசா
பயிரிக் கூடல்,
காரைநகர்

பங்குனிச் 'சுடரில்' 'சுடர்' ஆசிரியர் மீது ஓர் வாசகர் போர் தொடுக்கிறர். என்ற பகுதியைப் பார்த்தேன். வாசகர்மீது பரிதாபப் பட்டேன்.

சுடருக்குள்ள மிகப் பெரிய மனப்பான்மையை என்னல் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. என்னவெனில் அந்த வாசகரின் கடிதத்தை அப்படியே பிரசுரித்ததே! இப்பெருமை சுடர் ஆசிரியர் கோவை அண்ணவுக்கே!

— நாகர் பதியூர் சிவா.

சுடர் மீது போர் தொடுக்கும் வாசகருக்கு, 'மணடையில்' பிழையா? அல்லது 'கண்ணில்' பிழையா? — மண்டையில் பிழையானல் உடனடியாக 'மூளை வைத்திய நிபுணரிடம்' சென்று சிகிச்சை பெறுமாறு வேண்டிக் கொள்கிறேன்.

— வட அளவை பாலசூரியன்.




# இனி ஒரு புதுயுகம் பிறக்கும்

**வரதர்**



என்னுடைய சித்தப்பாவின் செல்வப் புதல்வி 'செல்வி'; என்னுடைய அருமைச் சகோதரி. இன்னும் ஒரேயொரு கிழமை கழித்து நடைபெற இருந்த அவளின் திருமணம் நின்றுவிட்டது!

யாழ்ப்பாணத்தில் அமர்க்களமாக நடைபெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டின் பின், இரண்டு வாரங் கழித்து அவளுடைய திருமணம் நடைபெற இருந்தது.

தமிழாராய்ச்சி மாநாடு நடந்து அமங்கலமாக முடிந்து விட்டது.

அதன்பின் இரண்டொரு நாட்கள் செல்வி வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்தாள்.

திருமணத்திற்கு இன்னும் ஒரு கிழமைதான் இருக்கிறது.

இந்த நேரத்தில் இந்தப் பேரிடி வந்து விழுந்திருக்கிறது!

* * *

**1974ம்** ஆண்டு, ஜனவரி மாதம், 10ம் நாள். யாழ்ப்பாண நகரில் தமிழாராய்ச்சி மாநாடு நடந்துகொண்டிருக்கிறது. அன்றுதான் கடைசித் தினம். கடந்த சில தினங்களாகப் பூரித்துப் பொங்கிக்கொண்டிருந்த மக்கள் வெள்ளம், அன்று கரைகடந்து வழிந்து கொண்டிருக்கிறது. மாலையில் வீரசிங்கம் மண்டபத்தில் கூட்டம். வெளிநாட்டிலிருந்துவந்த அறிஞர்கள் அன்று அந்தக் கூட்டத்தில் பேசப்போவதாக அறிவித்திருந்தார்கள். அவர்களைப் பார்க்கவும் அவர்கள் சொல்வதைக் கேட்கவும் பெரிய ஆவலோடு நானும் போகிறேன்.

ஓ, ஓ! இத்தனை பெரிய கூட்டமா!

வீரசிங்கம் மண்டபத்துக்கு உள்ளேதான் கூட்டம் நடந்து கொண்டிருக்கிறது. அந்த மண்டபம் நிறைந்து வழிந்து, அதன் இரண்டு பக்கங்களிலும், முன் முற்றத்திலும் ஒரே சன நெரிசல்! — அதைவிட மண்டபத்தின் முன்னால் பரந்து விரிந்து கிடந்த முற்றவெளியெங்கும் மக்கள்!! மக்கள்!! மக்கள்!!!— எங்கு பார்த்தாலும் மக்களின் கூட்டம்! இப்படி ஒரு மக்கள் கூட்டத்தை இதற்குமுன் நான் பார்த்ததேயில்லை.

மண்டபத்துக்குக் கிட்டவும் போகமுடியாதென்ற நிலையில், மண்டபத்துக்கு முன்னால், முற்றவெளியில் சிறிது உலாவிக்கொண்டிருக்கிறேன். மண்டபத்துள் யாரோ பேசுவது ஒலிபெருக்கிமூலம் அந்தவெளியெல்லாம் பரவிக்கொண்டிருக்கிறது......

'ஹலோ!'

திரும்பிப் பார்க்கிறேன்.

முற்றவெளிப் புல்தரையில் உட்கார்ந்திருந்த ஒருவர் என்னைப் பார்த்துச் சிரித்துக் கையசைக்கிறார்.

திரும்பி, இரண்டு அடி கிட்ட வந்து பார்க்கிறேன்! நண்பர் சிவலிங்கம்!

'நீங்கள் உள்ளே போக வில்லையா!'—அவர் கேட்கிருர். 'நான் ஒரு எழுத்தாளன், தமிழ் அபிமானி, ஆதலால் கட்டாயம் மண்டபத்துக்குள்ளே போயிருந்திருக்க வேண்டும்' என்பது அவருடைய எண்ணமாயிருக்கலாம்.

நான் பொதுவாக, இப்படிச் சனக்கூட்டத்துக்குள் நெரிபடுவதையோ, கூட்டங்களில் முதல் வரிசையில் போய் உட்காருவதையோ விரும்புபவனல்ல. அது அவருக்குத் தெரிந்திருக்காது. — அவர் என்னுடைய அத்தியந்த நண்பரல்ல. சும்மா ஒரு 'பத்தோடு பதினேராவது' நண்பர்தான்!

'வாருங்கள்!' என்ற அவருடைய அழைப்பை ஏற்று, அவருக்குப் பக்கத்தில் போய் நானும் உட்காருகிறேன்.

இதற்கிடையில்—

மண்டபத்துக்கு உள்ளே அந்தக் கூட்டத்தை நடத்த முடியாமல் நடத்துனர்கள் திணறிஞர்கள் போலும்! திணறுமல் என்ன செய்வது, மண்டபத்துக்குள்ளும் அதன் சுற்றுப்புறங்களிலும் சுமார் இரண்டாயிரம் பேர் இருந்தால், வெளியே சுமார் ஐம்பதினயிரம் பேர் அலைமோதிக்கொண்டிருந்தார்களே!

மண்டபத்துக்கு வெளியே உள்ள முற்றத்தில் ஒரு தற்காலிக மேடை அமைத்து, அதிலே கூட்டத்தை நடத்தப் போவதாக ஒலிபெருக்கிமூலம் செய்தி வருகிறது.

வெளியே உள்ள மேடைக்கு, உள்ளேயிருந்து பேச்சாளர்களும் ஒலிபெருக்கியும் வந்து சேருவதற்கே சுமார் அரைமணி நேரமாகிறது. — அந்தச் சனக்கோட்டையைப் பிளந்துகொண்டு அரைமணி நேரத்தில் வந்து சேர்ந்ததே பெரிய காரியந்தான்!

வெளியே கூட்டம் ஆரம்பமாகிவிட்டது.

தென்னிந்தியா விலிருந்து வந்த பேராசிரியர் நயினர் முகமது பேசிக்கொண்டிருக்கிருர்... திடீரென்று அவருடைய பேச்சுத் தடைப்படுகிறது. அவரே 'அமைதி! அமைதி!' என்பதுபோல ஏதோ சொல்கிருர்.

நானும் நண்பர் சிவலிங்கமும் எழுந்துவிட்டோம்.

கிழக்குப்பக்கத்திலிருந்து ரோட்டு வழியே ஒரு பொலிஸ் படை அணிவகுத்துவந்து கூட்டத்துக்குள் நுழைந்துகொண்டிருக்கிறது.

திடீரென்று அந்தப்பக்கத்திலிருந்து மக்கள் சிதறி ஓடுகிருர்கள்!

## நமக்கு நாமேதுணை

நம்முடைய முயற்சியின் ஆரம்பத்தில் நம்மைப் பிறர்ஒப்புக்கொள்ளமாட்டார்கள், பலர் துணை செய்யமாட்டார்கள். ஆனுல் நம்பிக்கையை கைவிடாமல் இருந்தால் காலக்கிரமத்தில் வெளியுதவிகள் தாமே வரும்; ஆரம்பத்தில் நமக்கு நாமே துணை!

'—பாரதியார்'

அனுப்பியவர்:
'சாந்தையூர் சக்திவேல்'

பொலிசார் ஏதோ சொல்கிருர்களா!...

'சட சட' என்று அடிதடிச் சத்தங்கள்!

அறிஞர்கள் அமர்ந்திருந்த மேடை ஆடுகிறதா!...... சரிகிறதா...... முறிகிறதா!...... குழப்பம்!

திடீரென்று ஆகாயத்தில் ஒரு மத்தாப்பு வெடிக்கிற வெடிப்பு! தொடர்ந்து இன்னென்று, இன்னென்று இன்னுமொன்று. 'பட், பட், பட்' என்ற வெடிச்சத்தங்களைத் தொடர்ந்து ஒரு புகை— ஒரே புகை!

கண் எரிகிறது... முகமெல்லாம் எரிச்சல்! வயிற்றைக் குமட்டிக்கொண்டுவரும் ஒரு அருவருப்பான உணர்வு.

ஐயையோ! துப்பாக்கிச் சூட்டைத் தாங்கிக்கொள்ளலாம் போலிருக்கிறதே, — இந்த எரிவையும் குமட்டலையும் தாங்கிக்கொண்டு நிற்க முடியவில்லையே!

இதுதான் கண்ணீர் புகைக் குண்டா!

நான் எங்கே நிற்கின்றேன்? நண்பர் சிவலிங்கம் எங்கே போய்விட்டார்?

எல்லாரும் வெளியே — வெளிக்கும் வெளியே ஓடிக்கொண்டிருக்கிருர்கள்; நிலைகெட்டு, நெறிகெட்டு ஓடிக்கொண்டிருக்கிருர்கள்!

நானும் ஓடத்தான் வேண்டும்—ஏனே ஓட மனம் வராமல் நிற்கிறேன். பயங்கரமானதெனினும் அந்தப் புதுமையை அனுபவிக்க வேண்டுமென்ற உணர்வு. அதையும் மிஞ்சி,

'இப்படி ஒரு சமூகத்தின் மகத்தான — மகா பிரமாண்டமான—அமைதியான ஒரு கூட்டத்தை, எந்தவிதமான அசம்பாவிதமும் நடைபெருத ஒரு சந்தர்ப்பத்தில் — யாருமே எதிர்பார்த்திராத வேளையில், பொலிஸ்காரர்கள் வெறிநாய்களாக வந்து ஓட ஓட விரட்டுகிருர்களே! இவர்கள் இப்படி விரட்டலாமா? இப்படி விரட்டப்படுவதற்கு இந்தச் சமூகம் —என்னுடைய சமூகம், அப்படிக் கேடுகெட்ட, கேவலமான நிலையிலா இருக்கிறது?'— நெஞ்சின் அடி ஆழத்திலிருந்து எழுந்த ஒரு உணர்ச்சி என்னை அந்தப் 'போர்க்கள'த்திலிருந்து வெளியே ஓடுவதற்கு அனுமதிக்கவில்லை.

என்னுள்ளே ஒரு ஆவேசம் பொருமி எழுந்துகொண்டிருக்கிறது...

இந்த அநியாயத்துக்கு எதிராக, இந்தக் கொடூரத்துக்கு எதிராக, இந்த மிலேச்சத்தனத்துக்கு எதிராக என்ன வேண்டுமானுலும் செய்யலாம்,...என்னையே அர்ப்பணிக்

கிலாம் என்பது போன்ற ஒரு உணர்ச்சி...

ஆனால், செய்வதற்கு ஒன்றுமில்லை!

ஒரு குறிக்கோளுமில்லாமல் அங்குமிங்கும் ஓடுகிறேன்.

ஒரு பெரியவர். கண்ணியமான ‘பெரிய மனிதர்’ போலத் தோன்றுகிறது. — நான் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே அவருடைய வேட்டி கழன்று இழுபடுகிறது. யாரோ இடித்துக்கொண்டு ஓடியவனின் கைபட்டு அவருடைய மூக்குக் கண்ணாடி எழும்பிப் பறக்கிறது. ஒரு கணம் அவர் தடுமாறுகிறார்...

நான் குறி தவறாமல் பாய்ந்து அவருடைய மூக்குக்கண்ணாடி மிதிபட்டு நசுங்குவதற்கு முன் எடுத்துக்கொண்டு, நிமிர்ந்து அவரைத் தாங்கிக் கொள்கிறேன். இதற்கிடையில் அவருடைய வேட்டி முற்றாக உரிந்து விடுகிறது. அதையும் சுருட்டி எடுத்துக்கொண்டு, அவரை அணைத்துப் பிடித்துத் தபாற்கந்தோர்ப் பக்கமாக இழுத்துக்கொண்டு வருகிறேன். ஒரு பூவரசமரத்தடியில் அவரை நிறுத்தி, வேட்டியைக் கட்டிவிட்டு, கண்ணாடியை அவர் முகத்தில் மாட்டிவிட்டு, ‘இனி மெதுவாகப் போய்ச்சேருங்கள் ஐயா!’ என்று சொல்லிவிட்டு, அவர் ஏதோ சொல்வதையும் கவனிக்க நேரமில்லாமல் திரும்பவும் வீரசிங்கம் மண்டபப் பக்கம் ஓடுகிறேன்.

எனக்கு எதிராக அல்லோல கல்லோலமாக ஓடிவரும் மக்கள் கூட்டம். வயோதிபர்கள், பெண்கள், சிறுவர்கள்...வழியிலே இடிபட்டு விழுந்த ஒரு சிறுமி—கூடவந்த தாயார் அவளைத் தூக்க முன்னரே சிலருடைய திருவடிகள் அவள்மீது பதிகின்றன. மேலும் அவள் நசுக்கப்படுவதற்கு முன், நான் ஓடிப்போய் குறுக்கே நின்று அவளைத் தூக்கித் தாயாரிடம் கொடுத்துவிட்டு மேலே போகிறேன்.

அங்கங்கே பொலிஸ்காரர்கள் கண்மூடித்தனமாகத் தடிகளைச் சுழற்றி அடித்துக்கொண்டிருக்கிறார்கள்; அவர்களின் தடிகளுக்குச் சற்று விலகி நான் ஓடுறேன்.

சனக்கூட்டத்தின் முரட்டு வேகத்துள் அகப்பட்ட ஒரு பொலிஸ்காரன் கூடத் தடுமாறிச் சரிவது தெரிகிறது. பாவம், யோசித்துப் பார்த்தால் அவனுடைய நிலைமையும் பரிதாபமானதுதான்!

றீகல் தியேட்டர் பக்கமிருந்து திடீரென்று சனக்கூட்டம் திசைமாறி, திசைகெட்டு, எதிர்நோக்கி ஓடுகின்றது.

நான் திரும்பித் தெற்கு நோக்கி ஓடுகிறேன்.

டச்சுக்காரன் கோட்டையின் அகழி குறுக்கிடுகிறது...

யோசிக்க நேரமில்லை. இன்னும் பலரைப்போலவே, சுமார் பத்து அடி ஆழமான அந்த அகழிக்குள் நானும் குதிக்கின்றேன். அகழிக்குள் தண்ணீரில்லை. பத்து அடி உயரத்திலிருந்து குதித்ததால் முழங்காலுக்குள் ‘விண்’ணென்று இருந்திருக்கும், அந்த நேரத்தில் உடல் வருத்தத்தைப்பற்றிச் சிந்திக்கவும் நேரமில்லை!



'தொபுக்கடீர்' என்று அகழிக் குள் விழுந்து, உடனேயே எழுந்து, 'கண்மண்' தெரியாமல் ஓடுகிறேன்.

கண்ணெல்லாம் கண்ணீர்ப் புகையின் எரிச்சல், மனமெல் லாம் என்னென்னவோ எரிச் சல்!

அகழிப்பாதையில். காலெல் லாம் நெருஞ்சி முள் தைக் கிறது. காலில் அணிந்திருந்த செருப்பு எங்கோ எப்போதோ விடைபெற்றுவிட்டது.

முள்ளின் வலியையும் கவனி யாது ஓடிக்கொண்டிருந்தவன் திடீரென்று நிற்கிறேன்.

அந்த அகழிப்பாதையில் ஒரு மனித உருவம் நெடுஞ்சாண் கிடையாகக் குப்புறக் கிடக் கிறது!

நான் கிட்டப்போய் அந்த உருவத்தைப் புரட்டுகிறேன், அது 'அவர்'ல்ல; அவள்!

அவளுக்குப் பேச்சு மூச்சு இல்லை. மயக்கமா? வருத்தமா? —யோசிக்க, ஆராய நேர மில்லை. அவளைத் தூக்கித் தோள்மீது போட்டுக்கொண்டு ஓடுகிறேன்.

முன்னால் ஓடிய சிலர், முனி யப்பர் கோவிலுக்குப் பின்புற மாக, மேலே ஏறிக்கரை சேரு கிறார்கள். மேலேயிருந்து யாரோ ஓடிவருகிறவர்களுக் குக் கைகொடுத்துத் தூக்கி விடுகிறார்கள்.

நானும் அந்தப் பெண்ணைத் தூக்கிக்கொண்டு அந்தப் பக்க மாகப் போய்ச் சேருகிறேன். மேலே யாரோ சில இளைஞர் கள். — உண்மையான சுத்த வீரர்கள்—தங்கள் உயிர் தப்பி னால் போதுமென்று ஓடிவிடா மல், அந்தரத்தில் ஓடிவரும் மக்களுக்கு உதவி செய்ய இதோ, நெஞ்சு நிமிர்த்தி நிற் கிறார்களே!—இந்த அந்தரத்தி லும் அந்த வீர இளைஞர்களை நினைத்து நெஞ்சில் ஒரு பூரிப்பு ஏற்படுகிறது.

மேலே நின்ற இளைஞர்கள் என்னிடமிருந்து அந்தப் பெண் ணைப் பத்திரமாகத் தூக்கி எடுக்கிறார்கள். பிறகு எனக் கும் கைகொடுத்து தூக்கிவிடு கிறார்கள்.

நான் மேலே வந்தபோது அந்தப் பெண்ணைத் தரையில் வளர்த்தி, இரண்டுபேர் பக்கத் திலிருந்து நிலைமையைக் கவ னிக்கிறார்கள்.

'தங்கச்சி, தங்கச்சி!' என்று ஒருவன் கூப்பிட்டுப்பார்க் கிறான்.

நான் போனதும், 'அறிவு வர வில்லை!' என்கிறான். நான் கிட் டப்போய் குனிந்து அவள் முகத்தில் கையை வைத்து அசைக்கிறேன்...

கையில் ஏதோ ஒட்டுகிறது. —சேறு?

யாரோ ஒரு நெருப்புக் குச்சி யைத் தட்டி வெளிச்சங்காட்டு கிறார்கள்.

அவள் முகத்தில் இரத்தம்!

நெஞ்சுக்குள் ஏதோ குளிர்ந்து விறைக்கிறது.

ஒருவன் அவள் முகத்தருகே விரலை வைத்துப் பார்த்து, 'மூச்சு வருகிறது!' என்கின் றான்.

எங்களுக்கும் பெருமூச்சு வரு கிறது.

என் மனத்தின் ஒரு மூலையில் ஏதோ குறுகுறுக்கிறது...

'யார் நெருப்புப் பெட்டி வைத்திருக்கிறது? இன்னொரு குச்சியைத் தட்டுங்கள்' என்கி றேன்.

நெருப்புக்குச்சி வெளிச்சம் மீண்டும் அவள் முகத்தைக் காட்டுகிறது.

ஓ, ஓ!...இவள்...இவள் என் னுடைய சித்தப்பாவின் மகள் செல்வி!

யாரோ ஒரு இளைஞன் எப் படியோ, எங்கிருந்தோ கொஞ் சத் தண்ணீர் கொண்டு வருகி றான். அதை அவள் முகத்தில் தெளித்து, முகத்திலிருந்து இரத்தத்தைத் துடைத்து 'செல்வி! செல்வி! என்று அவள் முகத்தை அசைக்கின்றேன்.

அப்பாடா!—அவள் லேசாக கண்களைத் திறந்து பார்க்கி றாள்...

நான் மீண்டும் அவளைத் தூக்கி எடுத்துக்கொண்டு நாலாம் குறுக்குத்தெருவில் இருந்த சித்தப்பாவின் வீடு நோக்கிப் புறப்படுகிறேன்.

'பஸ் ஸ்ராண்ட் பக்கம் போக வேண்டாம்! அங்கே பொலிஸ் காரர் கண்மூடித்தனமாக எல் லாரையும் அடிக்கிறார்கள்! பஸ் ஸுக்குப் போன சனங்களெல் லாம் பக்கத்துக் கடைகளுக் குள்ளும் ராணித்தியேட்டருக் குள்ளும் அடைக்கலம் புகுந் திருக்கிறார்கள்!...' என்று ஒரு வன் சொல்கிறான்.

"நான் நாலாம் குறுக்குத் தெருவுக்குப் போகவேணும்!'

"அப்படியானால் மெயின் ஸ்ரீட்டுக்குப் போகவேண் டாம். அங்கேயும் ரோட்டால் போன சிலபேருக்கு பொலிஸ் காரன்கள் அடித்துப்போட் டான்கள்! சில கடைகளைக்கூட நொருக்கிவிட்டான்கள்...பிசா சுகள்?... நீங்கள் இப்படியே வாசிகசாலை வளவுக்குள்ளால் போய், பிறகும் குறுக்கு 'லேன்' களால் போய்ச்சேருங்கள்!'

பண்பு நிறைந்த அந்த 'தமி ழரான' இளைஞர்களுக்கு நன்றி தெரிவித்துவிட்டு, அவர்கள் சொன்ன மாதிரியே சித்தப்பா வீட்டில் செல்வியைக் கொண்டு போய்ச் சேர்க்கிறேன்.

* * *

செல்வியின் தலையில் சிறு காயம்தான். அதிலிருந்து வழிந்த இரத்தம்தான் அவள் முகமெல்லாம் பரவிப் பய முறுத்தியிருந்தது. நல்ல வேளை யாக அது ஆபத்தான காய மில்லை. ஆனால்...

முற்றவெளியில் இருந்து அவள் அகழிக்குள் குதித்த பொழுது, அவளது இடது

# சித்திரையாள் சிரிக்கின்ருள்

— பொன்கை சிவபாலன் —

சித்திரை மங்கையும் வந்துவிட்டாள்—எழில்
சிந்திடும் வதனத்தைக் காட்டுகின்ருள்!
இத்தரையெங்கனும் இன்னல் களைந்தவள்
இல்லமெலாம் இன்பம் கூட்டிவிட்டாள்!
நித்தம் உழைத்திடும் ஏருழவர் வாழ்வு
நிறைமகிழ் வெய்திடச் செய்துவிட்ட—நல்ல
பத்தினித்தெய்வம் கண்ணகி போன்றதோர்
பைந்தமிழ்மங்கையைக்கண்டுகொண்டேன்!

பாரினில் எங்கணும் பஞ்சத்தைப் போக்கியே
பசுமை புரட்சியைக் காட்டிவிட்டு
வாரிவழங்கிடும் வள்ளல்களை
இந்நானிலம் அனைத்திலும் கூட்டிவிட்டாள்
பூரிப்புடன் மக்கள் புத்தாண்டுகொண்டாட
பூமியில் புதுவழி காட்டிவிட்ட—நல்ல
சீரிய சித்திரை மங்கையவள் ஒரு
சிங்காரச் சிரிப்புடன் வந்துநின்ருள்!

---

கணுக்காலில் எலும்பு முறிந்துவிட்டது!

அடுத்த நாளே அவளை 'முறிவு தெறிவு'வைத்தியரிடம் கொண்டு போனேம். அவரும் மிகுந்த கவனம் எடுத்துப் பார்த்தார்.

கேள்விப்பட்டவர்களெல்லாம் வந்து பார்த்தார்கள். சாதாரணமாக அந்தக்கால் முறிந்திருந்தால் அது வேறு மாதிரி. இது தமிழாராய்ச்சி மாநாட்டில் முறிந்த காலல்லவோ! — அதைப் பார்ப்பதிலும், அனுதாபம் தெரிவிப்பதிலும், மக்களுக்கு ஒரு விசேட அக்கறை.

செல்வியின் எதிர்காலக் கணவனுடைய வீட்டிலிருந்தும் சிலர் வந்து அவளைப் பார்த்தார்கள். மிகுந்த அனுதாபம் தெரிவித்தார்கள். ஐயோ, அந்த 'அனுதாபம்' அவளுடைய வாழ்வையே முறித்துவிட்டதே!

அவர்கள் வந்து பார்த்துவிட்டுப் போன இரண்டு நாட்களுக்கெல்லாம் ஒரு ஆள் வந்து சொன்னர். 'சொத்திப் பெண்ணைக் கட்டுவதற்கு அந்த மாப்பிள்ளைக்கு விருப்பமில்லையாம்!'

முறிவு தெறிவு வைத்தியர் வீட்டில் அவளை வந்து பார்த்த புதிய உறவுக்காரர், அந்த வைத்தியரிடமும் தனியாக விசாரித்தார்களாம். அவரும் 'யாரோ உறவுக்காரர்' என்று நினைத்துக்கொண்டு 'காலில் ஏற்பட்ட ஊனம் சரியாகிவிடும். ஆனல் கொஞ்ச நாளாகும்...' என்று இழுத்தாராம்.

அவ்வளவுமே போதுமாயிருந்தது அந்தப் 'பெரிய மனிதர்'களுக்கு! 'உந்தச் சொத்திப் பெண் எங்களுக்கு வேண்டாம்' என்று ஒரே வார்த்தையில் செல்வியின் இதயத்தை நொருக்கிவிட்டார்கள்!

'இது சாதாரணமாக உலகத்தில் நடக்கக்கூடிய விஷயந்தான். செல்வியை மணம் முடிக்க இருந்தவன் அவளைக் காதலித்தவனல்ல; பேசிப் பொருத்திய சம்பந்தம். திருமண நாளின் முன்பே, பெண்ணுடைய ஊனத்தை அறிந்து அவன் விலகிக்கொண்டான். உயர்ந்த பண்புள்ள ஒரு வாலிபனைத் தவிர, சாதாரணமான ஒருவன் செய்யக்கூடிய காரியந்தான் இது...' என்ருர் மூர்த்தி மாஸ்டர்.

'அவனை விட்டுத்தள்ளுங்கள் மாஸ்டர்!... தமிழாராய்ச்சி மாநாட்டின் கூட்டத்தை—சனசமுத்திரத்தை அடித்து நொருக்கி, ஈன இரக்கம் இல்லாமல் சித்திரவதை செய்வித்தானே ஒரு அரக்கன்!... செல்வியைப்போல எத்தனை பேரின் வாழ்க்கையை நாசமாக்கிவிட்டான் அவன்! அவனை, அந்தக் கயவனை... எனக்கு இரத்தம் துடிக்கிறது மாஸ்டர்!...'—இளங்கோ குமுறினன்.

திடீரென்று அங்கே கயல்விழி ஓடி வந்தாள்.

'இதைக் கேட்டீர்களா!...' என்று பேயறைந்தவள்போலக் கயல்விழி நின்ருள். அவளுடைய குரல் மட்டுமல்ல, உடலெல்லாம் பதறுவது தெரிந்தது.

'என்ன! என்ன!...' — கயல்விழியின் பதற்றத்தைக்கண்டு இளங்கோ துடித்துக்கொண்டு எழுந்தான்.

எதற்கும் பதருத மூர்த்தி மாஸ்டரும் சாய்வு நாற்காலியிலிருந்து நிமிர்ந்து உட்கார்ந்து கயல்விழியைப் பார்த்தால்.

'...செல்வி...'—கயல்விழியின் உதடுகள் துடித்தன.

'......?......?......'

'...செல்வி...நஞ்சு குடித்து...'

இளங்கோவிற்கும், மூர்த்தி மாஸ்டருக்கும் மூச்சு நின்றுவிடும் போல் இருந்தது. கயல்விழி பேச வாய் வராமல், இலேசாகத் தலையாட்டி 'ஓம், செல்வியின் கதை முடிந்துவிட்டது' என்று தெரிவித்தாள்.

இளங்கோவிற்கு இரத்தமெல்லாம் தலைக்கேறி விறுவிறுத்தது. மூர்த்தி மாஸ்டரைப் பார்த்து, 'மாஸ்டர்!...' என்ருன்.

மூர்த்தி மாஸ்டர் ஒரு கணம் செயலிழந்தவரைப்போல, இளங்கோவின் முகத்தைப் பார்த்தார் அவனுடைய உள்ளத்தின் உணர்ச்சிகளை அந்த முகத்தில் அளந்துவிட்டவரைப்போல, மீண்டும் சாய்வு நாற்காலியில் சாய்ந்து உட்கார்ந்தார். பிறகு, 'இனி ஒரு புதுயுகம் பிறக்கும்!' என்ருர்.

(முழுவதும் கற்பனையல்ல)

# எண்சீர் விருத்தமே அல்ல கட்டளைக் கலிப்பாவே!

எம். ஏ. நுஃமான்



சுடர், மாசி 1977 இதழில் வெளிவந்த பேராசிரியர் முனைவர் சாலை இளந்திரையன் அவர்களின் கட்டளைக் கலிப்பாவா எண்சீர் விருத்தமா என்ற கட்டுரை படித்தேன். பத்து ஆண்டுகளுக்கு முன்பு, எனது முதிரா இளமைப் பருவத்தில் சாலை இளந்திரையனின் யாப்பியல் சம்பந்தமான தவருன கருத்து ஒன்றை மறுத்து நான் தாமரையில் எழுதிய கட்டுரைக்குப் பதிலாக அது அமைந்துள்ளது. திரு. சாலை இளந்திரையன் அவர்களே அதன் தட்டச்சுப் பிரதி ஒன்றை சமீபத்தில் தனிப்பட்டமுறையில் எனக்கும் அனுப்பி இருந்தார்.

பத்து ஆண்டுகளுக்கு முன் எழுதி, தாமரையில் பிரசுரம் மறுக்கப்பட்டதாகக் கூறப்படும் அக் கட்டுரைக்கருத்துக்களை மறுபரிசீலனை செய்யாமல் எனது கருத்துப்பிழை என்று பல சான்றுகளுடன் நிறுவமுயன்றுள்ளார் அவர். நான் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளாத, கட்டளைக் கலிப்பாக்களே அல்லாத பாரதியின் வேறு சில பாடல்களையும் தனது கூற்றுக்குச் சாதகமாக உதாரணம் காட்டியுள்ளார். அதனுல் யாப்பியல் அறியாத வாசகர்களுக்கு சில மயக்கங்கள் ஏற்படக்கூடும். ஆகவே பொதுவாசகர்களின் தெளிவுக்காகவும், விவாதத்தின் உண்மை வடிவத்தைத் தெளிவுபடுத்துவதற்காகவும் முனைவர் சாலை இளந்திரையன் அவர்களின் பிழையான வாதங்களுக்கு நான் மீண்டும் பதில்சொல்ல வேண்டி உள்ளது.

நமது வசதிக்காக செப்டம்பர் 1967 தாமரை இதழில் திரு. சாலை இளந்திரையன் எழுதிய பாரதியின் பாட்டு வடிவங்கள் என்ற கட்டுரையில் இருந்து சர்ச்சைக்கிடமான பகுதி முழுவதையும் அப்படியே இங்கு தருகின்றேன்.

"முழுவதும் மாச்சீர் என்னும் சின்னஞ் சிறு ஈரசைச் சீர்களாலேயே பாடப்படும் எண்சீர்விருத்தம் விரைவான அல்லது களிப்பான நடையில் பாடுவதற்கு ஏற்றது.

மாதர்க் குண்டு சுதந்திரம் என்றுநின்  
வண்மலர்த் திரு வாயின் மொழிந்த சொல்  
நாதன்தானது நாரதர் வீணையோ  
நம்பிராந் கண்ணன் வேய்ங்குழல் இன்பமோ  
வேதம் பொன்னுருக் கன்னிகை யாகியே  
மேன்மை செய்தெமைக் காத்திடச் சொல்வதோ  
சாதல் மூத்தல் கெடுக்கும் அமிழ்தமோ  
தையல் வாழ்க பல்லாண்டு பல்லாண்டிங்கே

இந்தப்பாடலில் கொந்தளித்துத் துள்ளும் சுறு சுறுப்புக்கு இதன் அடிகளில் அமைந்த ஒரேவிதமான ஓசை அடைவே முக்கியமான காரணம். ஒரே அடியின் முதலாம் சீரும் அதற்கு மோனையாக வரும் அய்ந்தாஞ் சீரும் நேரசையில் தொடங்குவது இப்பாடலின் ஓசை ஒருமைக்கு அடிப்படை. ஆனுல் பாரதி இதே போக்கை இவ்விதமான எண்சீர் விருத்தங்கள் அனைத்திலும் ஒரே சீராகப் பின்பற்றவில்லை. சில அடிகளில் அய்ந்தாம் சீர் நேரசையில் தொடங்க மற்ற அடிகளில் அச்சீர் நிரையசையில் அமைந்து—

மற்றோர் பெண்ணை மணஞ் செய்த போழ்துமுன்  
மாத ராளிடைக் கொண்டதோர் காதல்தான்  
நிற்றல் வேண்டு மெனவுளத் தெண்ணிலேன்  
நினைவை யேயிம் மனத்திற் செலுத்திலேன்.

என்பது போல ஓசை மாறுபடும் இடங்கள் பல பாடல்களில் உண்டு. இசைப்பாடல்களில் இந்த மேடுபள்ளம் பெரிதாகத் தெரிவதில்லை; பாடுகிறவர் நீட்டியோ குறைத்தோ பாடிச் சரிக்கட்டிக்கொள்ளுவார் — கவிதையில் இக்குறை அவ்வளவு எளிதாக நிரம்பத் தக்கதன்று.

தொடக்க காலத்தில் மட்டுமல்லாமல் 1909 ல் எட்டயபுரம் அரசருக்கு எழுதிய சீட்டுக்கவிகளிலும் பழைய யாப்பு வடிவங்களைப் பழைய இலக்கண முறைப்படியே கையாண்டுள்ள பாரதி மேலே குறிப்பிட்ட இடங்களில் தெரியாமல் பாடிவிட்டதாகச் சொல்ல முடியாது. பிரச்சாரத்தின் பேராலும் மக்களுக்கு விளங்கவேண்டுமென்ற கருத்தின் விளைவாக

வும் எளிமையே முதன்மைபெற்று இசைப் பாட்டு அதற்குரிய மூன்மாதிரியாகக் கொள் ளப்பட்டதால் கவிதையில் ஏற்பட்ட பாதிப்பு இது!!"

மேற்காட்டிய சாலை இளந்திரையனின் கட்டுரையில் வரும் முதலாவது பாடல் புதுமைப் பெண்ணிலும் இரண்டாவது பாடல் சுய சரிதையிலும் இடம் பெற்றுள்ளன. இவ்விரு பாடல்களும் இளந்திரையன் குறிப்பிடுவது போல் "முழுவதும் மாச்சீர் என்னும் சின்னஞ் சிறு ஈரசைச் சீர்களாலே பாடப்படும் எண் சீர் விருத்தங்கள் அன்றிக் கட்டளைக் கலிப் பாக்களே" என்றும் இவை மட்டுமன்றி பாரதி யின் கண்ணன் என் அரசன், பராசக்தி, மஹாசக்தி வாழ்த்து முதலிய பாடல்களும் இக்கட்டளைக் கலிப்பா உருவத்திலேதான் அமைந்துள்ளன என்றும், சாலை இளந்திரையனுக்கு கட்டளைக் கலிப்பாவின் உருவமும் யாப்பும் அறிமுகம் இல்லாத காரணத்தால் அதனை எண்சீர் விருத் தமாகக் கொண்டு பாரதியில் தவறுகண்டுள் ளார் என்றும் ஆயினும் பாரதி தனது வெண் பாக்கள் சிலவற்றில் தளைமீறல் செய்திருக்கின் முன் என்றும் பாரதியின் இலக்கணப்பிழை? என்ற எனது தாமரைக்கட்டுரையில் குறிப் பிட்டிருந்தேன். ஆனுல் எனது கருத்தை மறுக்க முனைந்த இளந்திரையன் அவர்கள் எமது விவாதத்துக்குப் புறம்பாக கட்டளைக் கலிப்பாக்களே அல்லாத சில பாடல்களையும் உதாரணம் காட்டி இவற்றை எல்லாம் கட்ட ளைக்கலிப்பாக்கள் என்று சொல்ல முடியுமா? என்று கேட்டு மிகச் சுலபமாக எனது கருத்தை மறுக்க முனைந்துள்ளார். அவை நமது விவாதத்துக்கு உரியன அல்ல.

சாலை இளந்திரையன் அவர்கள் தாமரைக் கட்டுரையில் எண் சீர் விருத்தம் என்று கூறி உதாரணம் காட்டிய மேற்காட்டிய பாடல் களையே நான் கட்டளைக் கலிப்பாக்கள் என் றேன்; இன்றும் சொல்கிறேன். அவற்றை திரு. இளந்திரையன் கட்டளைக் கலிப்பாக்கள் அல்ல எண்சீர் விருத்தமே என்று கூறுவதற்குக் காட் டும் காரணங்களை இனி நாம் பரிசீலிப்போம்

(1) 'கட்டளைக் கலிப்பாவின் அரையடி யில் முதற் சீர் மாச்சீரும் ஏனைய மூன்றும் கூவி ளச்சீருமாக வருவதுபெரும்பான்மை' என்னும் இலக்கணத்தை இப்பாடல்களில் பாரதி தெளி வாகப் பின்பற்றவில்லை என்பது சாலை இளந்தி ரையன் காட்டும் ஒருகாரணம். இளந்திரை யன் எடுத்தாண்ட பாடலையே நாம் நோக்க லாம் — சீரமைப்புக்கு ஏற்ப பாடலைப் பின் வருமாறு பிரிக்கவேண்டும். செய்யுளில் சீர மைப்பும் ஒன்றுக இருக்கவேண்டியதில்லை என் பது யாவரும் அறிந்ததே.

மாதர்க் குண்டுசு தந்திரம் என்றுநின்
வண்ம லர்த்திரு வாயின்மொ ழிந்தசொல்
நாதந் தானது நாரதர் வீணையோ
நம்பி ரான்கண்ணன் வேய்ங்குழல் இன்பமோ
வேதம் பொன்னுருக் கன்னிகை யாகியே
மேன்மை செய்தெமைக் காத்திடச் சொல்வதோ
சாதல் மூத்தல்கெ டுக்கும மிழ்தமோ
தையல் வாழ்கபல் லாண்டுபல் லாண்டிங்கே

இச் சீர் அமைப்பை யாப்பியல் வாய்ப் பாட்டில் தருவதானுல் அது பின்வருமாறு அமையும்.

தேமா கூவிளம் கூவிளம் கூவிளம்
தேமா கூவிளம் தேமாங்காய் கூவிளம்
தேமா கூவிளம் கூவிளம் கூவிளம்
தேமா தேமாங்காய் கூவிளம் கூவிளம்
தேமா கூவிளம் கூவிளம் கூவிளம்
தேமா கூவிளம் கூவிளம் கூவிளம்
தேமா தேமாங்காய் கூவிளம் கூவிளம்
தேமா கூவிளம் கூவிளம் தேமாங்காய்

இதன்படி முதற் சீர் அனைத்தும் தேமா வாகவே வந்துள்ளன. ஏனைய 24 சீர்களில் 20 சீர்கள் கூவிளமாகவும் 4 சீர்கள் மட்டும் தேமாங்காயாகவும் வந்துள்ளன. ஏனைய மூன் றும் கூவிளச் சீராக வருவது பெரும்பான்மை என்பதுதான் யாப்பருங்கலக்காரிகை உரை. பெரும்பான்மையின் விகிதாசாரம் அங்கு தரப்படவில்லை. ஆயினும் இருபத்திநாலுக்கு இருபது என்பது அதிகபட்ச பெரும்பான்மை என்பது வெளிப்படை. தவிரவும் இங்கு வந் துள்ள நான்கு காய்ச்சீர்களும் கூட வல்லின ஒற்றுக்கள் அல்லாமல் ன், ண்: ல், ள், ஆகிய மெல்லின இடையின ஒற்றுக்களைக் கொண்டு அசைகளைக் கூர்மையாகப் பிரிக்கக் கூடிய அழுத்தம் அற்று கூவிளச் சீர் போலவே குறைந்தொலிப்பதையும் உணர முடியும். இது எவ்வாறு போயினும் நான் எடுத்துக் காட்டிய கட்டளைக் கலிப்பாவின் யாப்பிலக் கணத்தை அடியொற்றி சாலைஇளந்திரையனே வரிசைப்படுத்திக் கூறி இருக்கும் கட்டளைக் கலிப்பாவுக்குரிய ஐந்து இலக்கண அம்சங்க ளும் இப்பாட்டில் நன்கு பொருந்தி உள்ளன. அதாவது

(1) நான்கு அடிகள் வந்துள்ளன.

(2) நேரசையில் தொடங்கினுல் அரை யடிக்குப் பதினெரு எழுத்து வந்துள்ளது.


(3) அரையடிக்கு நான்கு சீர்கள் வந் துள்ளன.

(4) பாட்டு ஏகாரத்தால் முடிந்துள்ளது.

(5) ஒவ்வொரு அடியிலும் முதல்சீர் மாச்சீராகவும் ஏனைய மூன்றும் கூவிளச் சீராக வும் பெரும்பான்மையாக வந்துள்ளது.

இவ்வாறு கட்டளைக் கலிப்பாவுக்குரிய இலக்கணம்யாவும் நன்கு பொருந்தியுள்ள இப் பாடலை "முழுவதும் மாச்சீர் என்னும் சின்னஞ் சிறு ஈரசைச்சீர்களாலேயே பாடப்படும் 'எண் சீர் விருத்தம்" என்று திரு. சாலை இளந்திரை யன் கூறலாமா? இதில் எட்டு மாச்சீர்கள் மட்டும் தானே உள்ளன. அவரது முதல் வாக் கியமே மிகமிகத் தவருனது அல்லவா? சாலை இளந்திரையன் சொல்வதுபோல் இது ஒரு கட் டளைக் கலிப்பாப் போலியா? யாப்பறிந்த யாரும் இதை ஏற்றுக்கொள்வார்களா?

— அடுத்த இதழில் முடியும்



# விதவையும் வேதாந்தியும்

தீயசெயல் வேரறுத்து, நீதி காத்து,
திருச்சிநகர் தனை ஆட்சி செய்து வந்த,
நாயக்கர் விஜயரகு நாத சொக்க
லிங்கத்தின் மனையாட்டி, நறுந்தேன் தொட்டி!
சாயலிலே மயில்காட்டி, கூந்தல் தன்னில்,
சதிராடும் அம்மயிலின் தோகை காட்டி;
தூயதமிழ்க் கிளிப்பேச்சு பேசும் மாது!
துரைத்தனநூல் பயிற்சியிலே தேர்ந்த நங்கை.

இருபந்து எடுத்தாடும் இடையாள்; நல்ல
எழிலுடையாள்; அன்னத்தின் நடையாள்; மங்கை
பருவத்தாள்; செண்பகப்பூ நிறத்தாள்; நான்கு
பழங்காட்டும் செம்பவளக் கொடியாள்; வண்ண
வரிவிழிக்கு மைஉணவு ஊட்டி, அந்த
வரிவிழியை கொல்லன்கூர் அம்பு ஆக்கி
சரசகலை வளர்க்கையிலே கணவன் மார்பில்
தைத்தெடுத்து, வாய்மருந்து அளித்த மாது!

அவள் அரசி; அவள்விதவை; வண்டு மொய்த்த
அரவிந்தம்! பருவபக் குவங் கெடாத
குவளைமலர்! பெருந்துறவி, தாயுமானார்,
குன்றுநிகர் தோள்மீது சாய்ந்து, காமச்
சுவைபருகி இனித்திருக்க வேண்டும் என்று
துடிதுடித்துக் கொண்டிருந்த காமப் பாவை.
புவிஉறங்கும் நேரத்தில், விதவை, சைவப்
புலவனைப்போய் அழைத்துவர ஆணையிட்டாள்!

நெய்வைத்த விளக்கெரியும் இரவில், சைவ
நினைவுகளை உருவாக்கும் துறவி வந்தான்.
மைவைத்த விழிகளொடு அரசி வந்து
வரவேற்றாள்; உபசரித்தாள்; பருவ ஞானி
சைவத்தின் மேற்சிறந்த சமயம் இந்தத்
தரணியிலே வேறில்லை என்றான், நீங்கள்
பொய்வைத்த மெய்என்பீர் உடலை; உங்கள்
பொன் அழகு இப்புவியில் எவர்க்கு உண்டு?
ஈயாத மாந்தர் பொருள் தேய்தல் போன்ற
இடையுடையாள்; ஒய்யார நடையாள்; என்றும்
தேயாத நிலாபோன்ற வதனந் தன்னில்
தேன்ஊற்று இருப்பதுஏன்? நீல மீன்கள்,
ஓயாமல் துள்ளுவதேன் முகத்தில், என்றன்
உத்தரவைக் கேட்காமல், என்று, அன்னோன்
வாயீரந் தனைவிரும்பும் விதவை கேட்டாள்.
வடிவழகன், அதைக் கேட்டுத் திகைக்கலானான்

நீர்வழங்கும் காவிரியில் அரசனோடு
நிலாமுதிர்ந்த இரவினிலே, தெப்பம் ஏறி,
ஊர்ப்புறத்தின் அழகுதனைக் கண்டோம் ஓர்நாள்.
உமக்குஎந்தக் கனிமிகவும் பிடிக்கும் என்றத்
தேர்வேந்தர் கேட்கையிலே, அதற்கு நீங்கள்
தேமாவின் கனிஎன்றால் விருப்பம் என்றீர்.
தார்வேந்தன் தின்றுவந்த கன்னந் தன்னைத்
தருகின்றேன்! மாம்பழந்தான். இதுவும் தின்பீர்!

ஒருகொடியில் நான்குவிதக் கனிகள், இந்த
உலகத்தில் எங்குமில்லை, ஆனால் என்றன்.
அருகினிலேவாருங்கள், அன்பே! வண்ண
அதரத்தில் செங்கோவைக் கனிபாருங்கள்!
குருத்துப்பல் கூட்டம்மா துளைகள் அன்றோ?
குதிகால்கள் புது அத்திப் பழங்கள் அன்றோ?
நிருவாணம் ஆக்குங்கள். எனது மார்பில்
நிச்சயமாய் இருவில்வப் பழங்கி டைக்கும்!

உதட்டின்மது தருகின்றேன்; வியர்வை என்னும்
உப்புமது, நெற்றிதனில் வழிய வைப்பீர்.
நதிப்படகு நான் இனிமேல்; என்னை நீங்கள்
நடத்துகின்ற படகோட்டி; கன்னம் என்னும்.
சதைப்பழத்தைச் சுவைபார்ப்போம்; ஒட்டிக்கொண்டு
சத்தான இருள்திருநாள் காண்போம்; காமக்
கதைபேசி, இருநிழலை ஒன்று சேர்ப்போம்.
கலவியிலே ஊமையராய் இருப்போம் என்றாள்;

கக்கத்தில் இடுக்கிவிட்டாய் வெட்கந் தன்னை;
காமத்தால் ஏதேதோ பிதற்றுகின்றாய்,
திக்கெங்கும் புகழ்வைத்தார் மன்னர்; நீயோ,
சேற்றினிலே கதைஎழுத முயலுகின்றாய்.
குக்கலெனும் நாயின்பல் வாழ்க்கை வேண்டாம்,
குஞ்சரத்தின் தந்தம்போல் இருந்து வாழ்க!
இக்கணமே மாறட்டும் தழும்பு எண்ணம்,
என்றிட்டான் மறைக்காட்டில் பிறந்த மேதை!

முன்பக்கம் தேன்கிண்ணம் என்னும் பூவை
முத்தமிடும், கருநீல வண்டின் கூட்டம்;
பின்பக்கம் மாமரத்தில் அமர்ந்து காமப்
பித்தத்தை உண்டாக்கும், குயிலின் ஓசை;
என்தலைக்கு மேல்நிலவு என்னும் கொள்ளி;
இவற்றோடு, தென்றலெனும் நெருப்பு ஓட்டம்.
என்செய்வேன் இத்தனையும், தினமும் என்னை
இம்சித்தால்; சுட்டெரித்தால்: கொன்று வந்தால்.

ஊர்முழுதும் தீப்பற்றி, எரியுமானால்,
உடனேபோய், அவ்வூரி லேயிருக்கும்,
ஓர் குளத்தில் மூழ்குவதன் மூலம், தீயின்
உபத்திரவம் வாராமல் தடுத்தல் கூடும்,

நீர்க்குள்ளே இருந்தாலும், காமம் என்னும்
நெருப்புவந்து தேகத்தைச் சுடுமே! அந்த
ஊர்ப்பக்கம் உள்ளதொரு குன்றில் ஏறி
ஒளிந்தாலும், விடுவதுண்டோ காம வெப்பம்

துட்டமதன் அம்புளனைத் துளைக்க; அந்தத்
துளைவழியே, பொதியமலைத் தென்றல் வந்து
கொட்டமடித் ததுபோதும்; அன்பே! என்னைக்
கொத்துங்கள், கிளிகொத்தும் கனியைப்
போல.

எட்டிநின்று, வருத்தாதீர்! நாள்தோறும்நான்
எடுத்தெறியும் பெருமூச்சுக் காற்றால்; ஆட்டி
விட்டதொரு ஊஞ்சலைப்போல் பறவைக் கூடு.
வேலமரக் கிளைதனிலே அசைதல் பாரீர்!

உலகத்தின் சுவர்க்கம் எது? சொல்லும்
ஸ்வாமி?
உயிர்நிலவாம், மாதர்உடல் தானே! கம்பன்,
நிலையான காவியத்தை எழுது தற்கு,
நீலவிழிப் பெண்போகம் உதவிற் றும்மே!
மலைபோன்று அசையாமல் ஏன்நிற் கின்றீர்?
வாயிருந்தும் மௌனம் ஏன்? என்னை நீங்கள்
கொலைசெய்து போட்டுவிட்டுப் போங்கள்;
இல்லை
கொஞ்சுங்கள்! இனிமேல் நான் தாளமாட்
டேன்!

பாளையினால் இளநீரை மூடினாலும்
பச்சிளநீர் முழுதாக மறைவ தில்லை;
ஆளுகின்ற பேரரசி, ஆடை தன்னால்
அவ்வாறே, முழுமார்பை மூடிடாமல்;
காளைமுன்னால், உரையாடிக்கொண்டே
அன்னேன்
கரந்தன்னைப் பிடித்திழுத்து இதுவே நல்ல
வேளை என்று உரைத்தபடி, ஆங்கிருந்த
விளக்கணைத்தாள்; அவளிருந்தாள். அவனைக்
காணோம்!

— சுரதா



# சுடரே வாழி

— வீ சித்தாராமன் —

ஈழத் தமிழகத்தின் இருள்
அகன்றிடும் இனிய எதிர்
காலத்தைக் கருத்திற் கொண்ட
கன்னித் தமிழ்ச் சுடரே — தமிழ்
ஆழத்தை உணர்ந்தாய் நீயே — அதன்
அழகினைப் புரிந்தாய் தாயே — தமிழ்க்
கோலத்துடன் மலர்ந்தாய் நீயே!
குலக் கொழுந்தாய் மிளிர்கின்றாயே! ...

அந்தி வேளையில் ஒரு சஞ்சிகையும்,
அதிகாலையில் ஒரு சஞ்சிகையும்,
சந்ததமும் ஒவ்வோர் சஞ்சிகையாய்
சடுதியில் மறைந்திடும் இந்நாளில் —
வந்தனைக் குரியளாய் வாழ்கின்றாயே!
வண்ணமுறத் திகழ்கின்றாயே!
சிந்தை குளிர்ந்திட வாழ்த்துகின்றேன்!
சீரும் சிறப்பும் பெறுவாயே! ...

அமிழ்தினும் இனிய படைப்புகளை
அடிக்கடி படைப்பதில் தவறாயே — உயிர்
தமிழ் மொழியின் தனிச் சிறப்பைத்
தரணிக்கு நவில்வதில் தயங்காயே!
கமழ்ந்திடும் தமிழ்க் கருத்துக்களைக்
காலம் முழுதும் தருவாயே — என்றும்
அமைதியாகப் பணிபுரியும் உன்னை
அழகுத் தமிழால் வாழ்த்துகின்றேன்!

நெஞ்சம் முழுதும் நிறைந்தாயே!
நல்லிலக்கியங்களை நவில்வாயே — ஈழத்து
சஞ்சிகை உலகின் சரித்திரத்தில்
சீரிய ஈராண்டுச்சேயெனத் திகழ்கின்றாயே!
அஞ்சாது சேவைகளை ஆற்றும் சுடரே,
ஆண்டுகள் பலவாய் வாழ்வாயே!
கொஞ்சும் தமிழ் மொழிச் சுடரே,
குறைவிலாது வாழ்வாயே!...

———————

## தீன்பாடற்றிரட்டு-3

(குப்பைக்கீரை)

முப்பை இருந்தாலும் முழுதுங்கடைந்திடலாம்
குப்பைத்தனிக்கீரை குண்டானில்—
உப்பொன்றே
போதும் எலுமிச்சம் புளியுங்கிடைத்திட்டால்
ஏதும் குறையே இலை!

—''சாப்பாட்டுக் கவிராயர்''

[10]

நோயாளி பதவியைத்துறப்பதும் — இயலாதவன் பொருளை இழப்பதும் — அனுபவிக்க முடியாதவன் பெண்ணை வெறுப்பதும் ஆற்றாமையின் விளைவுகள். அனைத்தும் இயன்றவன் — அனைத்தையும் துறப்பதே ஆண்மையின் அழகு.

— கவிஞர் கண்ணதாசன்.

# சாத்தான் வேதம் ஓதுகின்றது

சமூக நவீனம்

உலகில் சகலதையும் அறிந்து உணர்ந்து வாழ்கின்ற மனிதனே மகிழ்ச்சியுள்ளவனாக வாழ்கின்றான். இத்தகைய ஒருவனுடைய அன்பு ஒருத்தருக்குள் கட்டுப்பட்டு நிற்காது பரந்த அடிப்படையில் இயங்கக் கூடியது. பிறரிடம் அன்பு செலுத்துவதாலேயே ஒருவன் பிறரால் அதிகம் விரும்பப் படுகின்றான். பணத்தை எண்ணிக் கொடுப்பது போல அளந்து வாங்குவது அல்ல அன்பு,ஏதோ ஒருவழியில் நாம் செலுத்துகின்ற அன்பு பிறரிடமிருந்து எம்மீது திரும்ப ஏதுவாயிருக்கின்றது. அப்படிப்பட்ட ஒரு நிலைதான் கணவன் மனைவியுடையதும் என்பதற்கு சாட்சியாக மனோகரும், சாவித்திரியும் விளங்கினர்.

சாவித்திரி கொஞ்சம் புத்தி சாலித்தனமாகக் கதைக்கக் கூடியவள். மனோகரின் மன உணர்ச்சிகளை அறிந்து அதற்கு ஏற்றாற் போல நடந்து கொண்ட காரணத்தால் வெறுப்புணர்வுகள் மண்டிக் கிடந்த அவனது இதயத்தினை தன்மீது திரும்பவைத்து விட்டாள். அதுமட்டுமன்றி நயமாகப் பேசி தன் உணர்வுகளால் அவனைக் கட்டியாண்டு கொண்டாள்.

மனிதனை இனம் கண்டு கொள்ளுமுன் அவன் மனத்தினை இனம் கண்டு கொள்ள வேண்டும். மனம் தான் மனிதனை உருவாக்குகின்றது. அந்த மனம் மாறுபட்டு இயங்க ஆரம்பித்தால் மனித உருவிலிருந்தாலும் ஒருவன் மனித உணர்வுகளுக்கு அப்பாற்பட்ட உணர்ச்சிகளுக்கு ஆளாகிவிடுகின்றான். இப்படிப்பட்ட சூழ்நிலையில் மாறுபட்ட இயல்பூக்கம் கொண்ட ஒருவனுடன் தான் பிணைக்கப்பட்டிருப்பதை இனம் கண்டு கொண்ட சாவித்திரி அவனுள்ளிருக்கும் மனித உணர்ச்சியை தீனி போட்டு வளர்க்க வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டே தன்னை அர்ப்பணம் செய்தாள்.

புளித்துப் போன மொந்தைக் கள்ளைக் குடித்துப் பழகிய ஒருவனுக்கு தித்திப்பான புதுக்கள்ளு பிடிக்குமோ? — பிடிக்காதோ? குடித்து அனுபவப் பட்டவர்கள் கூறுவதிலிருந்து ... இனிப்பான புதுக் கள்ளைவிட புளித்துப்போன மொந்தைக் கள்ளில்தான் வெறியும், சுவையும் அதிகம். என அறிய முடிகின்றது. மதுவும் மங்கையும் ஒருநிலை என்று கூறமுடியாது. ஆனாலும் புது மணப் பெண், கைபடாத ரோஜா என்று கவிஞர் வர்ணிக்கும் புத்துடல், அவளுடன் அனுபவித்த இன்பம் அதுவும் சுய உணர்வுடன் பெற்ற இன்பம் அவனுக்கு ஓர் ஆத்ம திருப்தியை உண்டு பண்ணியிருந்தது.

பெற்றோர் நினைத்தது ஒன்று. அவர்களுக்கிடையில் நடந்தது இன்னொன்று. வாழ்க்கையின் முதற் படியில் பிரச்சினைகளிருந்த போதும் சுமுகமாயிருந்தது. நாட்கள் இனிமையாக நகர்ந்து கொண்டிருந்தன. ஓரளவுக்கு மது அருந்துவதை அவன் குறைத்துக் கொண்டு விட்டான். எதையும் அளவுடன் வைத்திருந்தால் எதற்கும் நல்லதென்று ஓர் புதிய அனுபவத்தினை அவள் மூலம் படித்துக் கொண்டான், பொன்னையாவின் பழைய கல்வீட்டைச் சுற்றிவரத் தோட்டம். தோட்டக் காணிகள் நிறைந்திருந்த அப்பகுதியில் புகையிலையும், உருளைக்கிழங்கும், மிளகாயும் கத்தரியும் போட்டி போட்டுக்கொண்டு வளர்ந்திருந்தன. திரும்பிய பக்கமெல்லாம் பச்சைப் பசேல் என்று குளுமை. சாவித்திரியின் உள்ளமும், உடலும் குளுமை பெற்றிருந்ததினால், சூழ்நிலையும் குளு குளு என்றிருந்ததோ என்று நினைக்கும்படியாயிருந்தது.

அவள் மூன்று மாதமாகக் குளிக்காமல் இருந்தாள். தாய்மையின் அறிகுறி அவள் மேனியில் ஓர் புதிய மெருகினைக் கொண்டு விளங்கியது. மதர்த்து வளர்ந்த கத்தரிச் செடியில் வழு வழு என்று கொழுத்திருந்த காய் போல அவள் கழுத்துப்பக்கம் புதிய வாளிப்புடன் காட்சியளித்தது. அவள் தன்னை மறந்தவளாய் மனித முயற்சியின் பயனாய் விளைந்து குலுங்கும் பயிர்களைப் பார்த்துக் கொண்டு நின்றிருந்தாள்.

மாலை மூன்று மணியிருக்கும். தெற்குப் பக்கமிருந்து வண்ணாத்திப் பூச்சிகள் ஒன்றன்பின் ஒன்றாக வடக்கே பறந்து கொண்டிருந்தன. ஒன்று பத்தல்ல — நூறு ஆயிரம் என்று பறந்து கொண்டிருந்தன. கீழே மரகதப் பாய் விரித்தது போன்று பயிர்களின் பச்சை நிறம். உருளைக்கிழங்கில் விரிந்திருக்கும் ஊதா நிறப் பூக்கள் கத்தரிகளில் மலர்ந்திருக்கும்

## சுவர்க் கவிதைச் சொந்தக்காரன் யார்?

குக்கிராமமான எங்கள் உரிலுள்ள பாழடைந்த பொதுக் கட்டிடச் சுவரொன்றில், யாரே ஒருவர் கரியால் எழுதிய கவிதையொன்று காணப்படுகின்றது. இதை எழுதியவர் தனது பெயரைக் குறிப்பிடாததனால்; கவிதையின் சொந்தக்காரன் யாரென்றே தெரியவில்லை. எனினும் எழுதியவர் முற்போக்கு மனமுடையவராக — சீர்திருத்தவாதியாக இருப்பார் போலும்! இதோ அக்கவிதை —

‘‘வீணாக வாய்க்குள்ளே விரலைவைத்து
விசிலடிக்கும் இளைஞர்களே கொஞ்சங் கேளும்!
காணாத புதுமையெதைக் கண்டு விட்டீர்?
கவைக்குதவா கஞ்சல்களாய் ஆகாதீரே!
தூணாக நின்றுழைக்கும் வலிமை கெட்டுத்
தூரத்துப் பச்சையதில் மயங்க வேண்டாம்!
ஆணாகப் பிறந்ததிலே அர்த்தமுண்டு
அடிவருடி வாழ்வதனை அறவேதள்ளும்!.’’

கவிதை சரியோ, பிழையோ தெரியவில்லை — இப்படித்தான் சுவரில் எழுதப்பட்டுள்ளது.

— தகவல்; — எஸ். ராஜேந்திரன்,
மு; சுந்தர ராஜன்,
நறுவிலியூர்.

கத்தரிப் பூக்களின் (வயலட்) நிறம் பார்ப்பதற்கு அழகு பிரமிக்கும் ஆனந்தக் காட்சிகள். அவள் பிறந்தது முதல் வளர்ந்த அந்த வீட்டின் சூழலை அன்று போல என்றும் அவள் ரசித்ததில்லை. அதற்கும் அவளுடைய மலர்ந்தநிலைதான் காரணமோ?

‘‘சாவித்திரி என்னம்மா அப்படியே மெய்மறந்திருக்கின்றாய்?’’ என்று கேட்டவாறே அங்குவந்து சேர்ந்தான் பரமலிங்கம்.

‘‘இந்த வண்ணாத்திப்பூச்சிகளைப் பார்த்தியா அண்ணா?’’

‘‘ஆமா வெகுபிரமாதமாயிருக்கின்றன. மஞ்சள் திருவாத்திப் பூக்கள் இதழ் உதிர்ந்து காற்றில் பறப்பது போல இருக்கின்றன.’’

‘‘அழகான உதாரணம் அண்ணா’’

‘‘இதை முன்பு நீ பார்த்ததில்லையா?’’

‘‘பார்க்காமல் என்ன. பார்ப்பதை ரசிக்கும் மனோ நிலையும் வர வேண்டுமே.’’

‘‘அதுசரி. என்னைவிட இவை புண்ணியம் செய்தவை தான்.’’

‘‘என்னண்ணா அப்படிச் சொல்கின்றாய்?’’

‘‘வேறு எப்படிச் சொல்லுவேன். என்னுடைய ஊனக் கால்களைத்தான் பாரேன். இப்படிக் கால்களைத் தந்து மனிதனாய் என்னைப் படைத்த கடவுள் இப்படி ஒரு வண்ணாத்திப் பூச்சியாய் படைத்திருந்தாலாவது நான் பறந்து திரிந்திருப்பேன்,’’ என்றான்.

அவனுடைய மனதில் பிறப்பின் கொடுமை பற்றிய எண்ணம் விரிசல் கண்டது. சந்தோஷம் — துன்பம் சூழ்நிலையைப் பொறுத்ததா? மனதைப் பொறுத்ததா? என்ற கேள்வி எழுமாயின் மனதைப் பொறுத்தது என்றுதான் கூறவேண்டும். அவனுடைய மன உணர்ச்சிகளை மாற்றுவதற்காக பேச்சைத் திசை திருப்பினாள் சாவித்திரி.

‘‘அது சரியண்ணா இவை எங்கே போகின்றன?’’

‘‘யாருக்குத் தெரியும். லட்சக் கணக்கில் போகின்றன. இவற்றுக்கு முடிவு ...?’’

‘‘முடிவு ...? என்னண்ணா?’’

‘‘மரணம் தான். கடவுள் வாழ்க்கையின் ஆரம்பத்தையும் முடிவையும் நிர்ணயித்து விட்டான். இடையில் நாம் எவ்வளவோ ஆடுகின்றோம். ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரோ’’

‘‘அண்ணா நீங்கள் ஒரு ஆசிரியராய் போயிருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்?’’

‘‘எனக்கு அது இல்லாத குறைதான்.’’ என்று கூறி விட்டு எழுந்து சென்றான்.

குடும்பத்தில் மூத்தவனாகப் பிறந்தும் ஊனப்பிறப்பினால் மனிதன் சுகபோகம் எனக் கருதும் சிலவற்றைக் கூட வேண்டாம் என வெறுத்து ஒதுக்கி விட்டு வீடே கதி என இருக்கும் பரமலிங்கம் பற்றி சாவித்திரிக்கும் துன்பம் தான். அவனுடைய முடிவை எவருமே மாற்ற முடியாது. தனக்குப் பிடித்தமானதை தன் தங்கையிடமே மனம் திறந்து கூறி விடுவான். அதுபோல அவள் வாழ்வைப் பற்றியும் அவனுக்கு அக்கறையுண்டு. சாவித்திரியின் கணவன் மனோகர் மீது அவனுக்கு ஏதோ ஒரு வெறுப்புணர்வு. அவனோடு அதிகம் கதைப்பதும் இல்லை.

பரமலிங்கம் சாவித்திரியுடன் கதைத்துக் கொண்டிருந்ததை ஏற்கெனவே பார்த்து விட்ட பொன்னையா அவன் திரும்பி வந்து பேசாமல் இருந்த போது ‘‘ஏன் தம்பி சாவித்திரி சந்தோஷமாயிருக்கிறாளாமோ?’’ என்றார். ‘‘அவள் சந்தோஷமாய்த் தானிருக்கின்றாள். நாங்கள் பயந்தபடி எதுவும் இல்லை. எல்லாம் அந்தக் கடவுள் கருணைதான்.’’ என்றான்.

‘‘உனக்கு இப்பதான் புரிஞ்சிருக்கு. உன்ரை கொம்மாவுக்கு எண்டைக்குத்தான் புரியப் போகுதோ?’’ ‘‘எனக்குப் புரியாமல் இருந்துவிட்டுப்போகட்டுமே. அதனால் உங்களுக்கு நட்டம் ஒன்றுமில்லையே. சும்மா எந்த நேரம்பார்த்தாலும் என்னைத் திட்டுறதே உங்களுக்குப் பொழுது போக்காப்

போச்சு, அதுசரி இப்ப எத்தனை மணி'' என்றாள் கற்பகம்.

—“மூன்றேகால் ஆகுது. ஏன் இறையிலேறப் போறியே கற்பகம்'' என்று சிரித்தார் பொன்னையா.

“ஓ ... அதுதான் குறைச்சல். உங்களை சாப்பிடவரச் சொல்லி எத்தனை தரம் கூப்பிட்டாச்சு. அதிலை இதிலை சாட்டிக் கடத்திக் கொண்டிருக்கிறியளே. இன்னும் நேரம் வரவில்லையா?''

“நேரம் ஏன்டி வரவில்லை. இண்டைக்கு ஒரே அலுப்பாயிருக்கு ... அதுதான்.''

“ஓ ... பெடியனிட்டை போத்தில் குடுத்து அனுப்பிய போதே நினைச்சன்.'' என்று கூறி விட்டு வீட்டிற்குள் போய் விட்டாள்.

மனோகருக்குக் கல்யாணம் முடிந்து ஐந்து மாதங்கள் கழிந்து போய்விட்டன. அவன் தொடங்கிய கடையும் ஓகோ என்று நடைபெற்றது. அவனுக்குக் குடிப்பதற்கு நேரம் கிடைப்பதில்லை. எப்போதாவது லீவுநாட்களில்தான் குடிப்பான். அன்றைக்கு சாவித்திரியுடன் கதைப்பது கூட இல்லை அன்றைய பொழுது பெரும்பாலும் மதுமலர் வீட்டிலேதான் கழியும்.

அவன் மதுமலர் வீட்டுக்குப் போவது பற்றியோ, அவளுடன் தங்குவது பற்றியோ சாவித்திரி எதுவும் கதைப்பது கிடையாது. இடைக்கிடையில் சாவித்திரியிடம் மதுமலர் வந்து போவதுண்டு.

மனிதன் நல்லவனோ ... கெட்டவனோ அதுபற்றி நிர்ணயம் செய்வது அவனுடைய செயல்கள்தான். வாழ்க்கையில் ஒருவன் முற்றிலும் கெட்டவனாக வாழ்வதும் இல்லை — நல்லவன் என்று பெயர் எடுப்பதும் இல்லை ஆனால் மனோகர் நல்லவனாவதும் கெட்டவனாவதும் அவனுடைய செயல்களினால் தான் என்பதை நாளாந்தம் நடைபெறும் நிகழ்ச்சிகளே நிர்ணயம் செய்துகொண்டிருந்தன.



ஏறக்குறைய திருமணம் முடிந்து அன்றுவரை பிரச்சினைகள் ஏதும் இன்றி அவன் வாழ்ந்துவிட்டான்.

புதிதாக அவன் ஆரம்பித்த கடையில் அவனுடைய உறவுப் பையன்கள் இருவரை பணியாளராக வைத்திருந்தான். சாவித்திரியும் கடைக்கு இரண்டு, மூன்று நாட்களாகப் போய் வந்திருக்கின்றாள். எண்ணங்கள் ஓடுகின்ற அளவுக்கு காலங்கள் ஓடுவதில்லையாயினும் மனதில் நினைத்துப் பார்க்கின்றபோது நடக்காத சில நிகழ்ச்சிகள் நடப்பது போன்ற பிரமையில் ஓர் இன்பம் ஏற்படத்தான் செய்கின்றது.

நிறைந்த வருமானம். முதலாளி என்ற பெயர். பணியாளனாயிருந்த தராதரம் மாறி அவனை எல்லோரும் முதலாளி என அழைக்கும் பொழுது அதிலே ஓர் கர்வம். மாதச் சம்பளத்தை எதிர்பார்த்திருந்தவனுக்கு மாதத்தில் தொகையான வருமானம் கிடைத்துக் கொண்டிருந்தது. நேர்மையாகவும், சட்டத்துக்குட்பட்டும், சட்ட விரோதமாகவும் பணம் சம்பாதிக்கத் தொடங்கி விட்டான். ஆறே மாதத்தில் கடையை மேலும் விஸ்தரித்து ஒரு பக்கம் புடவையும், மறு பக்கம் சாய்ப்புச் சாமானும் போட்டான்.

மனைவியின் அதிர்ஷ்டம் மனோகருக்கு அடித்துக் கொடுக்கின்

# தமிழ்த் தாய் வணக்கம்

செந்தமிழ் வாழியவே — செகமெலாம் செழித்து
செந்தமிழ் வாழியவே — எங்கள்
செத்தமிழ் வாழியவே ...

சங்கப் புலவர்கள் சபையில் வளர்ந்து,
சமயத் தலைவர்கள் அன்பில் உயர்ந்து,
கம்ப நாடனின் கவியில் மலர்ந்து,
கன்னல் சுவயை அள்ளிச் சொரியும் ...
செந்தமிழ் வாழியவே ...

பாரதி துணிவால் பயங்கள் அகல
பாரதி தாசனல் வீரம் நிறைய ...
ஈழ நாட்டவர் எழில்பல சேர்த்திட
இளமையோ டென்றும் இன்பம் சொரியும் ...
செந்தமிழ் வாழியவே

இருபதாம் நூற்ருண் டெழுத்தாளர் சிலர்
இனிய அணிகள் இதயத்தால் சேர்க்க,
குறைவிலா தினிய குளிர்சொரி நிலவே ...
கூடலால் வாழும் முத்தமிழ்க் குமரி...
பாரெலாம் தோன்றும் துறைகளை ஆளும்,
பயனுள இயலெலாம் வெற்றியை நாட்டும்,
பாரோர் விரும்பி ஆராய்ந்துவக்கும்,
பன்னெடுங் காலம் இளமையோ டிருக்கும் ...
செந்தமிழ் வாழியவே ...

—மு. சடாட்சரன்

## எழுத்தாளர்கள் இப்படித்தான்

எழுத்தாளர்கள் ஒரு பத்திரிகையிலிருந்து இன்னெரு பத்திரிகைக்கு மாறியதாகவோ, தாங்களே புதிய பத்திரிகை ஆரம்பித்ததாகவோ கேள்விப்படும்போது நான் சிறிதும் வியப்படைவதில்லை. எழுத்தாளர் என்போர் ஓர் விநோதமான இனத்தினர். இஷ்டம்போல் சுயேச்சையாக எவ்வித கட்டுப்பாடும் இன்றி எழுதவேண்டும் என்ற ஆவல் பெரும்பாலான எழுத்தாளர் உள்ளத்தில் எப்போதும் இருந்துகொண்டிருக்கும். மேலே உள்ளவர்கள் எவ்வளவு நல்லவர்களாய் இருந்தாலும் சரிதான்; மாறுதல் வெறி திடீரென்று தோன்றத்தான் செய்யும்.—பேராசிரியர் கல்கி.

---

றது என்று ஊரார் கதைத்தனர். ஏன் மதுமலரே கூறினுள் இதனல் சாவித்திரி மீது அவனுக்கு மரியாதை ஏற்பட்டிருந்தது.

காலப்பரிமாணத்தில் நாட்களின் வேகம் மகிழ்ச்சியுடன் கலந்திருந்ததால் பத்துமாதம் கழித்து ஓர் ஆண் குழந்தையைப் பெற்ருள் சாவித்திரி.

பார்வதியம்மாளுக்குத் தான் மகிழ்ச்சி அதிகம். அவளோடு பொன்னையாவுக்கும் சந்தோஷம் அளவிட முடியாது, அன்றைக்கு ஒன்றுக்கு இரண்டு போத்தல் அடித்துவிட்டு ஒரே கும்மாளம்.

கடவுள் எப்படி எப்படி எல்லாமோ முடிச்சுப் போட்டு வைக்கின்ருர். மனிதர்கள் மன எழுச்சிக்கு அடிமைப்பட்டு, ஆசையின் உந்தல்களுக்கு இலக்காகி நினைவுகளுக்கும் எட்டாத இலக்குகளை நோக்கி நடைபயில ஆரம்பிக்கும் போதுதான் கடவுளின் முடிச்சுகள் இறுகவோ அன்றி இளகவோ ஆரம்பிக்கின்றன. அங்கே ஓர் புதிய அத்தியாயம் ஆரம்பிக்கின்றது. இல்லையெனில் ஓர் புதிய திருப்பம் நிகழுகின்றது.

அப்படிப்பட்ட ஓர் திருப்பம் தான் மனேகரின் திருமணத்தினுல் நிகழ்ந்தது. அந்த நிகழ்வு ஓர் மாற்றத்தினைத் தோற்றுவித்துக் கொண்டிருந்த அதே வேளையில் ஓர் புதிய முடிச்சு அவன் வாழ்வில் விழுகின்றது.

கூந்தலில் பூ வைக்கத்தான் பூவை விரும்புகின்ருள். இறைவன் அதனைப் பறிக்க விரும்பினுல் அவள் நிலை ... அதற்காக அவள் பூச்சூட விரும்பவில்லை என்று கூறமுடியுமா? மனேகர் நிலையும் அப்படித்தான். அவன் திருந்தி வாழ நினைத்தாலும் அவன் தலையில் எழுதப்பட்ட எழுத்தினை யார் மாற்றி எழுதுவது?

அன்று மாலை கடை பூட்டுவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்த வேளையில் அவசர அவசரமாக ஒரு இளம் பெண் கடைக்குள் நுழைந்தாள். அவளைப் பார்த்ததும் மனேகர் முதலில் யாரோ ஏதும் வாங்குவதற்கு வந்தவர்களாக்கும் என்று தான் நினைத்தான். அவள் சிரித்துக்கொண்டே "மிஸ்டர் மனேகர். என்னை அடையாளம் தெரியவில்லையா?"

மனேகருக்கு உடனே விளங்கவில்லையானுலும் சில நிமிடங்களில் அவன் உள்ளத்தில் மின் அலைகள் பாய்வது போன்ற ஓர் அதிர்ச்சியும், அதனைத் தொடர்ந்து அந்த நினைவினுல் எழுந்த பரவச உணர்வும் அவன் இதழ்களில் ஓர் புன்முறுவலை உதிர்த்தது.

"நீங்க ... நீ ..." என்று அவன் தடுமாறினன். "ஜேஸ். ஜேஸ் உங்களுக்கு ஞாபகம் வந்திடுச்சு. நீங்கள் நினைக்காவிட்டாலும் என்னுல் உங்களை மறக்க முடியவில்லை." என்று கூறியவாறே அவனுக்கு பக்கத்திலிருந்த கதிரையில் உட்கார்ந்தாள். (வளரும்)

# சாயுங்கால மயக்கம்

வ. அ. இராசரத்தினம்



தகிப்பும் வெது வெதுப்பு மானபங்குனிமாதத்துப்பிற்பகலின் இறுக்கம் தளர்ந்தபோது ஓவென்று திறந்து கிடந்த ஜன்னல் வழியாக மென்காற்றுத் தவழ்ந்து வந்து அவர் முகத்தை மெல்ல வருடிற்று. கட்டிலிற் சுவானுபூதியாகத் துயின்றுகொண்டிருந்த அவர் விழித்துக்கொண்டார். கிராமத்துக்கு வெகு தொலைவிலே சனசந்தடியற்ற அத்துவானத்தில் அசமந்து கிடக்கும் அந்த யாத்ரீகர் விடுதியின் திறந்த ஜன்னலூடே மேற்குவானம் சிவந்துகொண்டிருப்பது தெரிந்தது.

ஆனாலும் அந்தச் சாயுங்காலத்திலும் அவராற் படுக்கையை விட்டு எழுந்திருக்க முடியவில்லை. ஒருக்களித்துப் புரண்டு, படமெடுக்கும் அரவமாய்த் தலையை நிமிர்த்தி எதிரேயிருந்த நிலைக்கண்ணாடியில் முகத்தைப் பார்த்தார். மேற்கு வானம்போல அவர் கண்களும் சிவந்து தானிருந்தன!

கண் இமைகளை இடக்கைப் பாம்பு விரலால் மெதுவாகத் தட்டி மீண்டும் புரண்டு மல்லாந்து படுத்துக்கொண்ட போது, அவரது நினைவுப்பாம்பு இறந்தகாலச் சருகுகளிடையே சரசரத்து ஓடத்தொடங்கிற்று!

அந்தச் சரசரப்புச் சத்தம் அறையின் முன்வாயிலில் கதிரையினுள்ளே அறிதுயிலில் அமர்ந்திருந்த அவரின் 'எடுபிடி'க்கும் கேட்டுவிட்டது போலும்.

அவன் நாசுக்காகக் கதவைத் தட்டினான்.

''யேஸ்''

தொடர்ந்து அறைக்கதவின் தாழ்ப்பாள் உட்புறமாகத் திறக்கப்படும் ஓசை.

'எடுபிடி' செவ்விளனியும் கையுமாக உள்ளே சென்று மீண்டும்கதவைமூடிக்கொண்டு இளநீரை வெட்டித்திறந்து கிளாசில் ஊற்றிக்கொடுத்தான்.

அவர் மடமடவெனக் குடித்து கிளாசை வெறுமையாக்கியதும் கேட்டார்.

''ஜீப் எங்கே?''

''ஆறரை மணிக்குத்தானே வரச்சொன்னீங்கசேர்''

''டிரைவர் எங்க போயிற்றான்''

''வீட்டுக்குப்போனான் சேர்''

''மடையன், அவனுக்கு அதுக்குள்ள வீட்டபோயிர வேணும்''

''நீங்கதானே போகச்சொன்னீங்கசேர்''

''ஓமோம். அவனும் பாவம். ஒருமாசத்துக்குப் பிறகு இன்டைக்குத்தான் வீட்டபோறான். அவன்ர வீடு தூரமா?''

''ரெண்டரைக் கட்ட இருக்கும் சேர்''

'சரி நீபோ அவன் ஆறுதலா வரட்டும்'

சமீபகாலமாக அவர்பேச்சுக்களிலே எந்த நிதானமும் இருப்பதில்லை. அதைத்தெரிந்திருந்த 'எடுபிடி' ஏதும் பேசாது, இளநீர்க்கோம்பையோடு வெளியேறிக் கதவைச் சாத்தினான்.

அவர் மீண்டும் கட்டிலிற் சாய்ந்தபோது, திறந்திருந்த ஜன்னலூடாக பங்குனி மாதத்து நிர்மலமான நீல வானத்தின் கவிவிலே செம்மை படர்ந்துகொண்டிருந்தது.

நீலமும் சிகப்பும்!

பிரமுகர் பெருமூச்சு விடுகிறார்.

அத்துவானத்தில் அசமந்து கிடக்கும் இந்தச் சின்னஞ் சிறிய 'சேர்க்குட் பங்களா' விலே தன்னந்தனியனாக இருக்கவேண்டியிருக்கிறது என்பதை எண்ணியபோது அவரது நெஞ்சுவெடித்துவிடும்போல இருந்தது!

இத்தனைக்கும் கொழும்பிலிருந்து புறப்படுகையில் நூற்றைம்பதுக்கும் மேற்பட்ட கிராமப் பிரமுகர்களுக்குக் கடிதம் அனுப்பிவிட்டுதான் வந்திருக்கிறார். ஆனால் சந்திக்க வந்தவிரலுள் மடக்கக் கூடிய அரசாங்க உத்தியோகத்தர்கள், "வேளாண்மை வெட்டுக் காலம். அதுதான் எவரும் வரவில்லை." என யாருக்கோ வக்காலத்து வாங்கிப்பேசி உண்மையை மறைக்கிறார்கள்! அந்த அரசாங்க உத்தியோகத்தர்களும் வந்திருக்காவிட்டால் இன்றையப்பொழுது எவ்வளவு 'டல்'லாக இருந்திருக்கும் என்ற எண்ணங்களினூடே, ஏழாண்டுகளுக்கு முன்னர் நடந்தவைகள் நடனமிட்டன.



அன்று முதன் முதலாக அவ்வூருக்கு 'வெற்றிப்பிரவேசம் செய்தபோது இன்றைய மேற்கு வானம் போலத்தான் எங்கும் நீலத்திற் செம்மை படர்ந்திருந்தது. கிராமத்து வீதிகளிலெல்லாம் தோரணங்கள்! வழி நீளமெல்லாம் நிறைகுடங்கள்! ஒவ்வொருபடலையிலும் பூமாலைகள்!

கழுத்தில் விழுந்த மாலைகள் முகத்தையே மூடி மறைக்க அந்த இன்பவேதனையைச் சுமந்துகொண்டு நமது அரசு, நமது தலைவன் என்ற சினிமாப் பாடல் ஊரையே அதிரவைத்து ஒலிபெருக்கியில் முழங்க சனக் கும்பலூடே எம். ஜீ. ஆர். பாணியில் நடந்து சென்றது ஒருகனவுபோல இருந்தது.

அன்று நிகழ்ந்த ஊர்வலமும் அதையடுத்து நடந்தபொதுக் கூட்டமும் முடிவடைய ஏறத்தாழ நடுச்சாமம் ஆகிவிட்டது! அலுத்துப்போய்விட்ட அவருக்குத் தன்கட்டையை எங்காவது நீட்டி நிமிர்த்திக் கிடத்திக்கொண்டாற்போதும் என்றிருந்தது!

ஆனாலும் கூட்டம் முடிந்த பின்னரும் ஒரே கும்பல். ஆதரவாளர்கள் அவரை வளைத்துக் கொண்டனர். அவர்களில் இளைஞரான ஒருவன் சொன்னான். "நெறகுடம் வைச்சவங்க, மாலைபோட்டவங்க எல்லாம் நமக்குதுண்டு போடல்ல. கனபேர் இப்ப பம்மாத்துப் பண்றாங்க"

அவர் குறுஞ்சிரிப்புச் சிரித்தார்!

ஆனால் அவரது வெற்றிக்குப் பல செயற்திட்டங்களை வகுத்த மக்கள் தொண்டனான ஆயுள்வேத வைத்தியர் சொன்னார் "அதுதான் தம்பி அரசியல். பாராளுமன்ற அரசியலில் இந்தப் பம்மாத்து எல்லாம் இருக்கத்தான் செய்யும். நாமளும் இப்பவோட்டுப்போடாதவனுக்கும் சேர்த்துத்தான் எம்.பி. எதிர்க்கட்சியில் இருந்தவங்களையும் நம்ம அணியில சேர்த்துக்கொள்றதுதான் நம்மட உண்மையான அரசியல் வெற்றி"

ஆனால் அந்த இளைஞன் அவர் வாதத்தை ஒத்துக்கொள்ளவில்லை. அவன் மேலும் வேகத்தோடு "நாய்வால நிமித்தவும் ஏலா. அவனுகள நம்ம பக்கம் திருப்பவும் ஏலா. நம்மளுக்கு முழுமூச்சா எதிராயிருந்த வாத்தி கொஞ்சப்பேரத் தண்

ணியில்லாக் காட்டுக்குமாத் வேணும், நான் லிஸ்ற் எழுதி வச்சிருக்கன்'' என்று ஒரு கடதாசியை நீட்டினான் அவரிடம்.

சில கிராமங்களில் இப்படியான கோரிக்கைகள்!

ஆயுள்வேத வைத்தியர் வேண்டாம் என்கிறார்.

இந்தக்குழப்பங்கள் தொடர்ந்து, மாற்றக்கோரிக்கை விடுத்த 'நேயர் விருப்பங்களுக்குத்' தலைசாய்த்துச் சுதாகரித்துக்கொண்டு நிமிர்ந்து நிற்க இரண்டாண்டுகள் சென்று விட்டன!

கிராமத்து இளைஞர்களான 'நேயர்கள்' சிலருக்கும் அதற்கு மேல் ஏதுமே தேவையில்லாதிருந்தது!

அதன்பின்னர் உத்தியோகம் தேடும் படித்த வாலிபர்களே அவரைச் சுற்றி அலைந்தார்கள்! உள்ளூரில் மட்டும் அல்ல வெளியூரிலிருந்து கூட வந்தார்கள். அரசாங்க உத்தியோகமே மனித வாழ்க்கையின் இலட்சியம் என்ற நோக்குக்கொண்ட நடுத்தர வர்க்கத்தினர் அதற்காக எதையும் கொடுக்கத் தயாராக இருந்தார்கள். எதையும் இழக்கவும் தயாராக இருந்தார்கள்!

அவர்களின் கொடுப்பனவும், இழப்பும் நேற்று என்ற இறந்த காலத்தையும் நாளை என்ற எதிர்காலத்தையும் மறக்கடிக்கச்செய்ய, அந்த நித்திய நிகழ்காலக் களிமயக்கிற் தம்மை மறந்து, தாம் வரித்துக் கொண்ட கோட்பாடுகளை மறந்து தேர்தற் தவத்திற் கிட்டிய இந்திரபோகத்தில் ஆயிரங்கண்சாபத்தை எதிர் நோக்கும் வேகத்திற் சென்றுகொண்டிருக்கையில் வைத்தியர் சொன்னார்.

'நம்மைஆக்கிவைத்த, அடித்தளத்திலுள்ள மக்களுக்கு அவர்களுக்கு நியாயமாகக் கிடைக்கவேண்டிய உத்தியோகங்கள் தானும்கிடைக்கவில்லை. அரசியல் நமக்கு ஒருலட்சியம். அது வியாபாரமாக மாறியதைக்கண்டு வேதனைப்படுகின்றேன்.''

''எனக்கும் தேவைகள் இருக்கின்றன''

''மக்கள் — அதுவும் அடித்தளத்திலுள்ள மக்கள் நமது வசம் இருப்பதுதான் நமது தேவை''

''நடை முறைக்குப்பொருந்தாத சித்தாந்தம்''

''அச் சித்தாந்தங்களைத்தான் நாம் பேசினோம், பேசியபடி வாழுவோம்''

''மக்களும் வாழவேண்டும். அதே நேரத்தில் நானும் வாழ வேண்டும்''

அதற்குமேலும் பேசவிரும்பாத வைத்தியர் வெளியேறினார். ஆனால் அவரது குரல் கிராமக்கட்சிக்கிளைகளின் வாயிலாக ஒலித்துக்கொண்டேயிருந்தது.

குரல் எழுப்பிய கட்சிக் கிளைகளைக் கலைத்து 'நானே ராஜ்யம்' என்ற 'லூயியிஸத்தோடு' வாழ்வதே அவருக்குச் சௌகரியமானதாக இருந்தது!

அந்தச் சௌகரியத்தை மேலும் மேலும் அனுபவித்துக் கொள்வதற்காக அவர் எழுப்பிய மகத்தான கோஷம் ''தேர்தல் வேண்டாம்''!

தாம் எழுப்பிய கோஷம் வெற்றிபெறும் என்ற கற்பித்ததோடு அடுத்த சில ஆண்டுகளுக்குத் தேர்தலே நடக்காது என்ற இறுமாப்பில் சுழன்றுகொண்டிருந்த நேரத்திற்தான் அவரை ''எந்தநேரத்திலும் தேர்தலுக்குத் தயாராக இருங்கள்'' என்ற கட்டளை அவரைச் சிந்திக்க வைத்தது!

தான் மறந்து விட்ட மக்களின் மத்தியில் மறுபடியும் போகவேண்டுமே என்பதை நினைக்கையில் அவர் தலை விறைத்துவிடும் போல இருந்தது!

தனது தேர்தற்தொகுதிக்கு அப்பால் யார் யாரோ நடத்திய உபகாரங்களால் தனது வாக்குப் பெட்டி நிரம்பி விடாதே என்ற யதார்த்தமான உணர்வுகள் அவரைச் சின்னாபின்னப்படுத்தின.

எழுந்து கண்ணாடி மேசையின் பின்னால் இருந்த விஸ்க்கியைக் கிளாசில் ஊற்றிச் சோடாவைக் கலக்குகிறார்.

மனோவேதனைகளைக் குறைத்துக்கொள்ள அதுதான் சரியான மருந்தோ!

அவர் விஸ்கியைப் பருகுகையில் சன்னலுக்கு வெளியே தெரிந்த நீலமும் செம்மையும் முற்றாக மறைந்து எங்கும் இருள் கவிந்து கொண்டுவருகின்றது.

''விளக்கு இல்லையா? என்று கர்ச்சிக்கிறார்!

''விளக்கில் எண்ணை இல்ல சேர். பங்களாக் காவற்காரனையும் காணல்ல. அவனும் நம்ம ஜீப்பிலதான் வீட்ட இருந்து வருவான்'' என்கிறான் எடுபிடி தலையைச் சொறிந்துகொண்டு.

''இடியட்'' என்று காயம் பட்ட புலியாக உறுமிக்கொள்கையில் ஜீப்வரும் சப்தமும் கேட்கிறது. அந்தச் சப்தம் காதில் விழுந்ததும் பிரமுகர் அவசர அவசரமாக அடுத்த விஸ்க்கியையும் பருகிவிட்டு உடைமாற்றிக்கொள்கிறார்.

தான் வந்தபோதே அவர் புறப்படத் தயாராகிவிட்டதைக்கண்டு டிரைவர் திகைக்கிறான். அந்தத் திகைப்போடு கதவைத்திறக்கிறான்.

அவர் ஏறிக்கொண்டதும் சாரதி தானும் ஏறிக்கொள்கிறான். எடுபிடி பின்னால் ஏறிக்கொள்கிறான்!

ஜீப் உறுமிக்கொண்டு ஓடுகையில் சாரதி பல தடவை அவரைத் திரும்பித் திரும்பிப் பார்க்கிறான்!

அவன் பார்வைக்கு அவர் பதிலே சொல்லவில்லை!

ஜீப் ஓடிக்கொண்டுதான் இருக்கிறது. எங்கே போக வேண்டும் என்று எவருக்குமே தெரியவில்லை.




நமக்குத் தெரிந்திருந்து நாம் மறந்து விட்ட ஒரு செய்தியை வேறு ஒருவன் எடுத்துச் சொல்லி மற்றவர்களின் மதிப்பையும் அன்பையும் பெறுகின்ற போது, "அடடா, நாம் இதை நினைவு வைத்திருந்து சொல்லியிருந்தால் இதுபோன்ற மதிப்பு நமக்கும் கிடைத்திருக்குமே!" என்று ஏங்குகிறோம்; கிடைக்காத அந்த மதிப்பின் மேல் உள்ள காதலால், — நம்மை அந்த நிலைக்கு ஆளாக்கிய நம்முடைய மறதியையே நொந்து கொள்ளுகிறோம். நாம் வருந்திச் சேர்த்து வைத்திருந்தவைகளை 'மறப்பு என்னும் பகைவன்' கவர்ந்து கொண்டு போய்விட்டானே என்றும் குமுறுகிறோம்.

இங்கே, மறதி என்னும் இயல்புக்குப் பகைவன் என்று பட்டம் சூட்டிய நாமே, — நமக்கு இழிவும் வேதனையும் தரக்கூடிய ஒரு செய்தியை நாமும் பிறரும் மறந்துவிடும் போது மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம். 'நல்ல வேளை, இந்தப் பயலுக்கு அந்தச் சங்கதி மறந்து போய் விட்டது!' என்று சொல்லி, — அது வெளிப்படாமல் போன "வேளை"யைப்பாராட்டுகிறோம்; மறதிக்கே, 'மறப்பு என்னும் மருத்துவன்' என்று பட்டம் சூட்டி மகிழ்கிறோம். புண்ணாக எழுந்திருக்கக் கூடிய நினைவுகளையும் நிகழ்ச்சிகளையும் மனத்துக்குள்ளேயே புதைத்து விட்டது என்றால், — அங்கே, மறதி ஒரு சிறந்த மருத்துவன் தானே?

## ஒரே குழப்பம்

தனிமனித எல்லையை விட்டுச் சமுதாய மேடைக்கு வந்தால், — மறதியே பலரை வாழ வைக்கும் சஞ்சீவியாக விளங்குகிறது; சமுதாய மேடையிலே அள்ளி வீசப்படும் சொற்களை எல்லாம் மக்கள் நினைவு வைத்துக் கொண்டே இருந்தால், சிலரெல்லாம், பிறகு மக்களிடையே நடமாடவே முடியாது!

தங்களைப் பின்பற்றுவதற்கு ஆள்திரட்ட முயல்கின்ற அரசியல்வாதியும் மதவாதியும், மக்களுக்கு அந்த நிமிடம் எது கவர்ச்சியாக இருக்குமோ அதையே பேசுகிறார்கள்; அவ்வாறு பேசி, — மக்களின் ஆதரவை அள்ளிக் கொண்டு உயர்நிலை எய்திய பிறகோ, தாங்கள் சொன்னதையே, அவர்கள் அடியோடு மறந்து போகிறார்கள். மறந்து போவது மட்டுமல்ல,— அதற்கு நேர் எதிரான கருத்துக்களையும் அள்ளி வீசுகிறார்கள். அப்போது, அப்படிப் பேசினால்தான் மக்கள் தங்கள் பக்கம் நிற்பார்கள் என்பதால் அப்படிச் செய்கிறார்கள்.

இந்தப் பேச்சுக்களைக் கேட்டு அவர்கள் பக்கம் குவிந்து திரண்டு கும்மாளம் கொட்டும் மக்களைப் பார்க்கையில், — முன்பு நடந்ததை மறக்காமல் வைத்திருக்கிறவர்களுக்குத் தான் திகைப்பாக இருக்கிறது. "இன்ன இலக்கை அடைந்தே தீருவோம்!" என்று முழக்கமிட்ட அரசியல்வாதி, — அதையே உயிர்மூச்சு என்றும் உயர்பேச்சு என்றும் வருணித்து வருணித்துக் கைதட்டல் வாங்கிக் கூட்டம் சேர்த்துக் கொண்ட அரசியல்வாதி, — சிறிது காலத்துக்குப் பிறகு, அதையே அடியோடு கைவிட்டு விட்டு (அதற்கு நேர்மாறான) வேறு ஒன்றை எடுத்து முழக்குகிறான். மக்கள் இப்போதும் கைதட்டி ஆரவாரம் செய்கிறார்கள்; அவனுக்கு மாலை மரியாதை செய்கிறார்கள். முந்தி

யத்தையும் நினைவு வைத்திருந்து, இப்போதைய புதிய பேச்சை அதனோடு ஒப்பிட்டுப் பார்ப்பவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை; மக்களின் இந்த மறதி பகைவனா, மருத்துவனா என்று தீர்மானிக்க முடியாமல் அவர்கள் திணறுகிறார்கள்.

## யாருடைய குற்றம்?

இந்தக் குழப்பத்துக்கு மக்களையும் முழுமையாகக் காரணமாக்க முடியவில்லை. வாழ்வின் பல அம்சங்கள் சரியாக அமைந்து, அவைகளின் அடிப்படையில் ஒரு சில கூறுகள் மேலோங்கி எழுந்தால், — அவர்கள், அந்தச் சிலவற்றை நினைவு வைத்துக் கொண்டே இருப்பார்கள். எல்லாக் கூறுகளுமே, ஒட்டை உடைசல்களாகவும் கவனத்துக்கும் கவனிப்புக்கும் உரியவைகளாகவும் இருக்கும் போது, எத்தனையை என்றுதான் அவர்கள் நினைவு வைப்பார்கள்? எல்லோரும் அட்டாவதானிகளும், சதாவதானிகளும் அல்லவே!

சமுதாயக் கடமைகளில் ஒவ்வொன்றை ஒவ்வொருவர் சரியாகச் செய்து வந்தால், எல்லோருக்கும் எல்லாம் வந்து கிடைக்கும். சில பேர் வேலை செய்ய வேறு சில பேர் மூலையில் அமர்ந்து சீட்டாடிக் கொண்டு இருந்தால், — அல்லது வேலை செய்பவர்களையும் செய்ய விடாமல், வானொலிப் பெட்டியைக் கழுதைக் குரலில் பாடவிட்டுக் கொண்டு இருந்தால், — எல்லோருக்கும் எல்லாம் கிடைப்பது எப்படி?

இப்படி ஒரு குழப்படியும் ஏறுக்கு மாறுமே சமுதாயத்தில் நிலவுவதால், எதை நினைவு வைப்பது எதை மறப்பது என்றே மக்களுக்குத் தெரியவில்லை. தெரியவில்லை மட்டுமல்ல;- புதிதாக எங்கே எந்தப் பெரிய குரல்கேட்டாலும், — அந்தக் குரலுக்கு உரியவன் எதையாவது கொண்டுவந்து குவித்துவிட மாட்டானா என்று எண்ணிக்கொண்டு அங்கே ஓடுகிறார்கள். அங்கே போன பிறகும் அதிலேயே ஊன்றிய கவனத்தோடு அவர்களால் நிற்க முடியவில்லை. அவர்களுக்குத்தான் ஆயிரம் பிரச்சினைகள் உள்ளனவே! அவைகளில் ஏதாவது ஒன்று நினைவு வந்ததும், அந்த ஆர்ப்பாட்டப் பேச்சுக்காரனையும் அவனுடைய வாக்குறுதிகளையும் அவர்கள் மறந்து விடுகிறார்கள். அடுத்த முறை, ஓங்கிய குரலோடு, வேறொரு வாக்குறுதியோடு அவன் மேடையில் தோன்றும் போது, முழுக்க முழுக்கப் புதியவனாகவே அவன் அவர்களின் நெஞ்சிலே பதிகிறான். முன்பு அவன் சொன்னதை எல்லாம் அவர்கள் மறந்துவிட்டார்களே என்று குறைப்பட்டுக் கொள்ள வழி ஏது?

## குடி, குடி, குடி ...

சொல்லப்போனால், நமது மக்கள், தங்களுக்கு ஏற்படும் பல ஏமாற்றங்களை மறைப்பதற்காகவே அரசியல்வாதிகள் மதவாதிகள் போன்றவர்களின் கள்ளுச்சாராயத்தனமான பேச்சுக்களை அப்படியே உள்வாங்கிக் கொள்ள முந்துகிறார்கள் என்று தோன்றுகிறது.

எந்த மனிதனும் இன்பமாக இருக்க வேண்டும் என்றே விரும்புகிறான்; அதற்கு ஏற்ற சவுகரியச் சூழ்நிலைகளைத் தேடிக்கொள்ளவே முனைகிறான். இது மனித உயிரின் அடிப்படை இயல்பாகையால், எல்லோரும் இந்தத் திசையிலேதான் நடக்கிறார்கள். ஆனால், இதிலே எல்லோரும் இணங்கி நடப்பதற்கும் தத்தமக்கு உரிய பங்கைப் பெற்றுக் கொள்வதற்குமான நிலைமைகள் சமுதாயத்திலே சரியாக இல்லை. அவை இல்லையாகவே, அள்ளிக் கொண்டவன் அகம்-மகிழ்ந்து இருக்க, வெறுங்கையைத் துழாவியவன் கன்னத்தில் கை வைத்துக்கொண்டு உட்கார்ந்து விடுகிறான்.

கன்னத்தில் வைத்த கையை எடுக்காமலே, அந்த ஏமாற்ற நினைவிலிருந்து விடுபடாமலே அவன் எத்தனை காலம் தான் இருப்பது? வலிதில் தன்னையே பெயர்த்து எழுப்பிக் கொண்டு, எதை எதையோ செய்து பார்க்கிறான். ஒரு பயனும் விளையவில்லை; அல்லது, ஒரு பணம் கிடைப்பதற்குப் பதிலாகக் காலேயரைக்கால் பணம் மட்டுமே கிடைக்கிறது. அதைக் கொண்டு அவன் எந்த இன்பத்தைப் பெற்றிட முடியும்? உள்ளத்தின் கால்பகுதியில் இன்ப உணர்ச்சி தளிர்க்கும் போதே, அவனுடைய உள்ளத்தின் முக்கால் பகுதியில் துன்ப நோய் வெடிக்கிறது. இந்தக் கால்வாசி இன்பம் போனாலும் பரவாயில்லை, — அந்த முக்கால்வாசி நோயை நான் மறந்தாக வேண்டும்' என்று எண்ணியவனாக எழுந்து ஓடுகிறான் அவன்.

ஓலமிட்டு ஓடும் அவனுடைய செவியிலே அரசியல்வாதியின் ஆவேச மேளம் கேட்கிறது; மதவாதியின் மயக்கக் குழலோசை கேட்கிறது. செவி வழியே குடிக்கும் இந்தக் கள்ளிலே அவனுடைய நரம்புகள் நிமிர்ந்தும் விழுந்தும் ஆடிக் களைக்கின்றன; சோர்ந்து தூங்கிப் போகிறான்.

அந்த மயக்கத்திலிருந்து விடுபட்டு எழும் போது அவனுக்கு எதுவுமே நினைவிருப்பதில்லை. கள்ளுசாராயத்துக்குச் சிறிதுநேர அதிகாரமே இருப்பது போல, அவன் கேட்ட பேச்சுக்கும் அவனுடைய உள்ளத்தில் சிறிது நேரமே இடம் இருந்தது; பிறகு அது அடியோடு மறந்து போய் விட்டது. ஒரு தடவை குடித்த கள்ளையே, ஒருவன் வாழ்நாளளவும் நினைத்துக் கொண்டு இருக்க முடியுமா?

## கோலம் மாறி ...

பொய்யையே மூலதனமாக்கி, மக்களின் மறதியையே வாடிக்கைகாரர்களாக்கிப் புகழ் குவிக்கும் அரசியல்வாதி, மதவாதி போன்ற

வியாபாரிகள் கூடப் பற்றுக்குறைச் சமுதாயத்தின் உற்பத்திப் பண்டங்களே. இவர்கள், தாங்கள் சொன்னதையே மறந்து விடுகிறார்கள் என்று குற்றம் சாட்டுகிறோம். ஆனால், பாவம், அவர்கள் மட்டும் ஒன்றையே நினைவு வைத்துச் செயலாற்ற முடிகிறதா?

ஏதாவது ஒரு திசையில் மக்களை மொத்தமாக இயங்கச் செய்துவிட்டால் மக்களுக்கும் தங்களுக்கும் இன்பம் ஏற்படக் கூடும் என்றுதான் இந்த வாதிகள் நினைக்கிறார்கள்; அந்தத் திசையில் அழைத்துச் செல்லத்தான், மூச்செடுத்துக் கூவுகிறார்கள். அதைக் கேட்டு ஓடி வரும் மக்கள், — தங்கள் வாழ்வின் எல்லா அம்சங்களிலுமே மிஞ்சிய தேவை உடையவர்களாக இருப்பதால், — எல்லாம் ''பட் பட்'' டென்று விரைந்து நிறைவேற வேண்டும் என்றே அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். ஒரே நோக்கத்துக்காக அல்லது ஒரே பொருளுக்காக நீண்டகாலம் உழைத்துக் கொண்டே அல்லது காத்துக்கொண்டே இருக்கும் பொறுமை அவர்களுக்கு இருக்க முடிவதில்லை. எப்படி முடியும்? அவர்கள் ஆடம்பர அழகு தேடுபவர்கள் அல்லவே; எப்போதும் எழுந்து கொண்டே இருக்கும் பசித் தேவைகளுக்கு உணவு தேடுகிறவர்கள்தானே அவர்கள்! அவர்கள் விரும்பித் தேடிய பொருளைக் குறுகிய காலத்தில் அடைவிக்க முடியாத அரசியல், மதவாதிகள், — அதைச் செய்ய முடியாததால், தேடப்படும் பொருளை அடிக்கடி மாற்றிக் கொள்ளுகிறார்கள்.

நமது அரசியலின் வரலாற்றையும் மதங்களின் வரலாற்றையும் மேலோட்டமாகப் பார்த்தால் கூட, அவை அடிக்கடிக் கோலம் மாறி வந்திருப்பது தெளிவாகத் தெரிகிறது; ஆண்டவன் அருள் என்பதை அடைவனவாகக் கற்பிக்கப்பட்டுள்ள வழிகள் எத்தனை! ஒவ்வொரு வழியிலும்தான் கிளைகளும் சந்து பொந்துகளும் எத்தனை! அரசியல் முறைகளைப் பற்றியோ கேட்க வேண்டியதே இல்லை!! ...

## கள்ளுக்கடை முளைத்தது

மறதி என்ற ஒன்று இல்லாவிட்டால் மனிதன் இன்று, எந்த நிலையிலும் வெட்கித் தலை குனியவே வேண்டும்: அவனுடைய வரலாற்றில் அவன் அவ்வப்போது மாறியுள்ள கட்சிகள் அவ்வளவு! ஆனால், மனிதர்களாகிய நாம், நம்முடைய முன்னோரும் உடனோருமாகிய மனிதர்களுக்காக இரங்க வேண்டும். இலக்கே அல்லாததை இலக்காக்கியும், வழியே அல்லாததை வழியாக்கியும் அவர்கள் பட்டுள்ள இன்னல்கள் இவ்வளவு என்று சொல்ல முடியாது

வரையறுத்துத் திட்டமிடுதல் என்ற அறிவுநெறியைப் புறக்கணித்து, வெறும் ஆர்வமே துணையாகக் காரியங்களைச் செய்து வந்ததால் ஏற்பட்ட விளைவு இது. எல்லோரும் நன்றாக இருக்க வேண்டும் என்ற பொதுவான ஆசை நம்முடைய முன்னோர்களுக்கும் இருந்தது. ஆனால், அதை வகைப்படுத்தி நிறைவேற்றிக் கொள்ளும் இயல்பை அவர்கள் வளர்த்துக் கொள்ளவில்லை. மறதியை இந்தத் தெளிவின்மையால் ஏற்பட்ட தோல்வியை மறைக்கவே, அவர்கள் அடிக்கடி அடைக்கலம் புக நேர்ந்தது.

கையிலும் காலிலும் அடிபட்டிருந்தால், முதலில் கையில் அல்லது காலில்தான் கட்டுப் போட வேண்டும்; ஒன்றிற்கு மருந்து இட்டுக் கட்டும் வரையில் அடுத்த புண்ணின் நோவைப் பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும். இந்தப் பொறுமை இல்லாமல், கையையும் காலையும் உதறுகின்றவன் இரண்டுக்குமே வயித்தியம் நடக்காதபடிக் கெடுக்கிறான். இதுதான் இங்கே நடந்த கேடு.

தேவையாக உள்ளவைகள் எல்லோருக்கும் கிடைக்கும் வரையிலே, (சமுதாயத்தின் உறுப்பினராகிய) மற்றவர்கள், ஆடம்பரங்களின் மீது சென்ற தங்கள் ஆசையை அடக்கி வைத்திருக்க வேண்டும். அவர்கள் அடக்கி வைத்திராவிட்டால், — லாடம் அடிக்கும் மாடு அல்லது குதிரையை இரண்டுபேர் அமுக்கிப் பிடித்துக் கொள்வது போல, — ஆடம்பர வெறியர்களை மற்றவர்கள் அவ்வப்போதே அடக்கி வைத்திருக்க வேண்டும். அப்படிச் செய்யாமல், — ஒரு பக்கம் சமுதாயத்தின் பொதுத் தேவைகள் நிறைவு செய்யப்படு முன்பே, சமுதாயத்தின் கவனம் மற்றுஞ் சிலரின் ஆடம்பர வெறிக்கு ஆட்பட்டதால், சமுதாய நடைமுறையே குடைசாய்ந்து விட்டது.

வண்டி ஓடிக்கொண்டே இருக்கும் வரைதான் எல்லோருக்கும் உற்சாகம்; அது நின்று விட்டாலோ குடைசாய்ந்து விட்டாலோ எல்லோர் நெஞ்சிலும் அவலம்தான் மிஞ்சும். அந்த அவல உணர்வை மறக்கவே ஒவ்வொருவரும் ஒவ்வொரு மயக்கச் செயலில் ஈடுபடுவார்கள். அங்கேதான், நாம் மேலே குறிப்பிட்ட கள்ளுக்கடை, சாராயக்கடை முளைக்கிறது ...


## பகையோ, நட்போ?

மறதியை வாழ்வின் இன்றியமையாத ஒரு தேவையாக வளர்த்து வைத்துவிட்டு அதைப் பழிப்பதிலே பொருள் இல்லை. நமது வாழ்வின் நிகழ்ச்சி ஒவ்வொன்றும் மீண்டும் மீண்டும் நினைக்கத் தக்கதாகவும் நினைத்துப் பெருமைப்படத் தக்கதாகவும் அமையும் விதமாகச் சமுதாய நிலை உருவானால், மறதி என்னும் வயித்தியனைத் தேட வேண்டியதில்லை; மறப்பென்னும் பகைவன் வாரிச் சென்று விட்டானே என்று வாட வேண்டியதும் இல்லை. அங்கேதான் மறதிக்கே தேவை இராதே.

சுடர் என்றும் சுடர் விட்டு ஒளிர

# எமது வாழ்த்துக்கள்

# கே. ஜே. எம். நியாஸ்




எனக்கு நான் எப்படி ஒரு புதிராக இருந்தேனோ அப்படியே அவளும் தனக்குத்தானே விளங்காத ஒரு பொருளாக இருந்தாள்.

அவளை முன்பு ஒரு நாளும் ஒரு சிறு அளவேனும் நான் அறிந்திருந்ததில்லை. அவளுக்கும் நான் முழுதும் புதியவனே. அவளைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற தேவையோ வேறு எதுவோ அப்போது ஏற்படவில்லை. சலனமற்ற அவளுடைய மனநிலை 'விலகிநட' என்று எனக்கு வழிகாட்டுவது போல இருந்தது. ஆனால் கால வெள்ளத்தைக் கடந்து நின்ற ஏதோ ஒரு தொடர்பு அறுந்து போகவிடாமல் எனக்குள்ளிருந்து அவளை முற்றும் மறந்துவிட முடியாதபடி செய்துகொண்டிருந்தது. அதன் இரகசியம் 'இதுதான்' என்று நிதானிக்க எனக்கு எப்போதுமே சக்தி உண்டானதில்லை.

அது நகரம் அல்ல; நகர் கழிந்த எல்லை. பக்கத்திலிருந்த நகரத்தை வேறு ஏதேதோ ஊர்களோடு தொட்டு வைப்பது போன்ற ஒரு நீண்ட சாலை. மாமரங்களும் புளிய மரங்களும் எனக்குத் தெரியாத வேறு பலசாதி மரங்களும் அந்தச் சாலையில் ஓங்கி வளர்ந்து நின்றன. தூரத்துக்கு ஒன்றாகச் சில வீடுகள் மட்டும் அதிலே காணப்பட்டன.

ஒரு வீட்டில் அவள் இருந்தாள். அந்த வீட்டுக்கு அரைமைல் தூரத்துக்கு அப்பால் என்னுடைய சிறிய வீடு. ஆயினும் நான் அடிக்கடி அவளைச் சந்தித்தேன்; பார்த்தேன். அவளும் அப்படியே சந்திக்கும்போது என்னைப் பார்த்திருக்கிறாள். அப்போதெல்லாம் எந்த அர்த்தத்தில் நான் அவளைப் பார்த்திருக்கிறேனோ அதே கருத்தில் அவளும் என்னைப் பார்த்திருக்கக்கூடும். ஆனால் நான் அவளிடமும் அவள் என்னிடமும் பேச ஒரு தேவையும் இருக்கவில்லை. எப்போதாவது அவள் தன்னை அலங்காரம் செய்துகொண்டு வந்ததாக — நின்றதாக என்னால் சொல்லமுடியாது. ஆயினும் வைகறையின் கழிவுக்கும் புலருவதற்கு முன்னும் உள்ள அந்த இன்பப் பொழுதின் அமைதியான பொன்னொளி அவளிடம் நிரந்தரமாக உறைந்திருந்தது. அதேசமயம் அவள் என்னிடம் எதைக் கண்டாளோ, எதைத் தேடினாளோ, நான் அறிந்திருக்கவில்லை.

நாங்கள் எப்படியோ இடையிடையே சந்தித்தோம். ஒரு நாளைக்கு இல்லாவிட்டாலும் ஒரு நாளைக்கு, எதிரெதிராக ஒருவரை ஒருவர் பார்த்தபடி நடந்திருக்கிறோம். அப்போதெல்லாம், 'எங்கே போகிறாள்? யார் இவள்? என்று ஆராய விரும்பினதில்லை. அவள் எங்கே போனாலும் யாராக இருந்தாலும் எனக்கு அக்கறை இல்லை என்றே எண்ணியிருந்தேன்.

அவளுடைய பார்வையிலும் எந்தத் தேவையையும் நான் உணர்ந்துகொள்ள முடியவில்லை. அவள் கண்களில் வேறு ஏதேதோ கருத்துக்கள் இருந்தன. நிதானம் இருந்தது. ஆனால் அமைதி—? அதைத் தெளிவாகச் சொல்லமுடியவில்லை.

மொத்தத்தில் அவளைப் பார்ப்பதில் மனத்துக்கு ஒரு வித திருப்தி, ஆறுதல், இருந்தது. எத்தனையோ அதிர்ச்சிகள் — சலனங்கள் — தாகங்கள் என்ற இவற்றுக்கு நடுவிலும் என்னால் புரிந்துகொள்ள முடியாத — என்னைப் புரிந்துகொள்ள விரும்பாத அவளைப்

பார்ப்பதில் ஆறுதல் எனக்கு உண்டானதை மறுக்கமுடியாது.

எனக்கு முன்பு அவள் அங்கே குடிவந்தாளோ, அவளுக்கு முன்பு நான்தான் வந்தேனோ அதுவும் எனக்குத் தெரியாது. ஒருவேளை அவளுக்கு அது தெரிந்திருக்கலாம். நான்கு ஐந்து மாதங்களுக்கு மேலாகியும் நான் அதை அறிய விரும்பவில்லை.

அன்று வழக்கம் போலவே சாலையின் ஓரத்தில் நான் நடந்துகொண்டிருந்தேன். தெளிவற்ற நினைவுகளில் சிக்கி நடந்து நடந்து கால்கள் ஓய்ந்து விட்டன. கடைசியில் அவளுடைய வீட்டின் எதிரே நின்ற ஒரு மரத்தினடியில் வந்து உட்கார்ந்தேன். மேலே குருவிகள் பாடிக்கொண்டிருந்தன. அணில்கள் விளையாடின. காற்று விசிறுவது போல ஓய்ந்து ஓய்ந்து வீசியது. எதையுமே சிந்திக்காத, சிந்திக்க முடியாத அந்த நிலையிலும் இவை மனத்தைத் தடவிக் கொடுத்து ஆறுதல் செய்தன. உட்கார்ந்து குழந்தைபோல மேலே பார்த்தபடி இருந்தேன். வெகுநேரம் அப்படி நான் இருந்திருக்கக்கூடும். அந்தச் சமயத்தில் என் பக்கவாட்டிலிருந்து ஒரு குரல் கேட்டது: 'நீங்கள் யார்?'

நான் திரும்பிப் பார்த்ததும் எழுந்தேன். அவள் எதிரே நின்றாள். ஒப்பிட முடியாத ஒரு தனிப் பண்பு அவளிடம் ஊடுருவி ஒளி செய்தது. அந்தப் போதையில் மயங்கி, 'ஏன் இப்படிக் கேட்டாள்? எதை அறிய விரும்பினாள்? என்ற ஒன்றையுமே சிந்திக்காமல் மௌனமாகிக் கொஞ்சநேரம் நின்ற பிறகே இப்படிச் சொன்னேன். 'அது எனக்கே புரியாத விஷயம்.'

அவள் மெல்ல ஒரு மாதிரிச் சிரித்தாள். அந்தச் சிரிப்பில் துளிக்கூடக் கேலி இல்லை. நிறைய அர்த்தம் இருந்தது.

கண்களை அவளைவிட்டு எடுக்காமலே நான் சிலைபோல நின்றேன். அப்பொழுது அவள், 'தெரிந்துகொள்ள வேண்டும் போல இருந்தது கேட்டேன். அது தவறாகவும் இருக்கலாம். அப்படியானால் என்னை நீங்கள் மன்னித்துவிடவேண்டும்' என்றாள்.'

என்னிடமிருந்து எந்தவிதமான பதிலையும் எதிர்பார்க்காமலே அவள் தன்னுடைய வீட்டை நோக்கி நடந்தாள்.

## கதைபற்றிக் கதாசிரியர் கூறுகிறார்

இக்கதாசிரியர் க. தி. சம்பந்தன் இப்போது எழுதுவதை நிறுத்திக் கொண்டாலும் ஈழத்தின் பழம்பெரும் சிறுகதை எழுத்தாளர் வரிசையில் குறிப்பிடத்தகுந்தவர். அவர் எழுதிய சிறுகதைகளில் அவருக்குப் பிடித்தமான சிறுகதையொன்றைச் சுடருக்காகத் தருமாறு கேட்டோம்; உடனே 1961ம் ஆண்டு கலைமகளில் வெளிவந்த தமது இச் சிறுகதையை அவர் எடுத்துத் தந்தார்.

"உயர்ந்த மனநிலையின் சிக்கல் விடுபடும் உத்தியைக் கொண்டதுதான் இக்கதை. கதை எழுதி முடிந்ததும், அச்சிக்கல் விடுபட்டது போலிருந்தது; அத்துடன் கதையின் முடிவும் வாசகரைத் தமது மன ஆழத்திற்கேற்ப சிந்திக்க வைக்கக் கூடியது. அத்துடன், இன்றும் என்னைச் சிந்திக்க வைத்திருப்பதும் இக்கதைதான்" என்று கூறுகிறார் இக் கதாசிரியர்.

விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், இன்பமோ துன்பமோ மயக்கமோ எதையும் தராவிட்டாலும் 'அவள்' என்ற அந்தப் பொருள் மனத்தில் நிலையான ஓர் இடத்தைப் பிடித்துக் கொண்டிருந்தது. தெளிவுக்கும் மயக்கத்துக்கும் இடையில் —ஒரு மன நிலையில் நான் என்னுடைய திசையில் நடந்துகொண்டிருந்தேன். கொஞ்ச நேரத்துக்கு முன்பு காலில் வலி இருந்தது. இப்போதோ அது எப்படியோ மறைந்துவிட்டது. இன்னும் எவ்வளவு தூரமானாலும் நடக்கலாம் என்பது போன்ற ஒரு வலிமை உணர்ச்சி உண்டாகிவிட்டது. வீட்டை அடைந்த பிறகும் மறுபடியும் நடக்கவேண்டும் என்பதுபோல ஏதோ தூண்டிவிட்டது. அதை அடக்கி உள்ளே தனித்திருக்க உண்மையில் முடியவில்லை. அதனால் மறுபடியும் திரும்பி, வந்த வழியாகவே நடக்க ஆரம்பித்தேன்.

அவளுடைய வீட்டுக்கு அருகில் வரும்போது நன்றாக இருட்டிவிட்டது. அவளை மாலையில் சந்தித்த அந்த இடத்துக்கு வந்ததும் திரும்பிப் பார்த்தேன். ஒரு விளக்கு, அதிகப் பிரகாசமின்றி எரிந்துகொண்டிருந்தது. அதற்கு எதிரில் அவள் இருந்தாள். சிறிது நேரம்வரை அவளை உற்றுப் பார்த்தேன். 'உள்ளே போ' என்று மனம் தூண்டவில்லை, என்பது உண்மைதான். ஆனாலும் அந்த மனத்துக்குப்பின்னாலிருந்து ஏதோ ஒன்று என்னைத் தள்ளி இருக்க வேண்டும். கணத்துள் அவளுக்கு முன்னால் போய் நின்றேன் என்னைப் பார்த்தபடியே அதுவரை உட்கார்ந்திருந்தவள் எழுந்து நின்று 'என்ன வந்திருக்கிறீர்களே?' என்று கேட்டாள்.

அவளுடைய கண்களில் — முகத்தில் — அங்கங்களிலெல்லாம் அதிசயம் வழிந்தது.

அதைக் கவனித்தபடியே 'உங்களை அறிய விரும்புகிறேன். என்று நான் சொன்னேன்.

என்னுடைய குரல் எனக்கே தெளிவற்றதாகக் கேட்டது. ஆனால் தெளிவான நிதானமான குரலில் அவள் பேசுகிறாள்: 'எது உங்களுக்கு வேண்டியதில்லையோ அதை அறிய ஏன் விரும்புகிறீர்கள்?'

நான் வெளியேற முயன்றேன் தானும் உடன்வந்து வழியனுப்பிவிட்டு அவள் திரும்பிச் சென்றாள்.

இப்பொழுது மேலும் அதிகமாக என் மனத்தின் பெரும்பாகத்தை அவள் பிடித்துக்கொண்டாள் என்பதைத் தெளிவாக உணர்ந்துகொண்டேன். குழப்பம் என்று சொல்லமுடியா விட்டாலும், அமைதியற்ற ஒரு வித மனநிலையோடுதான் வீட்டுக்குள் நுழைந்தேன். ஆனால் அன்று வழக்கத்துக்கு



மாறாக நேரத்தோடு நல்ல தூக்கம் வந்ததன் இரகசியம் என்னால் ஊகிக்க முடியவில்லை.

## ( 2 )

காலையில் வெகு நேரத்துக்குப் பிறகே எழுந்திருந்தேன். ஏதோ கனமான பொருள் அடி மனத்தை அழுத்துவது போன்ற உணர்ச்சி கலந்து போகவில்லை.

'அவள் யாராக இருந்தால் உனக்கென்ன?' என்று பல தடவை என்னையே கேட்டுப் பார்த்தேன். அவளை மறந்து விடுவது நல்லது என்று உள்ளுக்குள்ளே ஒரு குரலை எழுப்பியும் விலக முயன்றேன். இப்படியெல்லாம் இலேசாக அழித்துவிடத்தக்க ஒரு சாதாரணப் பொருளாக அவள் இல்லை.

கடைசியாக 'இனி அந்தப் பக்கமே போவதில்லை. எதிர்பாராமல் சந்தித்தாலும் பார்ப்பதில்லை' என்று முடிவு செய்தேன்.

நாட்கள் ஓடிக்கொண்டிருந்தன. என் பிரதிக்கினைகள் மேகச்சாயையைபோல மெல்ல மெல்ல அழிந்துகொண்டே இருந்தன. அழிந்து போகாதபடி தடுக்கவோ, அழிய அழிய மேலே பூச்சுப்போட்டு ஓட்டவோ, என்னால் முடியவில்லை. கடைசியில் அவளைப் பார்க்க வேண்டும் என்று முடிவு செய்தேன்.

அவளுடைய வீட்டை நோக்கி நடக்கும்போது மனத்துக்குள்ளே ஒரு குரல் எழுந்தது. 'அவள் இல்லாமல் இருந்தால், கண்டுகொள்ள முடியாத ஓர் இடத்துக்குப்போய் விட்டாளானால், எவ்வளவு நன்றாக இருக்கும்!'

தடுமாற்றத்தினிடையிலும் நிதானமாக நடந்தேன். வாயிலை அடைந்தபோது, அவள் படியில் உட்கார்ந்தவளாய் என்னையே கவனித்துக்கொண்டிருந்தாள். வழக்கத்தைவிட நன்றாகத் தன்னை அலங்கரித்திருந்தாளோ அல்லது என் கண்களுக்கு அப்படித் தெரிந்ததோ என்னால் சொல்ல முடியாது. என்னைக் கண்டதும் அவள் எழுந்து நின்றாள். என்னோடு ஒரு வார்த்தைகூடப் பேசாவிட்டாலும் அவளைப் பார்த்துக்கொண்டு நிற்பதில் அலாதியான ஒரு சுகம் இருப்பதாக உணர்ந்தேன். அவளும் வெகுநேரம்வரை மௌனமாகவே நின்றாள். பிறகு இரண்டடி முன்னால்வந்து 'நீங்கள் நிச்சயமாக வரவே மாட்டீர்கள் என்றே எண்ணியிருந்தேன்' என்றாள்.

நான் பேசவில்லை; சிந்திக்கவும் விரும்பவில்லை. அவள் முகத்தைப் பார்த்தபடி சிலையாகி நின்றேன். சிறிது நேரத்தில் மறுபடியும் அவளே பேசினாள்.

'நிற்கிறீர்களே உள்ளே வரலாமே'

நேராகவே படிகளில் ஏறிச் சென்று ஓர் ஆசனத்தில் உட்கார்ந்தேன். அவளும் வந்து எதிரில் அமர்ந்தாள். பேச எனக்கோ அவளுக்கோ ஏதாவது விஷயம் இருந்ததாகச் சொல்லமுடியவில்லை. அவள் மெல்லச் சிரித்தாள்.

'ஏன் சிரிக்கிறீர்கள்?' என்று கேட்டேன்.

'குழந்தைபோல வந்துவிட்டீர்கள்,'

# 'கல்கி'யின் சிறுகதை கோட்பாடுகள்

- மக்களனைவருக்கும் பொதுவான பொழுதுபோக்கு அம்சமாக அமையும் கதைகளில், கதைமாந்தர் தேர்விலோ மொழி நடையிலோ எந்தவிதக் கட்டுப்பாடும் இருத்தலாகாது.
- சிறுகதைகளில் பயன்படுத்தப்படும் மொழி நடைக்குப் பல்லை உடைக்கும் பண்டித நடையும் ஆகாது; கொச்சைப் பேச்சும் கூடாது. வில்லியம் ஹேஸ்லிட் (William Hazlitt) என்பார் எடுத்துரைப்பது போன்று ஒரு பழகிய நடையாக (A Familiar Style) அது அமையவேண்டும். ஆசிரியர் கருத்துக்களைக் கற்போர் உணர்வதொன்றே நடைத்தேர்வின் நோக்கமாதல் வேண்டும்.
- ஜேன் ஆஸ்டின் செய்ததுபோலத் தாம் எழுதுவது பற்றிய நேரடி அறிவு ஆசிரியர்களுக்கு இருக்கவேண்டும்—கதைப் பின்புலம் சுட்டும் இயற்கைப் புனைவுரையாயினும் சரி, கதை மாந்தரைப் பற்றியதாயினும் சரி.
- கற்போர் உண்மையென நம்புமளவில் கதைகள் சொல்லப்படவேண்டும்.
- கதைக் கருப்பொருள் எளியதாக, மனிதனது நம்பிக்கையை உயர்த்துவதாக அமைந்து சமுதாயத்தின் ஒளிநிறைந்த பகுதியைச் சுட்டி, வாழ்வின் நல்லனவற்றை வலியுறுத்துவதாக அமைய வேண்டும்.

—'கல்கியின் சிறுகதைக் கலை' எனும் நூலிலிருந்து

---

'நீங்கள் சொல்வது எனக்குப் புரியவில்லை' என்றேன் நான். அவள் பேச விரும்பாதவள் போல மௌனமாக இருந்தாள்.

கொஞ்சம் பொறுத்து 'ஒன்றுமே பேசாமல் இருக்கிறீர்களே' என்று நான் ஆரம்பித்தேன்.

'பேசுவதைவிட மௌனத்தில் நிறையத் தெரிந்து கொள்ள முடிகிறதல்லவா.'

அவளுடைய வார்த்தைகள் என்னையும்மௌனத்திலாழ்த்தி அவளைக் கூர்ந்து பார்க்கும்படி செய்துவிட்டன,

அப்பொழுது அவள் கேட்டாள். 'என்ன ஆழ்ந்து சிந்திக்கிறீர்கள்?'

'இல்லை உங்களைப் பார்க்கிறேன்.'

'உங்களுக்கு என்னிடம் பார்க்கத்தக்கதாக ஒன்றும் இல்லையே!'

'நீங்கள் அதைச் சொல்லி விடமுடியாது. தவத்தின் கனல் போல ஏதோ ஒரு தெய்வ ஒளி, அல்லது தெய்வத்தின் மறைக்க முடியாத சோபை, உங்கள் முகத்தில் தெரிகிறது.'

இருக்க முடியாத நிலையில் எழுந்து நின்று அவள் பேசினாள். அவளுடைய குரல் சுருதி கலைந்த யாழினின்று எழுந்தது போல இருந்தது. 'எதைச் சொல்லக் கூடாதோ, அதையே சொல்லுவதற்கு நீங்கள் விரும்பிவிட்டீர்கள்.'

'உங்களிடம் எதைக் கண்டேனோ அதையே சொன்னேன் வேறு விதமாகப் பேசியிருந்தால் நிச்சயமாக நான் பொய் பேசினவனாகியிருப்பேன்' என்றேன் நான்.

அவளுடைய முகத்தில் இலேசாக வேதனையின் சாயை படர்ந்தது.

'இனிப் போகவேண்டும்' என்று எண்ணிக்கொண்டு எழுந்தேன். அதை எப்படித்தான் தெரிந்துகொண்டாளோ; 'வேண்டாம் இருங்கள்' என்று தடுத்தாள். அந்தச் சமயம் எதிர்பாராத விதமாக அவளுடைய கை என்னைத் தீண்டிவிட்டது. திடீரென்று என் உடம்பு நடுங்கியது.

பிறகு நான் எழுந்திருக்கவில்லை. அப்படியே சக்தியற்றவனாக உட்கார்ந்திருந்தேன். எதிரில் அவள் நின்றாள். நன்றாக மலத்தை அகல விரித்து அதனூடே அவளை உற்றுப் பார்த்தேன். உண்மையில் இத்தனை காலமும் எந்த ஒரு பெண்ணிடமும் காணாத—கண்டுவிட முடியாத—தூய ஒளி அவளிடமிருந்து எனக்கு வழிகாட்டுவதுபோல இருந்தது.

அவள் உள்ளே சென்றாள். அந்த வழியையே பார்த்துக் கொண்டு நான் உட்கார்ந்திருந்தேன். திரும்பி வரும்போது கையில் எதையோ எடுத்துக் கொண்டு வந்து என்முன்னால் வைத்துவிட்டு 'அன்போடு எதை யார் கொடுத்தாலும் தெய்வம் அதை நிராகரிப்பதில்லை. இந்த அனுபவம் எனக்குச் சமீபத்திலேதான் உண்டானது' என்றாள்.

உண்மையில் நான் தடுமாறிக் கொண்டே எழுந்து நின்று அதை எடுத்து அருந்தினேன். அது இனித்ததோ கசத்ததோ எனக்குத் தெரியாது. சிறிது பொறுத்து அவளைப்பார்த்து 'போ என்று இனிச் சொல்லுவீர்களா?' என்று கேட்டேன். அவள் சிரித்தாள். நானோ தலை கவிழ்ந்தபடி அவளுடைய பாதங்களையே பார்த்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது அவள் குரல் கேட்டது.

'நீங்கள் போகத்தான் போகிறீர்கள். நானும் தடுக்க விரும்பமாட்டேன்.'

நான் எழுந்து நின்று வணங்கினேன். அவளும் தலை சாய்த்துத் தன் வணக்கத்தைத் தெரிவித்து வழியனுப்பினாள்.

—(அடுத்த இதழில் முடியும்)

# 'கல்கி' கண்ட தமிழ் மாநாடு



**அ**ந்த மகாசபையை அன்று உண்மையில் திணறச்செய்தவர் சர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள்தான். இவர் ஆங்கிலத்தில் தமது பிரசங்கத்தை எழுதிக்கொண்டு வந்திருந்தார். பேச எழுந்தபோது கூடக்கையில் வைத்திருந்தார். ஆனால் அங்கேயிருந்த சூழ்நிலை அவரைத் தமிழில் பேசும்படி செய்துவிட்டது! சொல்லவந்த பொருள் உள்ளத்தில் தெளிவாக இருந்தால் தாய்ப்பாஷை தானாகவந்து தொண்டு செய்யும் என்பதற்கு சர். கந்தையா வைத்தியநாதனின் பேச்சு உதாரணமாக அமைந்தது. (மறுநாள் டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன் அவர்களுடைய பேச்சும் இதையே உறுதிப்படுத்தியது.) அவர் கூறினார்:—

"நானும் கம்பராமயணத்திலிருந்து ஒரு பாடல் சொல்லப் போகிறேன்!

"வாள்கொண்ட கண்ணார் யாரே
வடிவினை முடியக்கண்டார்?"

அம்மாதிரியே சர். பொன்னம்பலம் இராமநாதனுடைய பெருமையை முழுவதும் கண்டவர் யார்? நான் ஒரு சிறிது கண்டேன். அதைச் சொல்லப்போகிறேன், என்றதும் சபையில் ஒரே குதூகலம். ஆயினும் சர். பொன்னம்பலம் இராமநாதனின் பெருமையை முழுவதும் ஒரே வாக்கியத்தில் அவர் சொல்லிவிட்டார். அது அவருடைய பேச்சில் கடைசி வாக்கியமாக அமைந்தது.

சர். பி. இராமநாதன் அவர்களுடைய முழுவடிவப்படத்தை அன்று மாலை ஊர்வலமாக எடுத்துக்கொண்டு வந்து மேடைக்குப் பக்கத்தில் வைத்திருந்தார்கள். அந்தக் கம்பீர புருஷருடைய தத்ரூப வடிவம் சபையோர் முன்னால் இருந்து கொண்டேயிருந்தது. இதைக் குறிப்பிடாமல் குறிப்பிட்டு சர். கந்தையா வைத்தியநாதன் சொன்னார்.

"சர் பி. இராமநாதன் இல்லாவிட்டால் நமக்கு இராமநாதன் கல்லூரி இல்லை; பரமேஸ்வராக் கல்லூரி இல்லை; வீதிகளிலே தூக்கிக்கொண்டுபோய் ஊர்வலம் விடுவதற்குப் படமும் இல்லை!" என்று பேச்சைமுடித்துவிட்டு அவர் உட்கார்ந்தபோது சபையோர் பலத்த கரகோஷம்செய்து மகிழ்ந்ததில் வியப்பொன்றுமில்லை. சர். பி. இராமநாதனுடைய படமே உயிர்பெற்றுக் கரகோஷம் செய்திருந்தால் கூட எனக்கு வியப்பாயிருந்திராது.

படத்தை வீதிகளில் எடுத்துக்கொண்டு போய் ஊர்வலம் விடக்கூடிய பெருமை வாய்ந்த மகான் இலங்கையில் சர். இராமநாதன் ஒருவரே, என்பதை எவ்வளவு நயமாக அந்தக் கடைசி வாக்கியத்தில் சொல்லிவிட்டார்!

அன்றிரவு தமிழ் திருவிழா நிர்வாகிகள் யாருமே தூங்கவில்லை. மறுநாள் நடக்கவேண்டிய திருவிழா ஏற்பாடுகளில் பலரும் முனைந்து ஈடுபட்டிருந்தார்கள், இன்னும் சிலர் கவலையினால் தூங்கவில்லை. "குளிக்கரைப் பிச்சையப்பா வந்துவிட்டாரா?" என்று ஒருவர்க்கொருவர் ஆள்விட்டுக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். சிலர் அந்த அவசரக்குழப்பத்தில் "பிச்சைக்கரைக்குளியப்பா வந்துவிட்டாரா?" என்று ஒருவரையொருவர் விசாரித்தார்கள்.

யாழ்ப்பாணத்தார்கள் தமிழ்நாட்டின் கலைப் பண்பாட்டில் திளைத்தவர்கள் என்பதற்கு ஒரு நிச்சயமான அத்தாட்சி உண்டு. அது, அவர்களுக்கு நாதஸ்வர சங்கீதத்தில் உள்ள பிரேமைதான் அந்தப் பகுதியிலேயே பல நாதஸ்வரவித்துவான்கள் இருக்கிறார்கள். ஆயினும் விசேஷ சந்தர்ப்பங்களுக்குத் தமிழ் நாட்டிலிருந்து புகழ்பெற்ற நாதஸ்வரவித்துவான்களை அழைப்பது வழக்கம். ஆகையால் "தமிழ் விழாவுக்கு வேறு யார் வந்தாலும் வராவிட்டாலும் ஒரு நல்ல நாதஸ்வரவித்துவானை 'ஒழுங்குசெய்து' அனுப்பிவிடுங்கள்" என்று செய்திமேல் செய்தி வந்துகொண்டிருந்தது.

இம்மாதிரிப் பொதுப்பணிகளில் ஆர்வத்துடன் முன்வந்து கலந்துகொள்ளும் இயல்பு படைத்த பாக்கியவான் குளிக்கரைப்பிச்சை

யப்பா அவர்கள்; ஆகையால் அவ்வரை ஒழுங்கு செய்வது மிக எளிதாய் இருந்தது. ஆனால் அவருக்குப் பாஸ்போர்ட்—விஸா ஒழுங்கு செய்தல் அவ்வளவு எளிதாயில்லை. இலங்கை அரசாங்கத்தார் இந்தியாவிலிருந்து வரும் கலைஞர்களுக்கு அனுமதி கொடுக்கும் விஷயத்தில் விசேஷ கட்டுப்பாடுகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இது இலங்கையில் உள்ளவர்களுக்கே தெரிவதில்லை. ஆகையால் இங்கேயுள்ள சங்கீத வித்துவான்களை கச்சேரிகளுக்கு ஒழுங்குசெய்துவிட்டுப்போய் அங்கே பிரபலமாக விளம்பரமும் செய்துவிடுகிறார்கள். வித்துவானுக்கு இலங்கை சர்க்காரின் அனுமதிகாலத்தில் கிட்டுவதில்லை. ஆகையால் இவர் அங்கே குறிப்பிட்ட தேதியில் போக முடிவதில்லை. வித்துவானை எதிர்பார்த்த அபிமானிகள் பெரிதும் ஏமாற்றம் அடைகிறார்கள்.

குளிக்கரைப் பிச்சையப்பா அவர்கள் தமிழ்த்திருவிழாவுக்கு வரவேண்டுமென்பதில் இலங்கை சர்க்காரின் கல்விமந்திரி உட்பட பல பிரமுகர்கள் சிரத்தை கொண்டிருந்தும், விழாவுக்கு முதல்நாள்தான் அவருக்கு அனுமதி கிடைத்தது. ஆகவே முதல்நாளிரவு நடுநிசிக்கு 'ஸ்பெஷல்' விமானத்தில் அவரும் அவருடைய கோஷ்டியாரும் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

இந்தச் செய்தி கிடைத்தபிறகுதான் விழா நிர்வாகிகளுக்கு நிம்மதி ஏற்பட்டது. பின்னரும் கவலைப்பட்டவர்கள் சிலர் உண்டு. "வித்துவான்கள் வந்துவிட்டார்கள் சரிதான்! அவர்களுடைய வாத்தியங்கள் வந்துவிட்டனவா? அல்லது வழியில் சுங்க அதிகாரிகள் பிடித்து வைத்துக்கொண்டுவிட்டார்களா?" என்று சிலர் கவலைப்பட்டுக்கொண்டிருந்தார்கள். "வாத்தியங்கள் வந்தது சரிதான். அவற்றுக்குள்ளே சங்கீதம் பத்திரமாயிருக்கிறதா அல்லது அதிகாரிகள் பிடுங்கிவைத்துக் கொண்டுவிட்டார்களா?" என்று வேறு சிலர் கவலைப்பட்டார்கள்.

மறுநாள் சூரியோதயம் ஆனதும், எல்லாக் கவலைகளும் தீர்ந்துவிட்டன. ஸ்ரீ ஆறுமுக நாவலர் மடாலயத்தின் முன்னிலையில் பெருங் கூட்டம் கூடியிருந்தது. தெய்வத்தமிழ் எழுதி ஓலைச்சுவடிகளை யானை வாகனத்தின்மீது ஏற்றிக்கொண்டு ஊர்வலம் புறப்பட்டது. குளிக்கரைப் பிச்சையப்பா நாதஸ்வர வாத்தியத்தை எடுத்துக்கொண்டார். ஒத்து ஊதுகிறவர் ஊதினார்; தாளம் தட்டுகிறவர் தட்டினார்; தவில் வித்துவான் ஜாம் ஜாம் என்று முழங்கினார். ஸ்ரீ பிச்சையப்பா அன்றைய தினம் பொழிந்த இசைவெள்ளம் இன்னமும் யாழ்ப்பாண வீதிகளில் ஓடிக்கொண்டிருக்கும் என்று நம்புகிறேன்.

இந்த ஊர்வலத்தின்போது தமிழ்நாட்டிலிருந்துவந்த பிரதிநிதி ஒருவருக்கும் யாழ்ப்பாணத்து அன்பர் ஒருவருக்கும் நடந்த சம்பாஷணையைக் கொஞ்சம் கேளுங்கள்:—

"ஏன் ஐயா இலங்கைத்தீவில் யானைகள் ஏராளமாக உண்டு என்று சொன்னார்களே?"

"ஆமாம், இல்லையென்று யாராவது சொன்னார்களா?"

"அப்படியானால் இந்த ஊர்வலத்திற்கு ஒரு நிஜ யானையைக் கொண்டுவந்திருக்கக் கூடாதா? இந்தப் பொம்மை யானைமேல் எதற்காக ஓலைச்சுவடிகளை வைத்து ஊர்வலம் விடுகிறார்கள்!"

"நான் தங்களை ஒன்று கேட்கிறேன் பதில் சொல்வீர்களா?"

"தாராளமாய்க் கேளுங்கள்!"

"உங்கள் நாட்டில் அதாவது எங்கள் தாய்நாட்டில் காளைமாடுகள் ஏராளமாக உண்டு அல்லவா?"

"ஆமாம், உண்டு. அதிலும் பழைய கோட்டைப் பட்டக்காரரின் காங்கேயம் காளைகள் பிரசித்தி பெற்றவை."

"சரி; அப்படியானால் உங்கள் நாட்டுச் சிவன்கோவில்களில் ரிஷிபவாகன ஊர்வலம் என்றால், நிஜக் காளைமாட்டின்மீது சுவாமியை வைத்து ஏன் ஊர்வலம் கொண்டுவருவதில்லை? பொம்மை ரிஷிபவாகனங்களின் மீது சுவாமியைவைத்து எழுந்தருளப் பண்ணுவது ஏன்?"

சேய்நாட்டுக்காரரின் இக்கேள்விக்கு தாய்நாட்டுக்காரர் விடைசொல்ல முடியாமல் கொட்டுக்கூடை முழிமுழித்தார்.

நம்முடைய ஆலயங்கள் திருவிழாக்கள் எல்லாவற்றிலும் நம் பெரியோர்கள் அருங்கலைகளைச் சம்பந்தப்படுத்தி அமைத்து இருக்கிறார்கள். வாகனங்களின் அமைப்பும் கலை உலகத்தைச் சேர்ந்ததே அல்லவா? பிரசித்தமான கோயில் பிரகாரங்களில் வரிசையாக வைத்திருக்கும் ரிஷிபவாகனம், யானைவாகனம், மயில்வாகனம், கருடவாகனம் ஆகியவை எவ்வளவு அருமையான காட்சிதருகின்றன? விநாயகருக்குரிய மூஞ்சூறு வாகனங்கூடக் கலையுடன் சேரும்போது எவ்வளவு நன்றாயிருக்கிறது.

ஆகவே, தமிழ்ச்சுவடிகளை யானைவாகனத்தின்மீது ஊர்வலம் விடுவது என்ற யோசனையை நமது பூர்வீக கலைப்பாணியிலேயே யாழ்ப்பாணத்து அன்பர்கள் நடத்திவைத்தார்கள். அதைப்பற்றி முதலில் குறைப்பட்ட தமிழ்நாட்டு அன்பர்களும் மேற்சொன்ன காரணத்தைக் கேட்டுத் திருப்தி அடைந்தார்கள்.

—வளரும்

# ஈழத்தில் தமிழ் ஏடுகள் ஒரு கண்ணோட்டம்

குரும்பசிட்டி - இரா. கனகரத்தினம்

இரண்டு ஆண்டுகளுக்கு முன் மைலாப்பூர் ராஜேஸ்வரி மண்டபத்தில் தமிழகத்தில் இதுவரை தோன்றி மறைந்ததும் உயிர் வாழ்வனவுமாகிய 2000 தமிழ் ஏடுகள் சஞ்சிகைகளின் கண் காட்சியொன்று தனிமனித முயற்சியால் நடைபெற்றதை 'சுடர்' வாசகர்கள் அறிந்திருக்கக் கூடும். இந்த முயற்சியில் ஈடுபட்டவர் மன்னார் குடியைச் சேர்ந்த பொறியியலாளரான நண்பர் பட்டாபிராமன் ஆகும். பத்திரிகைகள், சஞ்சிகைகளை ஒரு இனத்தின் வரலாற்றினை விளக்கும் முக்கிய சாதனம் என்ற முறையில் ஈழத்தில் எம்மிடையே தோன்றி மறைந்த பத்திரிகைகள் தொடர்பாக முறையான ஆய்வு மேற் கொள்ளப்படுவதாக நாம் கூறமுடியாது.

ஈழத்தில் தோன்றிய முதல் நாளேடு, வார ஏடு, சஞ்சிகைகள் எவை? இவை தோன்றிய காலம் என்ன? இன்றுவரை நம் நாட்டில் தோன்றி மறைந்த தமிழ் ஏடுகள் சஞ்சிகைகளின் எண்ணிக்கை எவ்வளவு? எந்த மாவட்டத்தில் அதிக தமிழ் ஏடுகள் தோன்றின? கலை, இலக்கியம், வரலாறு, சமயம், விஞ்ஞானம், பொழுது போக்கு, அரசியல் போன்ற பல்வேறு துறைகளில் ஈழத்து இலக்கிய வாதிகளின் உந்துதல் எந்தத் துறையில் அதிகம் காணப்பட்டன? ஈழத்துத் தமிழ்ச் சமுதாய மாற்றங்களுக்கு, மறுமலர்ச்சிக்கு, தமிழ்மக்கள் அபிலாசைகளுக்கு இப் பத்திரிகைகள் சஞ்சிகைகள் தந்திட்ட பங்கு என்ன? இதுவும், இது போன்ற பல் வேறு ஆய்வுகளுக்கும் களமாக அமையக்கூடிய வகையில் ஈழத்தில் தோன்றி மறைந்ததும், உயிருடன் வாழ்வனவுமான தமிழ் ஏடுகள் சஞ்சிகைகளைக் கடந்த சில ஆண்டுகளாகச் சேகரித்தோம். இன்றுவரை எமது கைகளில் கிடைத்துள்ள 207 பத்திரிகை சஞ்சிகைகளின் விபரம் கீழே தரப்படுகிறது. இவற்றில் கணிசமான ஏடுகளை உதவி எமது பணியை ஆரம்பித்துவைத்த இரசிகமணி கனகசெந்திநாதன் அவர்களுக்கும் எழுத்தாளர் அகஸ்தியர், தியாகமணி போன்றோருக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

எம் கைவசம் இல்லாத பழைய, புதிய தமிழ் ஏடுகளை, சஞ்சிகைகளை எமக்கு அனுப்பி எமது முயற்சிக்கு உதவுமாறு ஈழத்து இலக்கியத்துறையில் ஈடுபாடு கொண்ட நண்பர்களைப் பணிவுடன் வேண்டுகிறோம். அனுப்பவேண்டிய முகவரி: (குரும்பட்டி) இரா. கனகரத்தினம். திருமதி. பவளராணி கனகரத்தினம். (பழந்தமிழ் ஏடுகள் சேகரிப்பாளர்கள்) 49, கொழும்பு வீதி, கண்டி.

ஈழத்தில் இதுவரை வெளிவந்த — வெளிவந்துகொண்டிருக்கும் 207 தமிழ் ஏடுகளின் பெயர்களையும் அவை கடைசியாக வெளிவந்த ஆண்டையும் கீழே தருகிறோம்.

## அ

| | |
|---|---|
| அம்மா | — 1969 |
| அலை ஓசை | — 1974 |
| அமுதம் | — 1973 |
| அல்லி (பதுளை) | — 1965 |
| அல்லி (யாழ்) | — 1957 |
| அன்னை | — 1960 |
| அம்பு | — — |
| அலை | — 1957 |
| அமுதா | — — |
| அமுதசுரபி | — — |
| அறிவொளி | — 1963 |
| அபியுக்தன் | — 1976 |
| அருட்குரல் | — 1976 |
| அகிலம் | — 1975 |
| அருளொளி | — — |
| அஞ்சலி | — 1971 |

## ஆ

| | |
|---|---|
| ஆரம்பம் | — 1975 |
| ஆனந்த | — 1974 |
| ஆனந்தன் | — 1956 |
| ஆனந்த சாகரம் | — 1961 |
| ஆசிரியன் | — 1956 |
| ஆத்ம ஜோதி | — 1958 |
| ஆவிக்குரிய உணவு | — 1976 |

## இ

| | |
|---|---|
| இந்து சாதனம் | — 1977 |
| இளங்கதிர் | — 1960 |
| இளம் பிறை | — 1968 |
| இந்து தருமம் | — 1967 |
| இந்து இளைஞன் | — 1974 |
| இலங்கை இந்து | — 1975 |
| இனமுழக்கம் | — 1976 |
| இலக்கியப்புதையல் | — 1958 |
| இதயம் | — 1971 |
| இலங்கைச் சாரணன் | — 1976 |
| இராசிப் பலன் | — 1976 |

## ஈ

| | |
|---|---|
| ஈழதேவி | — 1958 |
| ஈழமணி | — 1959 |
| ஈழச் சுடர் | — 1964 |
| ஈழமணி | — 1974 |
| ஈழகேசரி | — — |

## உ

| | |
|---|---|
| உதயம் | — 1954 |
| உலக நண்பர்கள் | — 1970 |
| உலகத்தமிழர் குரல் | — 1976 |

உதய தாரகை — —
உரிமைக் குரல் — 1976

### ஊ

ஊற்று — 1976
ஊசி — 1975

### எ

எழுச்சி — 1966
எம். ஜீ. ஆர் — 1967
எழில் — 1969
எமதரசு — —
என் வேதமும் நானும் — —

### ஐ

ஐக்கிய தீபம் — —

### ஒ

ஒரு தீப் பொறி — 1973
ஒளி (யாழ்) — 1972
ஒளி — 1971

### க

கவிதா — 1976
கலகலப்பு — 1976
கமத்தொழில் — 1952
கற்பகம் — 1971
கலைமதி — 1966
கதம்பம் — 1976
கலைச் செல்வி — 1963
கதிர் — 1974
கலை வாணி (யாழ்கலை வாணிமன்றம்) — 1955
கலைவாணி (கலைவாணி அச்சகம்) — 1965
கலாநிதி — 1942
களனி — 1974
கலைப் பூங்கா — 1961
கலைக்குயில் — 1970
கல்வி — 1970
கலாவல்லி — 1976
கலசம் — 1972
கற்கண்டு — 1972
கலைக்கன் — 1974

### கா

காங்கிரஸ் — 1976
காந்தீயம் — 1976
காலரதம் — —

### கீ

கீதா — 1977

### கு

குங்குமம் — 1969
குமரன் — 1973
குயிலோசை — 1969
குமுறல் — 1976
குயில் — —

### த

தமிழ்ச் சோலை — 1954
தண்மதி — —
தமிழ் உலகம் — 1969
தமிழன் — 1969
தமிழோசை — 1959
தமிழமுது — 1972
தமிழ் இளைஞன் — 1969
தமிழ் முரசு — 1962
தமிழின்பம் — 1960
தமிழமுது (பத்திரிகை) — —
தமிழோசை (கலைஞர் பொதுப் பணி மன்றம்) — 1977

### தா

தாய் நாடு — 1967
தாயகம் — 1974

With Best Compliments

From

MALIBAN BISCUIT MANUFACTORIES LTD

*With Best Compliments*

*From*

# SEVEN SEAS (EXPORT) CEYLON LTD.

**COLOMBO.**

## தி

தினபதி — 1977
தி. மு. க — 1962
திருமகள் — 1964

## தீ

தீ — 1976

## தே

தேன் மொழி — 1955
தேசாபி மானி — 1974
தேனருவி — 1963

## தொ

தொழிலாளர் பாதை — 1976
தொண்டன் — 1968

## ம

மலையகம் — 1969
மதனன் — 1975
மல்லிகை — 1977
மத்தியதீபம் — 1959
மலைப் பொறி — 1964
மலையருவி — 1966
மணிக் கொடி — 1956
மலர் — 1970
மரகதம் — 1961
மலை மடல் — 1975
மலர் விழி — —

## மா

மாணவன் — 1969
மாலை முரசு — 1961
மாவலி — 1973
மாணவர் முரசு — 1952
மாணிக்கம் (பத்திரிகை) — 1976
மாணிக்கம் (சஞ்சிகை) — 1976

## மி

மில்க் வைற் செய்தி — 1976

## மு

முஸ்லிம் — —
முத்தமிழ் முழக்கம் — 1961
முருகு — 1960
முரசொலி — 1976

## வ

வரதர் — 1950
வர்த்தக மஞ்சரி — 1966
வழிகாட்டி — 1963
வளர்மதி — 1974
வசந்தம் — 1966

## வா

வாணி — 1974
வான வில் — 1971
வாழ்வு — 1964
வான் சுடர் — 1975
வானம் பாடி — 1960

## வி

வித்தியா சமாச்சாரப் பத்திரிகை — 1937
விடுதலை — 1973
வித்தியாதனம் — 1952
விஞ் ஞானி — 1954
விவேகானந்தன் — 1975
விவேகி — 1960

## வெ

வெண் தாமரை — 1961
வெண்ணிலா — 1958
வெற்றி மணி — 1975
வெள்ளி — 1972

## வை

வைத்தியன் — 1951

## ப

பகுத்தறிவு — 1974
பட்டாம் பூச்சி — 1976

## பா

பாடும்மீன் — 1967

## பு

புத்தொளி — 1968
புதுமை இலக்கியம் — 1961
புதுமை நெஞ்சங்கள் — 1976
புது யுகம் — 1961

## பூ

பூரணி — 1974
பூங்குன்றம் — 1971
பூமாலை — 1974
பூ — —

## பொ

பொழுது போக்கு — 1973

## போ

போஸ்ட் மார்க் — 1974
போராளி — 1976


பல்சுவை நிறைந்த கடலைவகைகட்கு
வினாயகர் கடலை

புதினப் பத்திரிகைகள்,

சாய்ப்புச் சாமான்கள்,

விளையாட்டுப் பொருள்கள்,

**எல்பின்ஸ்டன் பென்சி கவுஸ்**
**இல.337, மருதானை வீதி கொழும்பு-10**

## சுடர் கலை இலக்கிய மன்றம் (கொழும்பு) நடத்தும் சிவகுமாரன் நினைவுச்சிறுகதை, கவிதை, ஓவியப்போட்டிகள்

### விண்ணப்பப் படிவம்

முழுப்பெயர்: ..........................................................................................
முகவரி: ..........................................................................................
..........................................................................................
பால்: ..........................................................................................
பிறந்த திகதி: ..........................................................................................
ஆக்கங்களின்
விபரம்: ..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
திகதி: ....................................................

....................................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்

பதினெட்டு வயதிற்குட்பட்டவர்க்கு மட்டும்:

மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை என்றும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஆக்கம் / ங்கள் மேற்படி விண்ணப்பதாரரின் சொந்தப் படைப்பே / புகளே என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி: ....................................

....................................................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

உறுதிப்படுத்துபவரின் அலுவலக முகவரி:
....................................................
....................................................
....................................................

[ஆக்கியோர் படித்துக்கொண்டிருக்கும் பாடசாலையின் அல்லது இறுதியாகப் படித்த பாடசாலையின் அதிபர் மட்டுமே உறுதிப்படுத்துபவராக அமையலாம்]


**ஈழக்கலையுலகின் நல்வாழ்வுக்கு உழைக்கும் ஒரேயொரு நட்சத்திர வார இதழ்**

**கீதா:**

- தமிழக சினிமாச் செய்திகள்
- ஈழத்துப் படவுலகத் தகவல்கள்
- சூடான சுவையான, கேள்விபதில்

ஆசிரியர்:- தமிழ் நெஞ்சன்

**வாராவாரம் புத்தம் புதிய செய்திகளுடன் புதுமலராக வெளிவந்து மணம் பரப்புகிறது**

விபரங்களுக்கு:

மானேஜர் கீதா, கீதா மஹால்,
79, சென். ஜோசப் வீதி, கிராண்பாஸ், கொழும்பு-14.

ச

சன் மார்க்க தீபம் — 1975
சங்கமம் — 1974
சந்திரோதயம் — —
சமூகத் தொண்டன் — 1957
சங்கம் — 1968
சத்திய வேத
பாது காவலன் — 1975

சா

சாட்டை — 1970

சி

சிறுவர் சுடர் — —
சிலம் பொலி — 1971
சிந்தாமணி — 1974
சிவ தொண்டன் — 1964
சிரித்திரன் — 1976
சிந்தனை — 1967
சித்ரா — 1976

சு

சுதந்திரன் (வாரம் இருமுறை)
— 1977
சுடர் (சுதந்திரன்
வெளியீடு) — 1977
சுடர் (சிறுவர் இதழ்) — 1955
சுந்தரி — 1974
சுவதரும போதம் — 1947
சுமதி — 1676

செ

செய்தி — 1976
செங்கதிர் — 1971
செந்தாமரை — 1965

சை

சைவத் தொண்டன் — —
சைவ நீதி — 1973

ந

நல்லை நாவலன் — 1970
நவஜீவன் — 1949
நதி — 1976
நம் தேசம் — 1976
நம் நாடு — 1974

நா

நான் — 1976
நாவேந்தன் — 1969

நீ

நீதி முரசு — 1970

நு

நுட்பம் — 1974

நோ

நோக்கு — 1964

ல

லட்டு — 1956
லதா — 1976

ஜ

ஜன வேகம் — 1976
ஜயந்தி — 1955

ஜோ

ஜோதிடஇதழ் — 1976
ஜோதிடம் — 1964

ரோ

ரோஜாப்பூ — 1970

யோ

யோகி — 1969

ஞா

ஞானதீபம் (ஆசிரியர்
சூசைதாசன்) — —
ஞானதீபம் (அகில பிராமண
சேவாசங்கம்) — 1965

● குறிப்பு; இன்று வெளி வந்துகொண்டிருக்கும் முக்கிய தமிழ் நாளேடுகள் இப்பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.


**படியுங்கள்**

மேற்கு நாடுகளிலிருந்து வெளிவரும்
ஒரேயொரு தமிழ் மாத சஞ்சிகை

# லண்டன் முரசு

விபரங்களுக்கு:—
**லண்டன் முரசு**
லண்டன் பிரசுராலயம்
*8, ASHEN GROVE*
*LONDON (S. W. 19)*
*U. K.*

mws
மில்க்வைற்

'ஆதரவு பெருகுதல் அறப்பணிக்கே உதவும்'

## உடம்புத் தூய்மைக்கு :

நீம் வாசனை சோப்
மெடிக்கேட்டட் சோப்
எண்ணெய் முழுக்குக்கு
ஒலிவ் ஸ்நானப் பவுடர்

## உடைத் தூய்மைக்கு :

மில்க்வைற் நீலசோப், நியூமில்க்வைற் சோப்
மில்க்வைற் பார்சோப், மில்க்வைற் சலவைப்பவுடர்.

## உறைவிடத் தூய்மைக்கு :

நீம் சுகாதார தூபம், இதைத் தணலில் இட்டுப் புகைத்தால்
ஈ, கொசுகு, நுளம்பு, சிலந்தி ஆகியன அணுகா.

## விவசாயத் தேவைக்கு :

நீமா ரெக்ஸ் (நீரில் கரைத்துத் தெளிப்பது)
நீமியா (பசளையாகப் பாவிப்பது)

கிளை:

79, மெசன்சர் வீதி,
கொழும்பு-12.
தொலைபேசி: 36063

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 7233




இப்பத்திரிகை 194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12ல் உள்ள சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டாரால் அதே முகவரியிலுள்ள சுதந்திரன் அச்சகத்தில் அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது